மல்லிகை

ஆசிரியர் : டொமினிக் ஜீவா

ஏப்பிரல் 1976

விலை சதம் 75



டாக்டர் S. A. விக்கிரமசிங்கா அவர்களின்
75வது வயது கொண்டாட்ட இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனிதையர் விரும்பும் வகைவகையான
பிடவைத் தினிசுகள் கூறைச்சேலை வகைகள்

ஆடவர் விரும்பும் அழகிய
சேட்டிங், சூட்டிங் வகைகள்

குழந்தைகளுக்கான
றெடிமேட் உடைகள்

மற்றும்
அழகுசாதனப் பொருட்கள்

● பிடவைத் தினிசுகள் எதுவானாலும் யாவும் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

தொலைபேசி: 7545

"மணியம்ஸ்" ● 16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

பைனல் ரேணிங் வேக்ஸ்

103, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: M. S. மூர்த்த & பிரதர்

தொலைபேசி: 7140

சகலவிதமான கடைச்சல், புரி வெட்டுதல் வேலைகளுக்கும், மோட்டார் வாகனங்களின் உப உறுப்புக்கள் சீர்திருத்துவதற்கும், லொறி கௌசிங் துண்டு போடுவதற்கும், டிராக்டர்களின் பகுதிகளைச் சீரமைப்பதற்கும் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

இவை ஸ்தாபனம்:

M. S. R. HARDWARE STORES

310, CLOCK TOWER ROAD,
JAFFNA.

மல்லிகை

ஏப்பிரல் 1976 96

MALLIKAI

Editor: Dominic Jeeva
234A, K. K. S. Road,
JAFFNA.
(Sri Lanka)

மனைக்கும் 'மல்லிகை' கதை, பெயர், கவிதை, கட்டுரை, கருத்து, எல்லாம் ஆக்கியோர் தனித்துவம் பொறுப்பும் அவரே

முகவரி:
ஆசிரியர் டொமினிக் ஜீவா
234-A கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்
(இலங்கை)

ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினைய கலைகளில் - உள்ளம்
சூடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
சனதில் கண்டு துள்ளுவார்,

பன்னிரண்டாவது ஆண்டு மலரின் தயாரிப்பு வேலைகளை நாம் ஆரம்பித்து விட்டோம்.

இடையில் இருப்பது இன்னும் மூன்று மாதங்களே; இந்த முறை தயாரிக்கப்படும் ஆண்டு மலர் உள்ளடக்கத்தில் மிகச் சிறப்பாகவும் வெளியமைப்பில் மென்மை நிரம்பிய கவர்ச்சி கொண்டதாகவும் மலர் அமைய வேண்டும் எனப் பெரிதும் விரும்புகின்றோம்.

சென்ற 11 வது ஆண்டு மலரைப் பற்றி இலக்கிய நண்பர்களும் ஆர்வலர்களும் கட்டிய காட்டியிருந்த குறைபாடுகள், தவறுகள் திருத்தப்பட்டு, மலர் கூடியவரை ஓர் ஆக்கபூர்வமான இலக்கிய முயற்சியாகவே வெளிக் கொணர ஆவன செய்து வேலைத் திட்டம் அமைத்துச் செயல்பட்டு வருகின்றோம்.

சகல எழுத்தாள நண்பர்களினது ஒத்துழைப்பும் ஒத்தாசையும் எமக்குத் தேவை. காலத்துக்காகக் காத்திராமல் இப்பொழுதே உங்களுடன் தொடர்பு கொள்ள விரும்புகின்றோம்.

ஆண்டுக்கு ஆண்டு வெளிவரும் ஆண்டு மலர் பற்றிப் பலர் பாராட்டி வருவதையும் சேமித்து வைப்பதிலும் ஆர்வமும் உற்சாகமும் காட்டி வருவதையும் நாம் அறிவோம்.

எனவேதான் பிரப் பொறுப்புணர்ச்சியுடனும் வெகு நிதானத்துடனும் இந்தப் 12 வது ஆண்டு மலரைத் தயாரிக்க ஆவல் கொண்டுள்ளோம்.

இம் முறை தயாராகும் ஆண்டு மலர் மல்லிகை வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெற வேண்டும் என்ற மன ஆசை நமக்கு நிறைய உண்டு.

இந்த முன்னறிவித்தலே இப்போதைக்குப் போதுமானது.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை

பன்முகத் தன்மை வாய்ந்த வரலாற்று நாயகன்!

எழுபத்தைந்து வயது என நம்பவே முடியவில்லை. ஆனால் உண்மை அது. இந்த நாட்டின் வளர்ச்சியில் — முன்னேற்றப் திசைவழியில் — சரியாக வழி நடத்திச் செல்வதற்குத் தனது வாழ்வுக் கட்டம் சகலவற்றையும் அர்ப்பணித்து இயக்கம் நடத்திய போராளி டாக்டர் விக்கிரமசிங்கா. அவர் ஆற்றியுள்ள பங்குப்பணி சும்மா இலேசுப்பட்டதல்ல. பெறுமதி மிக்கது; தகைமை வாய்ந்தது. அரசியல் எதிரிகளும் இதற்காகவே மதிக்கின்றனர்.

குழந்தைச் சிரிப்பு; பதட்டப்படாத மனம்; நெருக்கடிகளைக் கண்டு உணர்ச்சி வசப்படாத நெஞ்சம்; எதிர்காலத்தைப் பற்றிய தீர்க்க திருஷ்டியுடன் சிந்தித்துச் செயலாற்றும் ஆற்றல் மிக்க சக்தி; தோழர்களைப் புரிந்து கொண்டு இயைந்து நடக்கும் பெரும் பண்பு இத்தனையும் வாய்க்கப் பெற்ற தேசியத் தலைவன் ஒருவர் உண்டென்றால் அது நிச்சயம் டாக்டராகத்தான் இருப்பார். இருக்க முடியும்!

சட்டசபையில் சோஷலிஸம் என்றொரு குரல் எப்போவோ ஒலித்தது. முதன் முதலில் ஒலித்த குரல் இது. பிரிட்டிஷ் ஏகாபோக ஆட்சிக் காலத்தில் இப்படி ஒரு குரல் ஒலிப்பதே ஒரு சாதனை. அந்தக் குரலுக்குரியவர் தோழர் எஸ். ஏ. அவர்கள்.

1952-ல் மகாவலியை வட முகம் திருப்பு என ஒரு தொடர் குரல் நாடு பூராவும் எதிரொலித்தது. பலர் கிண்டல் பண்ணியதுமுண்டு. அது சாதனையாக்கப்பட முடியும் என்பதை இன்று கண் முன்னால் காணுகின்றனர், மக்கள்.

டாக்டர் எஸ். ஏ. அவர்களுக்கு கிடைக்கக் கூடிய தகுதியான புகழ் இன்னமும் கிடைக்கவில்லை என ஒரு சாரார் குறைப்படுவதுமுண்டு. அது தவறு. இப்படியானவர்கள் புகழ். செல்வாக்கு, பிரபலம் அத்தனைக்கும் அப்பாற்பட்டவர்கள். ஏனெனில் புகழ், செல்வாக்கு வளர வேண்டுமென்பதற்காக இவர்கள் செயல்படுவதில்லை. காலம் போகப் போகத்தான் இவர்களுடைய பெருமை புரியும். இந்த மகத்தான மாமனிதர்களின் பெறுமதி விளங்கும்.

என்று அரசியலில் காலடி வைத்தாரோ அன்றிலிருந்து மக்களுக்காகவே உழைத்து வரும் தோழர் விக்கிரமசிங்கா என்றும் மக்களுக்குரியவராகவே விளங்கி வருவார் என்பது திண்ணம்.

நாடு உள்ளவரை இவரது நாமம் வாழ்ந்துவரும்!

அ. வயித்திலிங்கம்

இந்தச் சிங்கள — தமிழ் புத்தாண்டுப் பிறப்பன்று தோழர் விக்கிரமசிங்காவுக்கு 75 வயது பூர்த்தியாகிறது. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தனது 32 வது ஆண்டை நெருங்குகிறது. சகல விதமான சுரண்டல்களிலிருந்தும் மனித குலத்தை மீட்கும் பணியில் அவரின் வாழ்வில் ஐம்பது ஆண்டுகள் கழிந்து விட்டன. நாங்களிருவரும் இலங்கையர்களாக இருந்தபோதிலும் அன்னரை 1937-ம் ஆண்டுதான் முதன் முதலில் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இலங்கை அக்காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனித்துவ நாடாக இருந்தது. நாங்களிருவரும் முதன் முதலில் லண்டன் நகரத்தில் சந்தித்ததற்கான காரணத்தை இது விளக்கும். அவர் சொந்தக் காரணங்களுக்காக அங்கு வந்திருந்தார். நான் மேற்படிப்புக்காக அங்கு சென்றிருந்தேன். மார்க்சிசம்—லெனினீசத்தின் மீது எமக்கிருந்த நம்பிக்கையும் பற்றுறுதியும் எம் இருவரையும் இணைத்து வைத்தன.

அக்காலத்திலிருந்து எமது நட்புறவும் பரஸ்பர நல்லெண்ணமும் வளர்ந்தன. எளிமையும், மக்களின் மீது திடமான பற்றும், மக்களைச் சரியான முறையில் எடை போடுதலும், பிரச்சினைகளை ஆராய்தலும், அரசியல் நிலைமைகளைப் புரிந்து கொள்ளுதலும், இளம் ஊழியர்களைப் பயிற்றுவித்தலும் வழிகாட்டலும் ஆகிய விஷயங்களில் அவரிடமிருந்து கற்றுக் கொண்டேன். அனைவரும் எந்நேரமும் சந்திக்கக் கூடிய நிலை, சகல பிரச்சினைகளிலும் நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் தெளிவாக தீர்மானம் எடுக்கக்கூடிய நிலை ஆகிய உயர் குணங்கள் அவரிடமுண்டு. எனவே அனைவரும் அவரை மதிக்கிறார்கள், நேசிக்கின்றார்கள்.

வைத்திய கலாநிதியாகத் தேர்ச்சியுற்ற பின் மேற்படிப்பிற்காக இங்கிலாந்திற்குச் சென்றார். 1929-ம் ஆண்டு இலங்கைக்குத் திரும்பி சில காலம் அரசாங்க சேவையில் கடமையாற்றினார். இக்காலத்தில் யாழ்ப்பாணத்து டாக்டர் சுப்பிரமணியத்தின் (பி. எஸ்) கீழ் கடமையாற்றினர். 20-ம் ஆண்டுகளின் இறுதியில் ஏகாதிபத்தியத்தின் கெடுபிடிகளினாலும், சாதாரண மக்களுக்காக உழைக்க வேண்டும் என்ற தணியாத தாகத்தாலும் அவர் அரசாங்க சேவையிலிருந்து விலகினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே காலகட்டத்தில்தான் டாக்டர் என். எம். பெரேரா, பிலிப் குணவர்தன, லெஸ்லி குணவர்தன போன்றோர் அரசியல் அரங்கில் பிரவேசித்தார்கள்.

1931-ம் ஆண்டில் டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் முதலாவது அரசாங்க சபைக்கான பொதுத் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் மொரவாக்கத் தொகுதியில் அவர் வெற்றியீட்டினார். அக்காலத்தில் அரசாங்க சபையில் அவரின் குரல் மாத்திரமே இடதுசாரிக் குரலாக ஒலித்தது. அக்காலத்தில் ஏகாதிபத்தியத்தோடு இணைந்து செயலாற்றிய சேர். டொன் பாரன் ஜெயத்திலக்க, டி. எஸ். சேனநாயக்கா போன்றவர்களை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. அவர் அரசாங்க சபையில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் இவ்வலதுசாரித் தலைவர்கள் வெறுத்தார்கள். இக் காரணங்களினால் 1936-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவரைத தோற்கடிப்பதற்குச் சதி செய்தார்கள்.

பல்லாண்டுகளாக நடைபெற்ற அந்நியச் சுரண்டல் எமது நாட்டு மக்களின் ஆரோக்கியத்தைக் குன்றச் செய்தது. 1935 — 36-ம் ஆண்டுகளில் ஒரு லட்சம் மக்கள் மலேரியா கொள்ளை நோய்க்குப் பலியானார்கள். தோழர் டாக்டர் விக்கிரமசிங்க மற்றவர்களோடு சேர்ந்து மலேரியா எதிர்ப்பு நிவாரண வேலைகள் மேற்கொண்டார். இப்பணிகள் மக்களோடு நெருங்கிப் பழகுவதற்கும், மக்களின் பிரச்சினைகளைத் தெரிந்து கொள்வதற்கும் உதவியது. முதன் முதலாக ஸ்தாபனரீதியாக இந் நாட்டின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரலாக சூரியமலர் இயக்கம் இக் காலத்தில்தான் உதயமாகியது. இதன் மூலமாக இத் தோழர்களினால் 1935-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் லங்கா சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் நான் இலங்கைப் பல்கலைக் கல்லூரியில் மாணவனாக இருந்தேன்.

அடுத்து வந்த பொதுத் தேர்தலில் டாக்டர் என். எம். மும் பிலிப்பும் அரசாங்க சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர். துரதிர்ஷ்ட வசமாக தோழர் டாக்டரும், லெஸ்லி குணவர்தனவும் வெற்றிபெற முடியவில்லை.

1936 — 38 ம் ஆண்டுகளில் தோழர் டாக்டர் இங்கிலாந்தில் இருக்கும்போது கம்யூனிஸ்ட் இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். ஜெர்மனியில் ஹிட்லரின் பாசிசம் வெற்றியீட்டியதன் பின், மக்கள் முன்னணியின் வெகுஜனப் போராட்டங்கள் பிரான்சில் நடைபெற்ற காலத்தில்தான், ஸ்பெயின் குடியரசு உதயமாகிய காலகட்டத்தில்தான் கம்யூனிஸ்ட் அகில 7-வது மகாநாடு நடைபெற்றது. இம் மகாநாடுதான் முதலாளித்துவ நாடுகளில் மக்கள் முன்னணிகளும், கலோனியல் அரைக் கலோனியல் நாடுகளில் தேசிய முன்னணிகளும் அமைக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை முன் வைத்தது.

ஆனால், இக் கொள்கையின் சிறப்பை சில இடதுசாரிகள் சந்தேகித்தனர். ட்ரொஸ்கி இக் கொள்கையை எதிர்த்தார். சில சமசமாஜத் தலைவர்கள் ட்ரொஸ்கியக் கொள்கைகளை ஏற்றனர். ஆனால் கம்யூனிஸ்ட் அகிலத்தின் கொள்கை எவ்வளவு சரியானதும் சிறப்பானதும் என்பதை

சரித்திரம் நிரூபித்துள்ளது. தோழர் டாக்டர் இக் கொள்கையில் உறுதியாக இருந்தார். இலங்கையில் கம்யூனிஸ்ட்டுகளையும் உண்மையான இடதுசாரிகளையும் இணைக்கும் சக்தியாக தோழர் டாக்டர் விளங்கினார்.

அவர் இலங்கையில் இல்லாத காலத்தை ட்ரொஸ்கியத் தலைவர்கள் தமது நிலைமையைப் பலப்படுத்துவதற்கும், சோவியத் எதிர்ப்பு, கம்யூனிஸ்ட் எதிர்ப்பு வேலைகளுக்காகவும் பயன்படுத்திக் கொண்டனர். ஆயினும் சமசமாஜக் கட்சி ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோஷத்தை முன் வைத்ததோடு சுதந்திரத்துக்கான கோரிக்கையையும் முன்வைத்தது.

சமசமாஜிகளின் ஒருமுனை வாதப்போக்காலும், ட்ரொஸ்கியத் திரிபுகளினாலும் செயற்குழு தோழர்கள் டாக்டர், எம். ஜி. மெண்டிஸ், ஆரியரத்ன, குணசேகர ஆகியோரை 1940 ம் ஆண்டு ஆரம்பத்தில் கட்சியிலிருந்து வெளியேற்றியது.

இக்காலத்திலிருந்து உண்மையான கம்யூனிஸ்டுகள் அனைவரையும் ஒன்றுதிரட்டி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். தோழர் டாக்டரின் வாழ்வும் பணியும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றோடும் வெற்றி தோல்விகளோடும் இணைந்துள்ளன.

1941-ல் யுத்தத்திற் கெதிரான கட்டுரைகளை 'ஜனசக்தி' யில் பிரசுரித்ததற்காக தோழர் டாக்டருக்கு ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதன் பின்னும் 3 வாரச் சிறை வாசத்தை அவர் அனுபவித்தார்.

சோல்பரி அரசியல் சட்டத்தில் 13 (எஃப்) பிரிவு, தோழர் டாக்டர் போன்றோர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்ப்பதற்காக விசேஷமாகச் சேர்க்கப்பட்டது. இதன் காரணமாக 1947—51-ம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் தோழர் டாக்டரால் போட்டியிட முடியவில்லை.

இவ்விதமான தடைகளால் விசேஷமாக தென்மாகாணத்தில் மக்கள் மத்தியில் அவருக்கிருந்த செல்வாக்கைக் குறைக்க முடியவில்லை. பின்வரும் விபரங்கள் இதைத் தெளிவுபடுத்துகின்றன:

1937-ல் இரண்டாவது அரசாங்க சபைக்கான உப தேர்தலில் மொரவாக்கத் தொகுதியில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்டவரின் கட்டுப்பணத்தை தோழர் டாக்டர் இழக்க வைத்து பெருந்தொகையான அதிகப்படியான வாக்குகளினால் வெற்றிபெற்றார்.

1947-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தென் மாகாணத்தில் கம்யூனிஸ்ட் அபேட்சகர்கள் அக்குரஸ்ஸ, மாத்தறை, ஹக்மன, ஹம்பந்தொட்டை ஆகிய தொகுதிகளில் வெற்றி ஈட்டினர்.

1952 பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட் அபேட்சகர்கள் மாத்தறை, கம்புருப்பிட்டி, அக்குரஸ்ஸ ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றனர்.

1956 பொதுத் தேர்தலில் மாத்தறை, அக்குரஸ்ஸ ஆகிய தொகுதிகளில் கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள் வெற்றிவாகை சூடினர். கம்யூனிஸ்டாக வெற்றியீட்டிய மகாஜன சமரவீர பின்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட் அபேட்சகர்கள் கம்புருப்பிட்டி, அக்குரஸ்ஸ ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றனர்.

1965 பொதுத் தேர்தலில் அக்குரஸ்ஸ, மாத்தறை, கம்புருப்பிட்டி ஆகிய தொகுதிகளில் கம்யூனிஸ்ட் அபேட்சகர்கள் வெற்றியீட்டினர்.

1970 பொதுத் தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் அக்குரஸ்ஸ, மாத்தறை, கம்புருப்பிட்டி ஆகிய தொகுதிகளிலும், காலி மாவட்டத்தில் ரத்கமைத் தொகுதியிலும் கம்யூனிஸ்ட் அபேட்சகர்கள் வெற்றியீட்டினர்.

எமது கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற மகாநாடுகள் மாத்தறையில் நடைபெற்றன. எமது கட்சியின் 4-வது மகாநாடுதான் சகல ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளும் ஐக்கிய முற வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்தது. 1968-ல் ஸ்ரீலங்கா — சமசமாஜ — கம்யூனிஸ்ட் கட்சிகளை அடித்தளமாகக் கொண்ட ஐக்கிய முன்னணியின் மூலம் இக் கொள்கை நிறைவேற்றப்பட்டது.

மார்த்தறையில் நடைபெற்ற இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 9 வது மகாநாடு கட்சியை மீண்டும் ஐக்கியப் படுத்திய தோடு சிறுபான்மையினரின் பிரச்சினை உட்பட சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணக்கூடிய ஒரு வேலைத் திட்டத்தை முன் வைத்தது.

தோழர் டாக்டரின் வாழ்க்கை வாலாறு கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றம், வளர்ச்சி, பணிகள் ஆகியவற்றோடு இணைந்து பிணைந்ததாகும், இந்நாட்டு சோஷலிசத்தின் பிதாமகன் என்று தோழர் டாக்டர் எஸ். ஏ: விக்கிரமசிங்க அழைக்கப்படுவது நியாயமானதாகும். அன்னாரின் முழு வாழ்வும் மார்க்சிசம்— லெனினிசம். பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆகியவற்றில் அசைக்க முடியாத நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டதாகும். ★

தோழர் விக்கிரமசிங்காவின் 75 — வது பிறந்ததினக் கொண்டாட்டப் பொதுக்கூட்டம்

25-4-76 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா அவர்களினது 75-வது பிறந்தநாள் விழா பொதுமக்கள் விழாவாக நடைபெறும்.

தோழர் பீட்டர் கெனமன் முக்கிய பேச்சாளராகக் கலந்து கொள்கின்றார்

முற்போக்கு இதயம் கொண்ட, நல்லெண்ணம் படைத்த, தோழமையைக் கௌரவிக்கின்ற சகலரையும் இவ் விழாவில் கலந்து கொள்ள அழைக்கின்றோம்.

விழாக் குழுவினர்

தறிகெட்டுப் போகாமல் வழிநடத்தும் தலைமை மாலுமி

வ. பொன்னம்பலம்

ஸ்கந்தாவில் எனது பள்ளிப் படிப்பைத் தொடர்ந்த காலம், 1947-ம் ஆண்டு வரை தோழர் விக்கிரமசிங்க பற்றி கம்யூனிஸ்ட் கட்சியின் வார ஏடு மூலம் வாசித்தறிந்துகொண்டேன். அவரது 50-வது ஆண்டு விழாவின் போது இடம் பெற்ற வைபவங்கள், கொண்டாட்ட நிகழ்ச்சிகள் பற்றியும் சில ஆண்டுகள் கழித்து பத்திரிகை மூலம் படித்தேன். இத்தகைய ஓர் தலைவர் இலங்கையின் முதுபெரும் அரசியல் ஞானியாவார். இவர் இலங்கை அரசியலிற் பிரவேசித்து 50 ஆண்டுகள் ஆகிவிட்டன. தான் ஏற்ற கம்யூனிசித்தாந்தத்தை அசையாத நம்பிக்கையுடன் இந்த அரை நூற்றாண்டு காலமாகப் பின்பற்றி வந்துள்ளார். இன்று நாடு அவரது 75-வது தினத்தைக் கொண்டாட முற்படுகிறது. பிறந்த தினங்கட்கு வாழ்த்துச் சொல்லும் நிகழ்ச்சி வானெலியின் நாளாந்த நிகழ்ச்சியாகிவிட்டது. நாமே கொண்டாடுகின்ற பிறந்த தினத்தைவிட பிறர் சேர்ந்து கொண்டாடக் கூடிய உயரிய வாழ்வை வாழ்பவன்தான் 'புகழோடு' தோன்றுகிறான். மருத்துவத்துறை கலாநிதி அரசியல் மேதையாகத் திகழ்வது பெரும் அபூர்வம். எனினும் நோய்க்கு மருந்து கண்டு சொல்லக்கூடிய ஆற்றல் நிறைந்தவர்கள் மருத்துவரே. எனவேதான் வைத்திய கலாநிதி மனித வர்க்கத்தின் நோய் நாடி அதைத் தீர்க்கும் சமதர்ம செம்மலாக மிளிர்கிறார் போலும். 1953-ம் ஆண்டு வல்வெட்டித்துறைக் கடற்கரையில் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் 'மனிதனை மனிதன் சுரண்டும் முறையை இன, மத, மொழி, சமூகப் பொருளாதாரத் துறைகளில் எதிலிருந்தாலும் ஒழித்து கட்டுவதே விஞ்ஞான ரீதியான சோஷலிசத்தின் அடிப்படை நோக்கமாகும்' என்று விளக்கினார், டாக்டர் எஸ். ஏ.

அவரைக் காண்போர் பழகுவோர் மனதில் இடம் பிடித்துக் கொள்ளக் கூடிய அறிவும் நிதானமும் அமைதியும் ஒருங்கே உருவெடுத்த பெரும் பண்பாளர்.

இவருடைய உரைகள் பலவற்றை பல ஆண்டு காலமாக மொழியாக்கம் செய்யும் பேறு கிட்டியவர்களில் நானும் ஒருவன். அத்தகைய சந்தர்ப்பங்களிலெல்லாம் அவருடைய ஆழ்ந்த அறிவும் அளவற்ற தேசபக்தியும் தென்படும். அரசியல் விமர்சனங்கள் ஓர் பல்கலைக்கழக பேராசிரியரின் இயல்பு கொண்டதாக அமையும். ஆத்திரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுப் பேசும்போது கூட தரம் குறைந்த மனித தர்மத்துக்கப் பாற்பட்ட வார்த்தைப் பிரயோகங்களைச் சந்திக்கவே முடியாது. மக்கள் வாழ்விற்கும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் இடையேயுள்ள நெருங்கிய உறவுகளை அவரின் நீண்ட நாடாளுமன்ற சொற்பெருக்குகள் நினைவுபடுத்தும். பேசத் தொடங்கிய தலைப்பில் இருந்து மெதுவாக விலகி பெருகியோடும் ஆற்றுப் படுக்கைகளின் வழி செல்லும். ஆறுகள், நதித் திட்டங்கள், மின்சார அபிவிருத்திகள், நகர நிர்மாணங்கள், கல்வி, தொழில் வளம் தொடர்ந்து பெருகிப் பாயும். பேச்சு ஓர் அறிவுக் கடலாக அமையும். பொதுவுடமை என்பது வாழும் சித்தாந்தம், வளரும் சித்தாந்தம். போரிடும் உலகின் விடுதலை நாடும் மக்களின் ஈட்டி முனை என்றெல்லாம் தோன்றும்படி தத்ரூபமான உதாரணங்களைத் தந்து கோட்பாட்டைக் கவர்ந்து நிற்கக்கூடியதென அறிவுரைகளை அள்ளி வழங்குவார். அவரின் அரசியல் வாழ்நாள் முழுவதும் சோஷலிச தர்மத்தின் மேம்பாடு பற்றி சிந்தித்துப் பேசி, எழுதி, அதன்படி வாழ்ந்து வந்துள்ளார்.

'விக்ஸ்' என்று அன்புடன் அழைக்கப்படும் எம் தலைவர் பாட்டாளிகள் மத்தியிலும் சரி படிப்பாளிகள் மத்தியிலும் சரி பண்பும் அன்பும் மிளிரப் பழகக் கூடியவர். இவர் ஆற்றிய சர்வதேச மற்நாட்டு உரைகள், தேசிய ஆய்வுரைகள் அல்லது கலந்து கொண்ட கருத்தரங்குகள் அனைத்திலும் சுடர்விடும் தேசபக்தியையும் குழந்தை உள்ளத்தையும், அனைத்துலக உழைப்பாளிகளின் ஒருமைப் பாட்டையும், மார்க்சிச லெனினிசத்தில் இவருக்குள்ள அசையாத நம்பிக்கையும் உணர்த்துவதாகவே அமைகிறது. தமிழ் பேசும் மக்களின் இன, மொழி, மத, கலாசாரங்களைக் கௌரவித்து நடப்பதுடன் உரிமைகளை அங்கீகரித்தாக வேண்டும் என்ற அசையாத நம்பிக்கை அவரின் உள்ளத்தில் பிரகாசிக்கும். சமூகக் கொடுமைகள் போன்ற ஏற்றத் தாழ்வுகளைச் சாடும் செம்மல் இவர்.

தேசிய அரசியலில் வாழ்வை இடதுசாரியாக ஆரம்பித்த இவர், சர்வதேசிய, தேசிய நெருக்கடிகள் பல பெரும் புயலாக வீசிய பொழுதிலும் சோவியத் யூனியனின் முன்னுதாரணத்தையும் உலகப் புரட்சி இயக்கத்தின் ஈட்டி முனையாக விளங்கும் சோவியத் கம்யூ. கட்சியின் வழி நடத்தலை ஏற்று அன்றும் இன்றும் செயற்பட்டு வருபவர். அரசியலில் சொந்தக் குரோதங்களுக்கு இடந்தராமல் தேசிய நலன் கருதி சரியான முடிவுகளை அவ்வப்போது எடுக்க இவர் பின் நிற்பதில்லை. விடுதலைக்குப் பின் நாட்டின் சுதந்திரத்தை மேலும் விரிவடையச் செய்ய ஏகாதிபத்திய எதிர்ப்பு நோக்கங்களை முற்றுப் பெறச் செய்ய பின்தங்கிய நிலையில் இருந்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்க, ஏகாதிபத்திய எதிர்ப்பு முற்போக்கு முன்னணி அமைத்துப் போராடுதல் என்ற பெரு நோக்கத்தை கட்சியின் சார்பில் முன் வைத்து அரசியல் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் நாட்டை முன் எடுத்துச் செல்ல இலங்கை கம்யூ. கட்சி காட்டிய பாதையின் தலைமை மாலுமி, இவர்.

இந்த மொத்த உருவத்தையும் கூட்டிப் பாருங்கள் இவரே நமது 'விக்ஸ்' ★

மக்கள் தலைவர்

டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா

பேட்டி கண்டவர்

முருகபூபதி

ஒவ்வொரு வருடத்திலும் சித்திரைமாதம் 13-ம் திகதி என்றால் — அது இந்நாட்டின் இரு பெரும்பான்மை இனங்களின் மகிழ்ச்சிகரமான நாள். புதுவருடம்! புத்தாடை புனைந்து புதுப் பொலிவுடன் கொண்டாடும் அப் பொன்னான நாளில் — எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்பு அதாவது 1901-ம் ஆண்டில் தென்னிலங்கையில் பிறந்தார் — வருங்காலத்தில் பல்லாயிரக்கணக்கான நெஞ்சங்களில் வாழும் தோழர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா அவர்கள்.

புத்தாண்டில் பிறந்து புதுயுகம் படைக்க முன்வந்த பொதுவுடமைவாதி விக்கிரமசிங்கா — தம் வாழ்நாளில் பெரும்பாலான காலத்தை — ஏன் முழுநேரத் தொண்டன் என்றே கூறலாம்; இந்நாட்டின் தொழிலாள, விவசாய பாட்டாளி மக்களது நலனுக்காகவும், விடிவுக்காகவும் தம்மை அர்ப்பணித்து 75 வருடங்களைத் தம் ஆயுளில் பூர்த்தி செய்யும் மாண்புமிகு தோழரது புன்னகை தவழும் இனிய முகம் என்னை வரவேற்கிறது.

'மல்லிகை'க்கு ஒரு பேட்டி.

தோழர் சிங்கநாயகத்திடம் ஏற்கனவே இதுபற்றி சொல்லி வைத்திருந்தேன். 'டாக்டரைச் சந்திக்க வேண்டும், மல்லிகைக்கு ஒரு பேட்டி தயாரிக்க வேண்டும்' என்று. டாக்டர் மறுக்காமல் நாளும், நேரமும் குறித்து வரவழைத்தார் என்னை.

1915-ல் இந்நாட்டில் நிகழ்ந்த கலவரங்களின்போது இங்கிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளது மிலேச்சத்தனமான கொடுமைகளை நேரில் கண்டு மனம் நொந்த 14 வயதே ஆகியிருந்த சிறுவன் — 1926-ல் இங்கிலாந்தில் பொதுவுடமைக் கட்சியில் சேர்ந்து ஏகாதிபத்தியத்தின் தீவிர எதிர்ப்பாளனாக விளங்கிய முற்போக்குவாதி. 1926-ல் லண்டனில் திருவாளர்கள் என். எம். பெரேரா, கொல்வின், லெஸ்லி, பிலிப் குணவர்தனா ஆகியோரோடு தோளோடு தோள் நின்று கம்யூனிசத்திற்கு ஆதரவாக இலங்கை மாணவர் சங்கம் அமைத்த தோழர். 1928-ல் மருத்துவத்தில் பல பட்டங்களைப் பெற்ற மேதை.

1931-ம் முதன் முதலாக இலங்கை சட்டசபைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை பிரமிக்கச் செய்த மக்கள் தொண்டன். 1940-ல் தான் சார்ந்து நின்ற கொள்கைகளுக்காக சிறைவாசம் அனுபவித்த சமூக ஊழியன். இன்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினது மதிப்புமிக்க தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர், டாக்டர் விக்கிரமசிங்கா அவர்களது வீட்டிற்குச் செல்கிறேன்.

என்னை அழைத்துச் சென்று அமரவைத்த டாக்டரை, அந்த மூக்குக் கண்ணுடிக்கூடாக ஒளிரும் நீட்சண்யம் படைத்த கண்களை, அப்புன்னகை நெளியும் இதழ்களைக் கண்டதும் ஒரு மகத்தான சக்திக்கு முன்பு நிற்கிறோம் என்ற பயவுணர்வே ஓடிப்போய் விடுகிறது.

'ஓ..! இந்தப் புன்னகைதான் பல்லாயிரக் கணக்கான நெஞ்சங்களை, தோழர்களை, தொண்டர்களை, மக்கள் செல்வாக்கை முற்போக்கு இயக்கத்திற்கு பெற்றுத்தந்ததோ.....?' நான் பிரமிப்போடு அவரைப் பார்த்து வந்த விசயத்தைக் கூறுகிறேன்.

'ஆரம்பிக்கலாமே.....' என்றார் அவர்.

'மல்லிகை' பற்றியும் அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவா பற்றியும், ஈழத்து இலக்கியம் சம்பந்தமாகவும் என் கருத்துக்களை முன் வைக்கிறேன். கவனத்தோடு கேட்கிறார்.

'இனி நீங்கள் ஏதாவது சொல்லுங்கள்...' இது நான். பலதும் பத்தும் பேசுகிறோம். ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் உரையாடல் தொடர்கிறது.

தென்னிலங்கையில் ஆரம்பித்து எங்கெல்லாமோ போய்வந்து இறுதியில் நான் வந்ததன் நோக்கம் செயல்பாடாகிறது. பேட்டி ஆரம்பிக்கிறது.

கே. இலங்கையில் மிகச்சிறந்த தமிழ் எழுத்தாளர்களாகத் திகழும் பலர் கம்யூனிஸ்ட்டுகளாக இருக்கிறார்களே..... இது பற்றி என்ன கருதுகிறீர்கள்?

ப. 1929-ல் இலங்கையில் இடதுசாரி இயக்கங்கள் தோன்றிய காலம். அக்காலத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் இலங்கைக்கு, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் தொழிலாளர்கள் இங்குறப்பர், தேயிலைத் தோட்டங்களில் வேலை பார்த்தனர். அத்தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்பைச் சுரண்டி வாழ்ந்த அந்நியக் சுரண்டி வாழ்ந்த அந்நியக் சும்பனிகளது மிலேச்சத்தனமான செயல்களை கண்டு இடதுசாரிகள் போர்க்குரல் எழுப்பினர். அத் தோட்டத் தொழிலாளர் வர்க்கத்திற்கு விரோதமாக அம்முதலாளித்துவ வாதிகள் மேற் கொண்ட நடவடிக்கைகளை இடதுசாரி இயங்கங்கள் முழு மூச்சுடன் எதிர்த்தன. அப்போது இடதுசாரிகளது முற் போக்கு செயல் திட்டங்களால் கவரப்பட்ட பல கல்விமான்கள், சிந்தனையாளர்கள் தம் கருத்துக்களை பேச்சுருவிலும். இலக்கிய வடிவத்திலும் சமுதாயத்தின் முன் வைத்தனர். இடதுசாரிகளோடு தம்மை இணைத்துக் கொண்டு செயல்படலாயினர். அன்று விதைக்கப்பட்ட அந்த வித்துத்தான் இன்று சிறந்த பயனை நமக்கு அளிக்கிறது. அன்றிலிருந்து உழைக்கும் மக்கள் கூட்டத்தோடு வாழ்ந்து கொண்டு அவர்களது சுகதுக்கங்களில் பங்குபற்றிய இந்நாட்டு முற்போக்கு எழுத்தாளர்கள், அதில் தமிழ் எழுத்தாளர்கள் பலர், குறிப்பாக வட பகுதிகளில் பிற்போக்குவாதிகளது சாதித் துவேஷத்திற்கு எதிராக பல பேரியக்கங்களை நடத்தி வெற்றிபெற்றனர். அவற்றின் விளைவுகள்தான் இன்று இலங்கையில் பல தமிழ் எழுத்தாளர்கள் கம்யூனிஸ்ட்டுகளா இருப்பதற்குக் காரணம். இக்காரணி இந்நாட்டில் எப்போதோ விதைக்கப்பட்ட வித்து என்றுதான் கூறவேண்டும்.

கே. சிங்கள இலக்கியங்களையும், அதன் ஆசிரியர்களையும் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள் நமது தமிழ் எழுத்தாளர்களும் வாசகர்களும். ஆனால், இதேமாதிரி சிங்கள வாசகர்கள் நமது தமிழ் எழுத்தாளர்களையோ, தமிழ் இலக்கியங்களையோ அறியாதவர்களாக இருக்கிறார்கள். இத்தகைய குறைபாட்டை நீக்குவதற்கு வழி என்ன?

ப. உண்மையான குறைபாடுதான். இதற்கான அடிப்படைக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தால் 1956-ம், அதன் பின் 1958-ல் நிகழ்ந்த வகுப்புக் கலவரங்களும் நம்முன் வெளிப்படையாகத் தெரிகிறது. 1956-க்குப் பின்னர் சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் இருந்த பல அரசியல் வாதிகளில் சிலர் படு பிற்போக்குவாதிகளாகவும், அதேசமயம் சுரண்டும் வர்க்கத்தின் பிரதிநிதிகளான முதலாளித்துவ ஏகாதிபத்திய வாதிகளாகவும் இருந்தனர். இவர்கள் தமது சுயநலத்திற்காக தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்பி வகுப்புவாதத்திற்குத் தூபம் போட்டனர். அத்தூபத்தில் மயங்கிய பலர் இனக்கலவரங்கள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தனர். இதன் விளைவு தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் வேற்றுமையும், பகைமையுணர்வும் உருவாகியது. அதனால் தமிழ் இலக்கியங்களையோ. அல்லது தமிழ் மக்களையோ புரிந்து கொள்வதற்கான விருப்பம், அல்லது ஆர்வம் சிங்கள மக்கள் மத்தியில் குன்றிவிட்டது. மனிதர்களைப் புரிந்து கொள்ள இலக்கியம் சிறந்த கருவி. இக் கருவியை எழுத்தாளர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக சிங்கள எழுத்தாளர் பலரும், அரசியல் வாதிகளும் தமிழ் கற்பதற்காக இப்போது நல்ல ஆர்வம் காட்டி வருவதாக நான் அறிகிறேன். இது வரவேற்கத்தக்க மாறுதல். தமிழ் மக்கள் சிங்களம் படிக்க முன்வருவதுபோல் சிங்கள மக்களும் தமிழைப் படிக்க முன் வரவேண்டும். அந்நிய மொழிகளைப் படிக்க விரும்பும் நம்மவர்கள் சகோதர மொழியை கற்பதில் தவறேன்றுமில்லை.

கே. எத்தகைய இலக்கியங்கள் இன்றைய சமுதாயத்திற்கும், அதேசமயம் இந்நாட்டில் புதுயும் படைப்பதற்கான ஆக்கபூர்வமான செயல்களை முன் எடுத்துச் செல்வதற்கும் பயன் தரும்?

ப. இது 'விஞ்ஞான யுகம்' கற்பனாவாத சோசலிஸம் அகன்று விஞ்ஞான சோசலிஸம் வளரும் ஆரோக்கியமான காலமிது. விஞ்ஞான சோசலிஸம் சம்பந்தமான கருத்துள்ள தொழிலாள அறிவு ஜீவிகளால் மட்டும்தான் முழுமையாக அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வேலைசெய்ய முடியும். தத்காலத்திலும் சரி, எதிர்காலத்திலும் சரி, ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடி முதலாளித்துவத்தை முறியடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டில் சமதர்ம சமுதாயத்தை தோற்றுவிக்க சோஷலிஸத்தால் மட்டுமே முடியும். இந்நாட்டில் வாழுகின்ற எழுத்தாளர்கள் ஒரு விசயத்தை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். சோசலிஸம் என்பது தவிர்க்க முடியாதது. எழுத்தாளர்கள் இதுபற்றிச் சிந்தித்தாலோ அல்லது சிந்திக்காது விட்டாலோ — எப்படியாயினும் சரி, வளர்ந்து வரும் சோசலிஸப் பாதையை யாராலும் நிறுத்த முடியாது. இந்நிலையில்தான் இக்கருத்தைக் கூறவேண்டியது தவிர்க்க முடியாதது. அதாவது ஒரு எழுத்தாளரது கரங்களில் உள்ள பேனாவின் வலிமை மகத்தானது, அப் பேனாவுக்கு முடியும், சோசலிஸப் பாதையை விரைவுபடுத்தவும், தாமதப்படுத்தவும்! என வேதான் மக்களது நலனுக்காக மக்கள் இலக்கியம் படைக்கின்றேம் என்று கூறி முற்போக்கு இலக்கியம் சிருஷ்டிக்கும் எழுத்தாளர்கள் விஞ்ஞான சோசலிஸம் பற்றி நன்கு அறிந்து கொண்டு உழைக்கும் தொழிலாள விவசாய பாட்டாளி வர்க்கத்திற்கு தமது இலக்கியங்களை படைத்து ஏகாதிபத்திய எதிர்ப்புக் கருத்துக்களை மக்கள் முன் வைத்தல் வேண்டும்.

கே: இந்நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டை பேணுவதற்கான பல செயல் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நமது தமிழ் எழுத்தாளர்களுடன், மல்லிகை போன்ற முற்போக்கு இதழ்கள் ஈடுபட்டு உழைக்கின்றன. இம்மகத்தான பணிகளில் நம்முடன், சிங்கள எழுத்தாளர்களும், சிங்கள இலக்கிய சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் இணைய வேண்டும் என்பது எமது நியாயமான விருப்பம். இவ்விருப்பம் சாத்தியமாவதற்கான வழிவகைகள் பற்றி ஏதும் கூறமுடியுமா?

ப. முன்பு வகுப்புவாதிகள் சம்பந்தமாக நாம் அவதானத்துடன் இருக்க வேண்டியிருந்தது. ஆனால் சமகாலத்தில் பிரிவினைவாதிகளது கோஷங்களை எண்ணிக் கவலைப்பட வேண்டியதாயிருக்கிறது. தமிழ் மக்கள் மத்தியில் பிரிவினைவாத நச்சு விதையை விதைப்பதற்கான, நாட்டின் அபிவிருத்திக்குப் பாதகம் விளைவிக்கும் செயல்களை சிலர் செய்து வருகின்றனர். ஒவ்வொரு இன மக்களது மொழி பாதுகாக்கப்பட வேண்டுமென்பது நியாயமானதே. ஒவ்வொரு இனமும் தனது நியாயமான உரிமைகளை, நாட்டின் அபிவிருத்திக்கு பாதகமான முறையில் பிரிவினை வடிவில் கோருவது வருத்தத்திற்குரியது. அதே சமயம் அது சாத்தியமற்றதுமாகும். இந்நாட்டில் வாழும் இரு பெரும்பான்மையான இனங்களான சிங்கள, தமிழ் மக்களிடையே மொழியை காரணமாக வைத்து போராட்டம் நிகழுமாயின் அதன் விளைவு அந்நிய மொழியே இங்கு மேலோங்குவதற்கும், ஏகாதிபத்தியமே இங்கு வேரூன்றுவதற்கான சூழலை உருவாக்கிவிடும். 1957, 58-ம் ஆண்டு காலத்தில் இருந்த நிலை இன்று வெகுதூரம் மாறிவிட்டது. வகுப்புவாதம், இனத் துவேஷம் என்பன இன்று பெரும்பாலும் மறைந்து விட்டது. வகுப்புவாதக் கூச்சலை நம்மவர்கள் மேலும் எழுப்பினால் அதனால் பயன் பெறுவது நாடோ அல்லது அவர்களோ அல்ல. வகுப்புவாதக் கூச்சலின் பெறுபேற்றை தமக்கு சாதகமாக்கிக் கொள்வதற்காக இந்நாட்டில் ஒரு சுரண்டும் வர்க்கம், ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவு நல்கும் ஒரு கூட்டம் இங்கு இருந்துகொண்டிருக்கிறது. இது பற்றி நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் பற்றியும், தமிழ் எழுத்தாளர்களைப் பற்றியும் நல்ல அபிப்பிராயத்தை சிங்கள மக்கள் வளர்த்து வரும் காலமிது. சில பிற்போக்குவாதிகளது வகுப்புவாத, பிரிவினைவாத கூச்சல்கள்தான் மேற்படி வளர்ச்சியில் சில சமயங்களில் தேக்கத்தை தோற்றுவித்துவிடுகிறது. நாட்டு நலனில் அக்கரை கொண்டுள்ள நல்லெண்ணம் படைத்த சிங்கள தமிழ் எழுத்தாளர்கள் ஒன்று பட்டு பேச்சுவார்த்தைகள் மூலம் சில பிரச்சினைகளை சமரசமாகத் தீர்த்துக் கொள்வதற்கான சூழ் நிலைகளை உண்டாக்க வேண்டும். ஒரு நாட்டின் அபிவிருத்தியும், முன்னேற்றமும் அந்நாட்டின் பொருளாதாரத்தில் மட்டும் தங்கியிருப்பதில்லை. தேசிய ஒருமைப்பாடு ஒரு நாட்டின் அபிவிருத்தியில் பெரும் பங்கினை வகிக்கின்றது. இது தொடர்பாக தமிழ் எழுத்தாளர்களோடு சிங்கள எழுத்தாளர்களும் நன்கு சிந்தித்து செயல்படுவார்கள் என்று நம்புகிறேன்.

கே. நமது நாட்டில் தமிழ் மக்களுக்கென வழங்கப்பட்டுள்ள உரிமைகளை அரசியல் யாப்பில் பதிவது சம்பந்தமாக பல அரசியல் தலைவர்களும், அமைச்சர்களும் சமீப காலமாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். கொள்கையளவில் உரிமைகளை ஆதரிக்கும் அரசும், தலைவர்களும் இது தொடர்பாக நடைமுறையில் இறங்குவதற்கு வழி யாது?

ப. நீங்கள் கூறியதுபோல நமது அரசியல் தலைவர்கள் பல சந்தர்ப்பங்களில் கருத்துக்கள் வெளியிட்டுள்ளனர். இது வரவேற்கத்தகுந்த மாறுதலாகவே நான் கருதுகின்றேன். அரசியல் சாசனத்தில் தமிழ் மக்களது நியாயமான உரிமைகள் சேர்ப்பதற்கான வழிவகைகளை அரசு ஆராய்ந்து வருகின்றது. தமிழ் மக்கள் மத்தியில் இது தொடர்பான பேச்சுக்களை பல அரசியல் தலைவர்கள் பேசியுள்ளனர். இதன் மூலம் தமிழ் மக்களது அபிமானத்தையும் மதிப்பையும் அரசு பெறுவதோடு மக்கள் சக்தியின் நம்பிக்கைக்கும் பாத்திரமாகிறது. அந்நம்பிக்கை வீண்போகாது என்றே நானும் நம்புகிறேன். மேற்படி தமிழ் மக்களது உரிமைகள் அரசியல் சாசனத்தில் சேர்ப்பதற்கான நல்ல சூழல் உருவாகி வருகின்றது. இரு சாராரும் பேச்சுவார்த்தை நடத்தி நாட்டுக்குகந்ததும், மக்கள் நலனுக்குமானதுமான முடிவுகளை எடுப்பர் என்பது எனது நம்பிக்கை.

கே. மிக்க மகிழ்ச்சி. இறுதியாக..... 75 வயது பூர்த்தியாகும் இம் மகிழ்ச்சியான காலத்தில் எமது ஈழத்து இலக்கிய உலகிற்கும், எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப. எத்தகைய இலக்கியம் சமுதாயத்திற்கு பயன்தரும் என்று ஏற்கனவே கூறியதைத்தான் வாசகர்கள் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். நமது தேசிய இலக்கியம் சர்வதேச அந்தஸ்த்துப் பெற்றது என்பதை இந்நாட்டவர்கள் மறந்து விடக்கூடாது. இந்நாட்டில் ஒரு சோசலிஸ சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கான பெரும்பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். இச்சந்தர்ப்பத்தில் எழுத்தாளர்களதும், வாசகர்களதும் பணி மிகவும் பொறுப்புவாய்ந்தது. இந்நாட்டு எழுத்தாளர்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், தேசிய ஒருமைப்பாட்டிற்காகவும் உழைக்க வேண்டும் என்பதையே கூறிக் கொள்ள விரும்புகிறேன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழோங்கிய ஒரு வரலாற்றுப் பாத்திரம்

பிரேம்ஜி

டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர். சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மதிப்புக்குரிய பழம் பெரும் தலைவர்களுள் ஒருவர். இலங்கை இடதுசாரி இயக்கத்தின் பிதாமகன். ஈழத்தின் இன்றைய ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் புரட்சியின் மூலவர்.

இதனால்தான் எஸ். ஏ. யின் 75-வது ஜனன தினத்தை ஈழத்து கம்யூனிஸ்ட்டுகளும், நமது காலத்தின் வரலாற்றுப் போக்கை நிர்ணயிக்கும் உலகப் புரட்சிகர இயக்கத்தின் முன்னணிப் படையான சர்வதேச கம்யூனிஸப் பேரியக்கத்தினரும் உற்சாகத்துடன் கொண்டாடுகிறார்கள்.

டாக்டர் எஸ். ஏ. யின் நாமம் இந்த நாட்டு இடதுசாரி இயக்கம் முழுமையையும், தேசிய விமோசன இயக்கம் முழுமையையும் மூர்த்திகரித்து நிற்கிறது.

1929-இல் பிரித்தானியாவில் மருத்துவத்துறைப் படிப்பை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு ஈழம் திரும்பிய வைத்திய கலாநிதி எஸ். ஏ. உடல் வியாதிகளுக்கு சிகிச்சை செய்யும் திறமையுடன் மட்டும் வரவில்லை. மனிதனை மனிதன் சுரண்டும் சமூக அமைப்பின் பீடைகளுக்கெல்லாம், கொடுமைகளுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைக்கும் ஒரு மாமருந்தை ஈழத்துச் சமுதாயத்திற்குப் பிரயோகிக்கும் பேராற்றல் பெற்ற அரசியல் மருத்துவராகவும் திரும்பினர்.

ஈழத்து மண்ணில் காலடி எடுத்து வைத்த முதலாவது மார்க்ஸிஸ்ட் தோழர் எஸ். ஏ. ஒரு யுகத்திலிருந்து இன்னொரு யுகத்தை; ஏகாதிபத்தியத்தினதும் சுரண்டலினதும் யுகத்திலிருந்து ஏகாதிபத்தியத்தின் கலோனியலிஸ அமைப்பு அடிசாய்ந்து விழுவதின், சோஷலிஸத்தின் யுகத்தைத் துவக்கி வைத்த மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியினாலும், இந்த யுகப் புரட்சியின் வரலாற்று நாயகரான விளடிமீர் இலியச் லெனினின் அணைத்தையும் ஆட்கொண்டும், வென்றும் வரும் புதுயுகக் கருத்துக்களாலும் ஆகர்ஷிக்கப்பட்டு, அந்த உலகப் பேரியக்கத்தின் பெருந்தூதராக நாடு திரும்பிய டாக்டர் எஸ். ஏ. தாயகம் வந்ததும் தனது புரட்சிகர சித்தாந்தத்தையும் செயற்பாட்டையும் நாட்டு நிலைமைகளுக்கு இயைய பிரயோகிக்க ஆரம்பித்தார்.

ஏகாதிபத்திய கலாசார ஆதிக்கத்தை எதிர்த்த போராட்டமே அன்று தேசிய விடுதலை இயக்கம் கால்கோள் கொள்வதற்கான தளமாக இருந்தது. பௌத்த பஞ்பாடு காக்கும் நிலையங்களாக கல்லூரிகள் நாடு முழுவதிலும் அமைக்கப்பட்டு வந்தன. இந்த இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றிய டாக்டர் உடனேயே அதன் பொதுமுகாமையாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதன் பின்னர் கொடிய மலேரியா நோய் இலங்கை மக்களைப் பயங்கரமாகப் பாதித்த போது ஒரு டாக்டர் என்ற வகையில் இதை எதிர்த்த போரில் இளம் வைத்தியர் எஸ். ஏ. விக்கிரமசிங்க தன்னுயிரைப் பணயம் வைத்து முழு மூச்சுடன் குதித்தார். மக்களின் உயிரை நரபலி எடுத்து வந்த இந்த நோயைக் கட்டுப்படுத்துவதில் அந்நிய ஆட்சியினர் போதிய அக்கறை காட்டாததால் மலேரியா எதிர்ப்பு இயக்கத்திற்கு எஸ். ஏ. ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ளுறையையும் வடிவத்தையும் அளித்தார்.

ராஜ்ய சபைக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது இடதுசாரியான டாக்டர் எஸ். ஏ. எந்த ஒரு உண்மையான புரட்சிக்காரனையும் போலவே நாடாளுமன்றத்தை ஏகாதிபத்தியத்தையும் நிலப் பிரபுத்துவத்தையும் எதிர்த்த போராட்டத்தின் பிரசாரமேடையாக்கினர். இவரது புதிய, ஆனால் தனிக் குரல்—சிம்மக் குரல் கேட்டு ஏகாதிபத்தியம் நடுநடுங்க ஆரம்பித்தது. கலோனியலிஸ்ட்டுகளுக்குத் தொண்டூழியம் செய்த அன்றைய 'பெருந்தலைவர்கள்' குடல் கலங்கினர்.

சர்வவல்லமை படைத்திருந்த ஏகாதிபத்தியத்தினதும் உள்ளூர்ப் பிற்போக்கினதும் ஒருமித்த கடுந் தாக்குதலை தனி மனிதனாக நின்று தாக்குப் பிடித்த இளம் புரட்சிகரர் எஸ். ஏ. ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிகர கருத்துக்களைப் பரப்பினர். சோஷலிஸ எண்ணங்களைத் தூவினர். மார்க்ஸிய — லெனினியத்தை இந்த நாட்டுக்கு அறிமுகப் படுத்தினர். அமரத்துவ அக்டோபர் புரட்சியின் — உலகின் முதலாவது சோஷலிஸ ராஜ்யத்தின் அற்புத சாதனைகளை ஈழத்து மக்களுக்கு எடுத்துக் கூறினர்.

தொழிலாளி வர்க்கத்தை ஸ்தாபன ரீதியாகத் திரட்டும் பணியில் ஏனைய ஒரு சில தோழர்களுடன் சேர்ந்து டாக்டர் எஸ். ஏ. முழு மூச்சுடன் ஈடுபட்டார்.

இலங்கை தேசிய காங்கிரசில் சேர்ந்து தேசிய இயக்கத்திற்கு வீறையும், ஏகாதிபத்திய விரோத உள்ளடக்கத்தையும் அளிக்க முன்வந்தார். 'டொமினியன் அந்தஸ்து' என்ற மிதவாதத் தலைவர்களின் போலிக் கோரிக்கையை நிராகரித்துவிட்டு பரிபூரண சுதந்திரக் கோரிக்கையை தேசிய காங்கிரஸ் நிறைவேற்றுவதற்கு தோழர் எஸ். ஏ. காலாக அமைந்தார். இத் தீர்மானம் தேசிய காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. டி. எஸ். சேனநாயக்கா தலைமையிலான ஏகாதிபத்தி தாசர்கள் கம்யூனிஸப் பூச்சாண்டி காட்டிக் கொண்டு அந்த ஸ்தாபனத்திலிருந்து வெளியேறினர்.

இவ்வாறு தேசிய இயக்கத்திற்கு முழுமையையும், போர்க்குணமிக்க வீச்சையும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட உணர்வையும் அளித்த வரலாற்றுக் கைங்காரியத்தில் டாக்டர் எஸ். ஏ. யின் பங்குப்பணி மகத்தானது.

இதன் பின்னர் பிலீப் குணவர்த்தனை, டாக்டர் என். எம். பெரேரா போன்றவர்கள் மேற்குலகிலிருந்து திரும்பிய போது அவர்களுடன் சேர்ந்து முற்போக்காளர்களின், சோஷலிஸ்ட்டுகளின் முதலாவது அரசியல் ஸ்தாபனமான லங்கா சமசமாஜக் கட்சியை தோற்றுவித்தார். இவர் சுமார் ஒரு தசாப்தமாகத் தன்னந்தனியனைச் செய்த அரசியல் பணியும் தயாரிப்புமே இக் கட்சி உருப்பெறுவதற்கான நிலைமைகளைத் தோற்றுவித்தது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வெஞ்சிறையில் வாடினர்.

இரண்டாவது உலக யுத்தம் வெடித்த வேளையில் சமசமாஜக் கட்சியின் ஏனைய தலைவர்கள் லெனினிய விரோத — சோவியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரோத ட்ராட்ஸ்கியச் சகதியில் விழுந்தபோது இந்தச் சித்தாந்தத் திரிபை எதிர்த்து எஸ். ஏ. உறுதியாகப் போராடினார். இதற்காக டாக்டர் எஸ். ஏயும் மற்றும் கம்யூனிஸ்ட்டுகளும் சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து எஸ். ஏ. யும் அவரது தோழர்களும் ஐக்கிய சோஷலிஸக் கட்சியை நிறுவினர். இது பின்னர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி என நாமகரணம் சூட்டிக்கொண்டது.

டாக்டர் எஸ். ஏ. யின் 59-வது பிறந்த தினம் அண்மித்த வேளையில் மாத்தறையில் நடந்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஐந்தாவது காங்கிரஸே ஈழத்துப் புரட்சி பற்றிய சரியான மார்க்ஸிய வரையறுப்பை அளித்ததுடன் புரட்சியினது நடப்புக் கட்டமான பூர்ஷ்வா ஜனநாயகக் கட்டத்தின் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான திசை வழியையும் அமைத்துக் கொடுத்தது. இது கோடி காட்டிய மார்க்கத்தில் தான் ஈழத்துப் புரட்சி கடந்த கால் நூற்றாண்டு காலமாக முன்னேறிச் செல்கிறது.

லெனினிய சித்தாந்தத்தின் விழுமிய பாரம்பர்யத்தையும் உலகப் புரட்சிகர இயக்கத்தின் செழுமையான அனுபவத்தையும் ஆதாரமாகக் கொண்டு ஈழத்து நிலைமைகளுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சி நிகழ்ச்சி நிரலில் இடம் பெறும் வரலாற்றுக் கட்டத்திற்கு ஏற்றதாக வகுக்கப்பட்ட இந்த திசை வழியில் டாக்டர் எஸ். ஏ. யும் அவரது தலைமையிலான கம்யூனிஸ்ட்டுகளும் மாபெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளனர். பரந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி உருவாக்கப்பட்டது. கலோனியல் எதிர்ப்புக் கடமைகள் நிறைவேற்றப்படுவதிலும், ஜனநாயக சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் கணிசமான, நிர்ணயமான முன்போதல்கள் ஈட்டப்பட்டன. சோஷலிஸத்தை நோக்கிய முதலாளித்துவமற்ற பாதை என்ற நிலைபாட்டின் ஏதாவதொரு வடிவத்திற்கு நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான நிகழ்வுப் போக்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்திலும் தோழர் எஸ். ஏ. யின் பங்குப் பணி பாரியதாகும். ஈழத்துப் புரட்சிக்கான இந்த சரியான, எதார்த்தமான திசை மார்க்கம் இலகுவில் வரையறுக்கப் படவில்லை. வலதுசாரி திரிபுவாதத்தையும் 'இடதுசாரி' அதிகுரத்தனத்தையும் எதிர்த்து கட்சிக்குள்ளும், பாட்டாளி வர்க்க இயக்கத்திற்குள்ளும் நடத்தப்பட்ட இடையறாத முனைப்பான சித்தாந்தப் போராட்டங்களுக்கூடாகவே தான் இது சாதிக்கப்பட்டது.

இந்த யுகத்தின் சித்தாந்தமான, மார்க்ஸியத்தை 'உங்கள் நாடுகளில் பிரத்தியேக நிலைமைகளுக்கு ஏற்ப பிரயோகியுங்கள், உங்களின் மக்களுக்கு விளங்கக் கூடிய பாஷையில் இதை எடுத்துச் செல்லுங்கள்' என்று லெனின் ஆசிய கம்யூனிஸ்ட்டுகளுக்கு மத்தியில் பேசியபோது சொன்னார். இந்த ஆக்கத்துக்கு அமைய மார்க்ஸிஸ—லெனினியத்துவதையும் நடைமுறையையும் நமது நாட்டின், நமது புரட்சியின் நிலைமைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப ஆக்கபூர்வமாகப் பிரயோகித்ததில்தான் தோழர் எஸ். ஏ. யின் அரசியல் பாத்திரம் ஈழத்தில் மட்டுமல்ல அனைத்து ஆசியாவிலும் புகழோங்கி நிற்கிறது. ★

65 வயதை எட்டியுள்ள ஜப்பானியத் திரைப்பட நெறியாளர் அகிரா குரோசாவா நவீன சினிமாவின் உந்நதக் கலைஞர்களில் ஒருவர் எனப் பொதுவாகப் போற்றப்படுபவர். அவருடைய படைப்புக்களில் 'ரசோமன்' என்ற படமே மிகப் புகழ்வாய்ந்தது. 30 ஆண்டுகளுக்கு மேலாக திரைப்படங்களை நெறிப்படுத்தி வரும் அவர் இதுகாறும் 25 படங்களைத் தயாரித்துள்ளார். அவற்றில் பல உந்நத படைப்புக்களாகக் கருதப்படுகின்றன. ஜப்பானிய நெறியாளர்களுள் கூடுதலாக மேற்கத்திய பாதிப்பைப் பெற்றிருப்பவர் அவரே என வர்ணிக்கப்பட்டுள்ள போதிலும், குரோசாவா ஜப்பானியக் கலைஞனே. அண்மையில் அமெரிக்க சஞ்சிகை 'நியூஸ் வீக்'கின் நிருபர் போஞ்ட் கிரிஷர் அவரைப் பேட்டி கண்டார். அப்பேட்டியின்போது குரோசாவா கூறியவற்றை இங்கே வெளியிடுகிறோம்.

— ஆசிரியர்

தமிழாக்கம்: ஏ. ஜே. கனகரெட்ணா

'மானிடம் மேலும் இன்புற்றிருத்தல் வேண்டும்'

கே. உங்கள் திரைப்படங்கள் உணர்த்த விழையும் மேல் மொத்தமான செய்தி என்ன?

ப. உலகெங்கிலும் மக்கள் தாமே தமக்குத் துன்பத்தை உண்டுபண்ணுவதற்கு முனைகின்றார்போலத் தோன்றுகின்றது. இப்பொழுதை விட இன்புற்றிருப்பதற்கு மனிதனுக்கு உரிமை உண்டு. அச்செய்தியைத்தான் நான் உணர்த்த முயன்றிருக்கின்றேன்.

கே. உமது கணிப்பின்படி ஒரு வீரன் எத்தகையவன்?

ப. தனது உயிரே அதில் தங்கியிருப்பது போன்று தனது இலட்சியங்களை எய்துவதற்கு எதையும் பொருட்படுத்தாது செயற்படுபவனே வீரன். இதுதான் வீரத்தின் சாரம். இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு எனது படம் 'இகிரு'வில் தோன்றும் சிறு பணியாளன். பணித்துறைக் குழு ஆட்சியின் இயந்திர அமைப்பில் அடைபட்டுக் கிடக்கும் அவன் இன்னும் சில மாதங்களுக்கே உயிர்வாழ முடியும் என்று அறிந்ததும், அழுக்கு நிறைந்த தெருவோரச் சிறுவருக்கான விளையாட்டுத் திடலாக மாற்ற தனது முழுச் சக்தியையும் பயன்படுத்துகின்றான். மற்றவர்கள் தெளிவற்று எண்ணியதை அவன் தனது இயல்பான ஆற்றலாலும், தைரியத்தாலும், வல்லமையினாலும் சாதனையாக்கியதால் அவன் வீரனாகத் திகழ்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே. 'இகிரு'வின் கதாநாயகனில் நீங்கள் உங்களைக் காண்கின்றீர்களா?

ப. மரணத்திற்கு முகங்கொடுப்பது பற்றி நான் எப்பொழுதும் சிந்திப்பதாய் 'இகிரு'வைப் படைத்தேன். இன்னும் சற்று காலத்திற்கே நான் உயிர்வாழ முடியும் என அறிந்தால், இறப்பின் தவிர்க்கமுடியாமையை இயன்றளவு அமைதியாக நோக்க முயல்வேன் என எண்ணுகிறேன். ஆனால் நான் உயிரோடு இருக்கும்வரை, எனது வாழ்வு பூரணமாகச் சுடர்விட்டு எரிய வேண்டும்.

கே. யப்பானிய எழுத்தாளர்களும் கலைஞர்களும் மரணத்தைப் பற்றி மிதமிஞ்சிய அக்கறை கொண்டிருப்பதாக மேற்கத்திய நாட்டார்க்கு சில வேளைகளில் தோன்றுகின்றது. யப்பான் மரணம் அல்லது தற்கொலைக்கு வேறு அர்த்தத்தைக் கொண்டிருக்கின்றதா?

ப. பழைய காலங்களிலே ஒருவன் சமுராயாகப் (யப்பானிய வீர வர்க்கத்தினர்) பிறந்திருந்தால் அவன் குழந்தையாக இருக்கும்போது அவனுக்கு முதல் கற்பிக்கப்படுவது எவ்வாறு வயிற்றைக் குத்திக் கிழிப்பது என்பதுதான். எனவே மரணத்திற்கு முகங்கொடுப்பதற்கு ஒருவன் பயிற்றப்படுகின்றான்; இது மேற்கத்திய கல்வி, கட்டுப்பாட்டு ஒழுங்கு முறையிலிருந்து வேறுபடுகின்றது. எனது தலைமுறைவரை இதனைப் பெரும்பாலான யப்பானியர் புரிந்து கொண்டனர். எனினும், இன்றைய யப்பானிய இளைஞர்கள் இதனைப் புரிந்து கொள்வதே இல்லை.

கே. சமுராய்கள் கடைப்பிடிக்கும் நெறிமுறையோடு உங்கள் தொடர்பு என்ன?

ப. நான் ஒருபோதும் சொன்மாகையை (சமுராய் தலைமயிரில் அணியும் ஆபரணம்) அணிந்ததில்லை. ஆனாலும் எனது தந்தை அதை அணிந்தார். விடியற்காலையில் எழுந்து, வாட்சண்டைப் பயிற்சியில் ஈடுபடவும், கெண்டோ வகுப்புக்களுக்குச் செல்லவும், கன்பீயுசியின் 'அனலெக்ஸ்' (தொகுப்பு நூல்) கற்கவும் நான் பயிற்றப்பட்டேன். ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல், தைரியமாகவும் அஞ்சா நெஞ்சுடனும் இருத்தல், இழிவான விடயங்களிலிருந்து விடுபடுவதற்குத் தயங்காதிருத்தல் — இவையே முக்கியமாக உணர்த்தப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக, எந்தக் கஷ்டத்திலும் துன்புறுதிருத்தல்.

கே. அதி உன்னத திரைப்பட நெறியாளர்கள் என நீங்கள் கருதுபவர்கள்?

ப. ஒரு சில பலர். அவர்களுள்: யோன் போர்ட், சத்தியஜித்ராய், கெஞ்சி மீசோகுஜி. மௌனப்பட நெறியாளர்களால் நான் கணிசமான பாதிப்பைப் பெற்றுள்ளேன் என நினைக்கின்றேன். குறிப்பாக ஐசன்ஸ்டைன்: அவரது ஆரம்ப படைப்புக்களை பெரிதும் மதிக்கின்றேன்.

கே. எழுத்தாளர்கள்?

ப. யப்பானியரோ தற்காலத்தவரோ இல்லை. ஒருவேளை ரொல்ஸ்டோய். நிச்சயமாக டொஸ்டொய்ஸ்கி: அவர் எனக்குக் கடவுள் போல. மனித துன்பத்தையும் துயரத்தையும் அமைதியோடு நோக்கும் வல்லமை — மற்றவர்களால் எட்டிப்பிடிக்க முடியாத தன்மை — அவரிடம் உண்டு.

கே. கடந்த பத்தாண்டுகளில் யப்பானிய திரைப்படங்களின் தரம் ஏன் குன்றிவிட்டது?

ப. இப்பொழுது உள்ளது போன்று யப்பானிய திரைப்படக் கம்பெனிகள் ஒவ்வொரு வாரம் அல்லது 2 வாரங்களில், தொழிற்சாலை இயந்திர உற்பத்திக்கு ஒப்ப படங்களைத் தயாரித்து தமது படமாளிகைகளுக்கு வினியோகம் செய்து வருவது படைப்பாற்றலுக்கு உகந்ததல்ல. இதனால் படத் தயாரிப்பாளரைவிட படமாளிகை முகாமையாளர் வலிமை பெறுகின்றனர். 'நான் இதைக் கூற விரும்புவதால் இப்படத்தை நான் தயாரிக்க வேண்டும்' எனச் சுதந்திரமாகக் கூறக்கூடிய ஆற்றல் மிக்க இளைஞர்களை இது உற்சாகப்படுத்துவதில்லை. மேலும், யப்பானில் அதிகாரத்தில் உள்ளவர்கள், கருத்து வெளியீட்டுச் சுதந்திரத்தைப் பற்றி மிகத் தாராள மனப்பான்மை கொண்டிருக்கின்றனர். தம்மைப் பாதிக்காதவரை, ஆனால் தமக்கு ஆபத்து என்று கண்டதும், இச் சுதந்திரத்தை அடக்கி ஒடுக்குவதற்கு தந்திரமும் துரோகமும் மிக்க வழிவகைகளைக் கண்டுபிடித்து விடுவார்கள். இந்தப் பீடாதிபதிகளைத் தாக்குவதற்கு துணிச்சலுள்ளவர்கள் போதிய அளவில் இல்லை.

கே. பாலுணர்ச்சி பற்றி எல்லோருமே படங்கள் தயாரித்துவரும் ஊழியிலே, உங்கள் படங்களில் அந்த வாடை வீசவில்லையே, ஏன்?

ப. அத்தகைய பொருள்களை விலக்குவதற்கு நான் பயிற்றப்பட்டுள்ளதால் போலும். பாலுணர்வு வாழ்வில் அதிமுக்கிய இடத்தினை வகிக்கின்றது. மனித வாழ்க்கையில் பாலுணர்வின் இடம் குறித்து ஒரு படைப்பு ஆழமான கனதியான அக்கறை கொண்டிருப்பின் அது எவ்வளவு 'அம்பலப்படுத்தும்' தன்மை வாய்ந்ததாயிருப்பினும், அது செம்மைவாய்ந்ததே. ஆனால் நானே பழைய தலைமுறையின் போக்கு உடையவன். பாலுணர்வை முற்றுக வெட்ட வெளிச்சத்துக்குள் தள்ளிவிட வேண்டும்தானே?

கே. படத்தயாரிப்பில் நீங்கள் அமெரிக்கருடனும் ரஷ்யருடனும் வேலை செய்திருக்கிறீர்கள். உங்கள் அனுபவத்தில் யாருடன் வேலைசெய்வது சுலபம்?

ப. அமெரிக்க அமைப்பில், நெறியாளருக்கு மேலாக தயாரிப்பாளர் ஓங்கி நிற்கிறார். ஒவ்வொரு அற்ப விஷயத்திலும் அவர் தலையிட்டு, இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என சதா ஆணை பிறப்பித்துக் கொண்டிருந்தால் நெறியாளரால் சகிக்கமுடியாது; ரஷ்யரைப் பொறுத்தவரை திரைப்படங்களைத் தயாரித்தல் ஒரு தேசீய முயற்சி, ஒரு அரசாங்கத் திட்டம். பூரண சுதந்திரத்தை அவர்கள் அளிக்கின்றனர். எனினும், ஒரு சிறந்த தயாரிப்பாளருடன் வேலை செய்தால் நான் அமெரிக்காவில் நல்ல படமொன்றினை எடுக்க முடியும் என நினைக்கின்றேன்.

கே. இனி எடுக்கப்போகும் படங்களில் என்ன பொருள்களைக் கையாள உத்தேசம்?

ப. சமூகரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இன்று யப்பான் கோணலாகியுள்ளது. சமுதாயத்தை நிமிர்த்தி நேராக்குவதற்கு சில படங்களைத் தயாரிக்க விரும்புகின்றேன். யப்பானிய மக்கள் மிதமிஞ்சிய அமைதியுற்றிருக்கின்றனர். தமது மத்தியிலே ஊழலும், நீதியின்மையும் நிலவுகின்றன என அறிந்திருந்தும், கைகளைக் கட்டிக்கொண்டு வாழாவிருக்கின்றனர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு ஜவஹர்ஷாவின்

காவிகளும் ஒட்டுண்ணிகளும்

மு. பஷீர்

ஜவஹர்ஷாவின் அறுபத்தேழு கவிதைகள் அடங்கிய இத் தொகுப்பில் தனது சமர்ப்பணக் கவிதையிலே, 'சமுதாய அநியாயங்களைப் பொறுக்காத குமுறல்கள் அனுபவ விமர்சனங்களான படியால், தர வேறுபாடுகளையும், தத்துவத் தெளிவுடன் நேச முரண்பாடுகளையும் என்னுள்ளேயே தவிர்க்க முடியவில்லை. இது சாதனைக் கோபுரம் என்ற கோஷமில்லை என்னிடம். எனது ஓலைக் குடிசைக்கு வாருங்கள். மிகச் சரியாக விமர்சியுங்கள்!' என்ற வரிகளும், யோகராஜா — கமால் ஆகியோரின் மாறுபட்ட அபிப்பிராயங்களையும் நோக்குமிடத்து, கவிஞரது ஆழமான இலக்கியப் பார்வை நிதர்சனமாகிறது. இத் தொகுதியிலுள்ள பெரும்பாலான கவிதைகள் ஏழ்மைக் குமுறல்களை, சமுதாய முரண்பாடுகளை, கொள்கை முழக்கங்களை, பெரிய மனித போலி வேஷங்களை அனுபவ வெளிப்பாடுகளாக உணர்த்துகின்றன!

சில கவிதைகளின் கருப் பொருள்கள் வழக்கமான பழகிப் போன கோஷங்களாகவே இருக்கின்றன. என்றாலும் ஜவஹர்ஷாவின் சொல்லாட்சியும், இறுக்கமும், கவிதை பொழிகின்ற பாணியும் விஷய ஞானத் தெளிவும், இளங்கவிஞர்கள் வரிசையிலே தனி முத்திரை பொறிக்கப்பட்ட பாடல்களால் இவர் சிறந்து விளங்குகின்றார். 'நெஞ்சச் சிறையில் உஷ்ண கீதங்கள்!' என்ற கவிதை அதற்கு சிறந்த சான்றாகும். வாழ்வின் ஏற்ற இறக்கங்களை, துன்ப அலைகளை ஒரு மெல்லுணர்வோடு அணுகி பாமரனும் புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் கவிதைக் கற்களை அடுக்குகின்ற விதம் பாராட்டிற்குரியது.

பிறந்த நாள்
கேக் சுற்றி வந்த பத்திரிகையில்
ஒரு செய்தி:
பசியால் இரண்டு
குழந்தைகள் இறந்தன!

என்ற கவிதையின் மூலம் ஒரு புதிய செய்தியைச் சொன்னாலும் இன்னும் ஆழமாக இதைச் செய்திருக்கலாமே என்ற குறையும் இல்லாமலில்லை. நிகழ்கால அரசியல் சூத்திரதாரிகளின் பலவீனங்களை ஒரு விதநையாண்டித் தனத்தோடு சாடுகின்ற துணிச்சல் இவரது கவிதைகளுக்கு உண்டு. உதாரணம் — சிற்பங்களும் சிற்பிகளும் கவிதை.

'ஒரு படைப்பாளியின் எத்தகைய படைப்பாயினும் அதில் அவன் சார்ந்த பண்பாட்டுக் கூறுகள் புலப்பட வேண்டும்', இந்த அறிவுரைக்கு மிக விரிவான விளக்கம் கூறுவதுதான் பொருத்தம். கவிஞர் தனது பண்பாட்டுக் கூறுகளையும் தாண்டி, பிற பண்பாட்டு மோசடிகளை ஒரு சத்திய ஆவேசத்துடன் கூற வீழைந்த போது தங்கள் வீட்டுக் கூரைகளைத் திருத்திக் கொண்டாலே போதுமானது, பக்கத்து வீட்டுச் சில்லுகளை நீர் ஏன் குத்திக் காட்டுகின்றீர் என்ற சிலரது விமர்சன விவாதங்கள். ஒரு படைப்பாளியின் எழுத்துக்களில் பண்பாட்டுக் கலாசார நெடி வீசுவதற்கு முன் மனிதநெடி வீசட்டும். ஏனென்றால் நாமெல்லோரும் மனிதர்கள்.

எங்களுக்குள்ள
ஒரே பொழுதுபோக்கு
மனைவிகளான படியால்
நாங்கள்
என்றும் குசேலர்களே!

என்ற வரிகளை பொருளுணர்ந்து படிப்பவர்கள் அதன் அர்த்தத்தில் லயித்து விடுவார்கள். இக்கவிதையில் ஆழ்ந்து ரசித்தபோது தமிழகத்து தீபம் இதழில் முன்னர் வெளியான ஒரு கவிதை நினைவிற்கு வருகிறது.

கரண்ட் தட்டுப்பாட்டில்
மெல்லிய முன் இருட்டில்
சாத்திய முகப்புகளைக் கண்டு
முக்கோண நோட்டீஸ்
முகம் வீங்க அழுகிறது!

சிக்கன வாரக்
கொண்டாட்டங்கள்
பிரமாண்டமான மேடைகள்
'டுவிட்' கோட்டிலிருந்த
தங்க பொத்தான்களைத் தடவியவாறு
மந்திரியார் பேசினார்
செலவைக் சுருக்கினால்
ஏழைகள் வாழ்வு
சுபீட்சம் அடையும்.

போன்ற பல்வேறு கவிதைகளும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. காவிகளும் ஒட்டுண்ணிகளும் பல கருத்துச் செறிவுள்ள சுவையான கவிதைகளடங்கிய நூல். அன்பு ஜவஹர்ஷாவின் ஆற்றலையும் வளர்ச்சியையும் எடை போடுவதற்கு இந்நூல் துணை புரிவதோடு, சமுதாய அவலங்களை களைத்துவத்தோடும் யதார்த்தத்தோடும் சித்திரிக்கின்ற பல கவிதைகள் இத்தொகுப்பின் சிறப்பிற்குத் துணைபுரிகின்றன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள்

க. சட்டநாதன்

கொட்டாஞ்சேனை மாரியம்மன் கோவிலை அடுத்து, வடக்கே கிளை பிரியும் சந்தில்—பள்ளத்தில், ஒரு மாடிவீட்டின் கீழ்ப்பகுதியில், ஒதுக்குப்புறமாக உள்ள ஓர் அறையில் அவனும் அவளும் குடியிருக்கிறார்கள்.

இருவருமே வேலை செய்வதால் மாலை ஐந்து மணிக்குமேல் தான் அவர்களை அந்த அறையில் காணமுடியும்.

பகற் பொழுதெல்லாம் அவர்களது அந்த அறை பூட்டியே கிடக்கும். அப்பொழுதெல்லாம் அவர்கள் எங்காவது 'அவுட்டிங்' அல்லது நண்பர்களது வீடுகளுக்குப் போயிருப்பார்கள். சில சமயங்களில் இலக்கியக் கூட்டம் அது இதென்று அவள் போக அவனுக்குப் பிடிக்காத, பிடிப்படாத விஷயமானாலும் கூட—இவனும் போவான். அந்த நடைமுறை கூட இப்பொழுது சிறுகச் சிறுகக் குறைந்து விட்டிருக்கிறது.

அவள் அரசுத்துறையில் எழுதுவினைஞராகப் பணியாற்றுகின்றாள். அவன் தனியார் கொம்பனியொன்றில் சொற்ப ஊதியத்தில் ஏதோ உத்தியோகம் என்று 'பேர்' பண்ணுகின்றான். இருவரது ஊதியமும் 'இப்படி அப்படித்' தான். இருந்தும் அவளுக்குச் சம்பளம் சலுகைகள் சற்று அதிகம். பட்டதாரியான அவன் இருநூற்றுக்கு 'மட்டையடிக்க' அவள் முந்நூற்று ஐம்பதுவரை எடுத்தாள்.

இருவருடைய மாத வருமானமும் 'கழிவுகள்' போக ஐந்நூறு ரூபாவைத் தாண்டாத நிலை. அதில், அவர்கள் குடியிருக்கும் அறை 'சுளையாக' நூறு ரூபாவை வாடகையாக விழுங்கி விடுகின்றது. மீதப் பணத்தில் குடித்தனம் நடைபெறுகிறது.

இவர்கள் காதல் திருமணம் செய்துகொண்டவர்கள். திருமணம் நடந்தபின் நாலைந்து மாதங்கள் இவர்களிடையே எவ்வளவு நெருக்கமும் நெகிழ்வும். அதன்பின், அவர்களது தாம்பாத்திய உறவில் விழுந்துவிட்ட சிறு விரிசல், நிரவுபடாமல் பெரிதாகி இப்பொழுதெல்லாம் ஒரு வருஷ காலமாக இருவரும் எப்பொழுது பிரிந்து போவது என்ற அபாயத்துடன் இருக்கின்றார்கள்.

இதற்கெல்லாம் அவளைக் காரணம் சொல்ல முடியாது. அவன்தான் காரணம். பிரிந்து போவதில் கூட அவள் ஆர்வங் காட்டவில்லை. அவன்தான் திடீரென இப்பொழுது 'அதுபற்றி' மிகுந்த ஆர்வங் கொண்டவன் போல அவளுடன் பேசுகின்றான். அது பேச்சளவில்தான் என்பது அவளுக்குத் தெரியும்.

அவளில்லாமல் அவனால் இருக்கமுடியாதென்பது அவளுக்குத் தெரியும். அவன்மீது அவளுக்கு அனுதாபம் உண்டு. ஆனால், வரவர அவனது முரட்டுத்தனங்களால் வாழ்வில்—அவனுடன் வாழ்வதில், ஒரு கசப்பு லேசாக அவளுக்கு ஏற்பட்டிருக்கிறது. இருந்தும் அவனுடன்தான் அவள் வாழ்கின்றாள். இறுதிவரைக்கும், அவனுடன்தான வாழ்ந்து விடுவது என்றும் உறுதிபூண்டுள்ளாள். ஆனால், எதற்குமே அவசரப்படும் அவன் இவளுடன் இறுதிவரை வாழ்ந்துவிடுவானா? லேசான ஒரு பயம் அவளை அலைக்கழிக்கவே செய்கிறது.

இந்த வாழ்க்கையிலும், அவளுக்கு ஓர் இனிமையான பகுதி உண்டென்றால் அதுதான் அவளது எழுத்தும் இலக்கியமும். அதில் அவள் தன்னை ஈடுபடுத்தும்போது — தனது வாழ்வின் அவலங்களையே மறந்துவிடுகின்றாள்.

அவள் அதிகம் எழுதுவதில்லை. எழுதியதெல்லாம் அற்புதமாக வந்திருக்கின்றன. அவள் எழுதுவதற்கு ஒருவகையில் தூண்டுகோலாய், துணையாய் இருப்பவன் 'அருண்' என்கிற அருணாசலம்தான். அந்த அற்புதமான எழுத்தாளனது தொடர்புகள் இவளது படைப்புக்களில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆரம்பகாலத்தில் சதா முக்கோணக் காதல் கதைகளையே எழுதிக் குவித்து வந்த அவள் இப்போதெல்லாம் மனிதன்பால் அதித நேயம் பூண்டு வர்க்க நலம் பேணும் எழுத்தை வடிப்பதென்றால்! அந்த மாற்றம் மகத்தான ஒன்றுதான்.

வேலை முடிந்து, கந்தோரிலிருந்து நேராக வீட்டுக்கு வந்தவள், அறைக்கு முன்னால் பால்காரன் வைத்துவிட்டுச் சென்ற பால்போத்தல் சரிந்து உடைந்து கிடப்பதைக் கண்டு சிறிதும் பதட்டமில்லாமல், உடைந்த போத்தலை அகற்றிவிட்டு அறைக் கதவைத் திறந்தாள்.

அறை இருட்டாகவே இருந்தது. ஜன்னலைத்திறக்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றவில்லை. அலுப்புடன் கையில் இருந்தவற்றை அங்கு கிடந்த மேசையில் போட்டுவிட்டு சோபாவில் சோர்வுடன் சாய்ந்து கொண்டாள்.

சற்று அசதியாக இருக்கவே, சிறிது அயர்ந்து தூங்கியும் விடுகின்றாள். அவள் விழித்தபொழுது 'லயிற் எரிந்துகொண்டிருந்தது.

மணியைப் பார்த்தாள்: ஆறுக்குப் பத்து நிமிடங்கள். 'யார் லயிற் போட்டது. அவன் வந்துவிட்டானோ?'

மனம் பதைத்தவளாய் எழுந்து கொண்டாள்.

அவன் வந்ததும் அவனுக்குக் கோப்பி கொடுக்க வேண்டும்; அல்லது அவன் கோபமுற்று அதையே சாட்டாக வைத்து ஒரு பாட்டம் நாகரிகம் இல்லாமல் திட்டித் தீர்த்து விடுவான். இது இப்பொழுது ஒருசில நாட்களாய் நடைபெற்று வருகிறது. சிறு உரசலே அவனுக்குப் போதுமாய் விடுகிறது. அவன் நெருப்பாய் மாறிவிடுகின்றான். அப்படியொரு நிலை இப்போது வேண்டாமென்று அவள் பயந்து 'சுற்றுமுற்றும்' பார்த்தாள்.

அவன் வந்த சுவடேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளே 'லயிற்ரை' நித்திரைச் சோம்பலுடன் எழுந்து போட்டுவிட்டு, மீண்டும் படுத்திருக்க வேண்டும்.

சோம்பலையும், கோழித் தூக்கத்தையும் உதறியபடி எழுந்தவள், சேலையை உருவி எறிந்துவிட்டு, குளியலறைக்குள் பழைய சாக்கால் மறைப்புக் கட்டிய குழாயடிக்குச் சென்றாள்.

குளித்துவிட்டு வந்தவள் 'கவுணை' எடுத்துப் போட்டபடி கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தாள். தலையைக் கூட வாரவேண்டுமென்று அவளுக்குத் தோன்றவில்லை. கூந்தலே ஈரம் சொட்டச் சொட்ட வாரி முடிந்தபடி நிமிர்ந்தபோது அவளது பார்வை, அவனும் அவளும் அவர்களது திருமணத்தின்போது எடுத்த படத்தின் மீது குத்திட்டுத் தரித்தது. கசப்பான ஓர் உணர்வின் நெருடலுடன் அவள் லேசாகச் சிரித்துக் கொண்டாள்.

அவர்களது திருமணம் ஓர் அவசரத்துடன்தான் நடந்து முடிந்தது. அந்த அவசரத்திற்குக் காரணமே அவன்தான். இவள் எவ்வளவு நிதானமாயிருக்கிறாளோ அதற்கு எதிரிடையாக அவன் எதற்குமே அவசரப்படுவான்.

அவள், அவனை முதன் முதலில் கொழும்பில் சந்தித்தது கொட்டாஞ்சேனை பஸ்ஸில் தான். வெள்ளவத்தை பஸ்தரிப்பில் ஏறியவன் அவளுக்குப் பக்கத்தில்தான் உட்கார்ந்து கொண்டான்.

அவளை இவன் யாரோ ஒரு பெண் என்று நினைத்து இயல்பான யாழ்ப்பாணத்துக் கூச்சத்துடன் ஒதுங்கியே இருந்து கொண்டான்.

எதேச்சையாக அவனது பக்கம் திரும்பிய அவள்:

'யாரது சந்திரனா...?' என்று புன்னகைத்தாள்.

அவனுக்கு அவளை உடன் யார் என்று அறிந்து கொள்ள முடியவில்லை. பின் ஒருவாறு அனுமதித்துக் கொண்டான்.

'ஓ...! எத்தனை வருஷங்களுக்கு முந்திக் கண்டது...! ஒல்லியாய் கறுப்பாய் உடம்பிலே சதைப்பிடிப்பே இல்லாமல், அழுக்குப் பாவாடையும் கிழிஞ்ச சட்டையுமாய்... மூக்கில் சதா சளி வழிந்த தடம் புண்ணையிருக்கும் கோலத்துடன் திரிந்த கமலாவா இவள்...! விஞ்சியின்னர மகளுக்கு இவ்வளவு எழுப்பமே.....'

கோவியப் பெட்டை என்ற நினைப்பு வந்ததும் இன்னும் சற்று ஒதுங்கியே உட்கார்ந்து கொண்டான்.

அவளை அவன் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

அவளாகவே மீண்டும்: 'மட்டுக்கட்டேல்லைப் போலை.....?'

'தடிவிஞ்சியின்னை மகள் தானே... தெரியுது... நல்லாத் தெரியுது'

'.....'

'இஞ்சை இந்தப் பக்கம்'

'நானே... நான் கிளறிக்கல் சேர்விஸிலே எடுபட்டு... இன்கம்ராக்ஸிலை வேலை செய்யிறன்'

'இன்கம்ராக்ஸோ?'

அவன் பெருமையால் வெந்து போகின்றான் என்பது அவளுக்குத் தெரிகிறது.

ஏதோ தனியார் கொம்பனியொன்றில் 'அரைகுறை' ஊதியம் பெறுபவனுக்கு அவள் அரசாங்க உத்தியோகத்திலிருப்பது பொறுமையை ஊட்டியதில் வியப்பில்லைத்தான்!

'சேர்விஸிலை சேர்ந்தது பென்சன் ஸ்கீம் இருக்கேக் கையோ...? இல்லைப் பிந்தியோ?'

'இருக்கேக்கைதான். அது சரி இப்பை இந்த வரவு செலவோடை எல்லாரும் திரும்பவும் 'பென்சன்' எண்டுதானே..... நிதிமந்திரி அறிவிச்சிருக்கிறார்...'

'ஓ நான் அதை மறந்திட்டன். அது சரி நீ சிவானந்த வீதியிலேயே இருக்கிறது?'

'ஓம்... ஓம்... உங்களுக்கு எப்படித் தெரியும்...!'

'அங்கை ஒரு கேள்ஸ் ஹாஸ்ரல்' இருக்கு அதுதான் கேட்டனான்.

'நீங்களும் கொட்டாஞ்சேனையிலைதானே இருக்கிறது?'

'ஓம்... மாரியம்மன் கோவிலுக்குப் பக்கத்திலை'

அவர்கள் இருவரும் அதன் பின் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. ஆனால் அவன் அடிக்கடி அவளை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டான்.

'இவள்... இவள் கமலா... இவ்வளவு அழகாக எப்படி இருக்கமுடியும். கறுப்பி இளஞ்சிவப்பாய் இருக்கிறாள்... எலும்பாய்க் கிடந்தவள் ஹும்..... என்னமாய்.. ஓ...! எல்லாமே பூரிச்சுக் கிடக்குது'

அவள் பஸ்ஸை விட்டு இறங்கி நடந்தாள். இவனும் தன்னுணர்வு இழந்தவனாய் அவளுடன் அவளது வீடுதிவரைக்கும் வந்து விடுகின்றான். பின் ஒருவாறு தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவளிடம் விடை பெற்றுக்கொண்டான்.

அன்றிலிருந்து அவன் அவளை அடிக்கடி சந்தித்தான். சந்திக்காவிடில் அவனுக்கு எதுவுமே ஓடாது. தலை வெடித்து விடும் போலிருக்கும்.

'கோவியப் பெட்டைதானே தட்டிப்பார்த்தால் எடுபட்டிடுவாள்' என்ற கெட்ட எண்ணம் தான் அவனுக்கு முதலில் இருந்தது. ஆனால் அவளது அறிவு, அவள் நடந்துகொள்ளும் விதம், அவள் கைநிறையச் சம்பாதிக்கும் பணம், அவள் எடுக்கவிருக்கும் 'பென்சன்' என்ற எதிர்காலப் பாதுகாப்பு என்று, எல்லாம் சேர்ந்து அவளை மணந்து கொண்டால்தான் என்ன?' என்ற உணர்வை அவனுக்கு ஏற்படுத்தும். திடீரென தனது குடும்பத்திற்குப் பரம்பரை பரம்பரையாக 'அடிமை குடிமையாக' இருந்த வம்சத்தின் வித்து அவளென்பது நினைவு வந்ததும் அருவருப்புடன் உடம்பைச் சிலிர்த்தபடி 'தூ.....' என்று காறித் துப்புவான்.

என்ன இருந்தென்ன. அவளது இளமையிலும், இனிமையான வசீகரத்திலும் இவனது ஆண்மை கரையவே, அவன் அவளைத் தீவிரமாகக் காதலிக்கத் தலைப்பட்டான்.

தனது எண்ணத்தை, காதலை இவன் ஒரு சமயம் அவளுடன் விகாரமாதேவிப் பூங்காவில் இருந்தபொழுது வெளியிட்டான். அப்பொழுது அவள் எது உணர்ச்சிப் பாதிப்புக்கும் உட்படாதவளாய், சுற்றுச் சார்பையே மறந்தவளாய், விழுந்து விழுந்து சிரித்த சிரிப்பு இவனது உடலையே நடுங்கவைத்து விட்டது.

'இவள் என்னை எனது காதலை ஏற்க மறுத்து விடுவாளோ!' என்று உணர்ச்சி வேகத்துடன் திடுக்குற்று அவளை அவளது காதலை யாசிப்பது போல் அவளையே பார்த்து நின்றான்.

'சாதியாலை குறைஞ்ச பெட்டை... அதுவும் பரம்பரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரையாய் தாபாடிக்காரருக்கு குடிமை வேலை செய்த சின்னற்றை பூட்டி... முத்தன்ரை பேத்தி..... தடிவினுசியின்ரை மகள்..... இந்தப் பெட்டையை முடிச்சிட்டு உங்களால் ஊர்ப் பக்கம் தலைகாட்டேலுமே!'

அவள் பேசிமுடிக்கவில்லை, அவன் திடீரென உன்மத்தம் கொண்டவனாய், தான் தீவிரமாக அன்பு செலுத்தியும் அவள் தன்மீது அன்பில்லாமல் நடந்து கொள்கின்றாளே என்று எண்ணியவனாய். அவளது கன்னத்தில் அறைந்துவிட்டு, அவ்விடத்தை விட்டுச் சென்றான்.

அந்த அடி அவளுக்கு வலிக்கவில்லை. அவனது அன்பு, அவன் தீவிரமான ஓர் லட்சிய வெறியுடன் காதலிப்பது அவளுக்குப் புரித்தது.

காதல், இலட்சியம் என்ற தங்கக் கோபுர நினைவுகள் அனைத்தும் அர்த்தமற்றவை என்பது அவளது முடிவு. இருந்தும், எவனை ஒருவனை மணக்க வேண்டும், அவன் இவனுகவே இருந்துவிட்டுப் போகட்டுமே, என்று நினைத்தபடி விடுதிக்குத் திரும்பினாள். தனியாகத்தான்!

அன்றைய சம்பவங்களின் பின் ஒருவார காலமாக அவன் அவளைச் சந்திக்கவில்லை. இந்த ஒருவாரமும், அவனை இவள் அடிக்கடி நினைத்துக்கொண்டாள். அவனது குழந்தைத்தனமான முகம், அதில் விஷமத்தனமாகக் குறுகுறுக்கும் கண்கள், சிவந்த உதடுகளுக்கு மேலாய் படந்து கிடக்கும் அடர்த்தியான மீசை அனைத்தும் அவளை அவன்பால் ஆர்வங் கொள்ளவே செய்தன. அவனுக்காக அவள் லேசாக ஏங்குவது போன்ற உணர்வின் உறுத்தல் வேறு அவளால் அவளையே நம்பமுடியவில்லை.

'அவனது கொம்பனிக்கு போன்பண்ணிப் பார்ப்போமா?' என்று நினைத்தவள் பின் அந்த எண்ணத்தையே மாற்றிக் கொண்டாள்.

அவனே தன்னிடம் பேசக் கூடும் என்று எதிர்பார்த்தாள். அவள் எதிர்பார்த்தது போலவே இரண்டு நாள் கழித்து, அவள் கந்தோரில் இருந்தசமயம் அவன் இவளுடன் 'போனில்' தொடர்பு கொண்டு, மாலை கந்தோர் முடிந்ததும் விடுதிக்கு வருவதாகச் சொன்னான். அப்பொழுது அவளும் ஏதோ பேச முயன்றாள், அவள் பேசுவதற்கு முன்பாகவே அவன் 'போனை' மறுமுனையில் வைத்தது இவளுக்கு ஏமாற்றமாய்ப் போய்விட்டது.

மாலை அவள் விடுதியில் இருந்தபொழுது அவளைத் தேடிக் கொண்டு முதலில் வந்தவன் 'அருண்தான்' தான் புதிதாக எழுதிய கதையினைக் காட்டி அவளது கருத்தினை அறிய வந்திருந்தான். பிரசுரத்திற்கு போ முன் பரஸ்பரம் அவர்கள் கருத்துப்பரிமாறிக் கொள்வதுண்டு.

அவர்கள் கதையின் உள்ளடக்கத்தைப் பற்றித் தீவிரமாக அலசிக்கொண்டிருந்த பொழுதுதான் இவன் அங்கே வந்தான்.

அவனை வாருங்கள் என்று கூறியதுடன் 'அருணையும்' அவனுக்கு அறிமுகம் செய்துவைத்தாள். பின் கதையைப்பற்றியே அவர்கள் அதிகம் பேசியது இவனுக்கு மிருந்த எரிச்சலை ஊட்டியது.

'என்ன எழுத்தோ.. என்ன நட்போ ' அவளது ஈடுபாடு தன்னில் முழுமையும் லயிக்காமல், எழுத்தென்றும் அருணது தோழமை என்றும் சிதறுவதை அவன் விரும்பவில்லை.

இருந்தும் பொறுமையாக இருந்தான்.

'அருண்' ஒருமாதிரி விடைபெறும் பொழுது இவன் அவனைப் பார்க்க, அவள் பரபரப்புடன் வீதிவரை சென்று அருணுக்கு விடைகொடுத்தது, இவனுக்கு ஏனோ பிடிக்கவில்லை.

அருணை அனுப்பிவிட்டுத் திரும்பியவள் இவனைப் பார்த்து, 'கோப்பி சாப்பிடுங்கள்' என்று உபசரித்து ஃப்ளாஸ்கில் இருந்த கோப்பியை வார்த்துக் கொடுத்துவிட்டு, 'இதோ இருங்கள் இதோ ஒரு நிமிஷத்தில் வருகிறன்' என்று உள்ளே சென்றாள்.

தன்னை ஓரளவு அலங்கரித்துக் கொண்டு வெளியே வந்தவள், 'நூல்நிலையம் வரைக்கும் போய்வருவோம்! என்று அவனை அழைத்தாள்.

அவன் ஏதும் பேசாமல் அவளைப் பின்தொடர்ந்தான்.

அவள்தான் முதலில் பேசினாள்: 'என்ன கோபமா!'

'எதற்கு.... ?'

'இல்லை... அன்று என்னமாய் கோபமுற்று சூழ்நிலையையே மறந்து என்னை அடித்தீர்கள்'

'ஓ...! அது.. அது... என்னை மன்னிச்சிடு... உனக்கு... உனக்கு என்னை அன்பைப் புரிஞ்சு கொள்ள முடியவில்லை'

'புரிஞ்சு கொள்ளாமலா உங்களுடன் புறப்பட்டிருக்கிறன்'

'இந்தப் புறப்பாடு இடை நடுவே நின்றுவிடக் கூடாது கமல்'

'எனக்கு நின்றுவிடாது என்ற நம்பிக்கை உண்டு. ஆனால் உங்களுக்கு?'

'சரி.. சரி... அதிருக்கட்டும் கமல் உனது அன்பு எனக்கு... எனக்கு மட்டுந்தான் வேண்டும். நீ பிறருடன், அதுவும் ஆண்களுடன் பேசுவதையே என்னால் பொறுக்க முடியவில்லை. யாரிந்த அருண்..... சரியான எழுத்துப் பயித்தியம். இவன் உன்னிடம் எவ்வளவு தூரம் நெருக்கமாகப் பழகமுடிகிறது'

போதும் போதும் 'அசட்டுப் பிசெட்' டென்று உளறுதீர்கள். அவர் எனது நண்பர். எழுத்துலகத் தொடர்பு — தோழமை, இதைவிட ஒன்றுமில்லை. உங்கள் மனதை வீணுக குழப்பிக் கொள்ளாதீர்கள்'

அன்று அவர்கள் இருவரும் வெகு நேரம் வரையில் நூலகத்தில் — வாசிப்போர் பகுதியில், அமைதியாக — தங்களைப்பற்றி, தங்கள் எதிர்காலம் பற்றி எல்லாம் தர்க்கித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்:

'இன்னும் சில தினங்களிலே பதிவுத் திருமணத்தை வைத்துக் கொள்வோமே' என்று அவன் நச்சரித்தான்.

அதற்கு அவள் மௌனமாகப் புன்னகை பூத்தாள். அந்த மௌனம், புன்னகை எல்லாம் அவனுக்கு அவளது காதலை உணர்த்தியிருக்க வேண்டும்.

அவன் சூழ்நிலையையே மறந்தவனாய், அவளது காதின் கீழ்ப் புறத்தில் கழுத்தில் முத்தமிட்டான்.

அவள் சிலிப்புற்று இவனைப் பார்த்து மீண்டும் சிரித்தாள்.

அந்த இனிமையான சந்திப்பின் பின் ஒருவார காலத்தின் பின்பு, அவர்கள் இருவரும் பதிவுத் திருமணம் செய்துகொண்டார்கள்:

அவர்களது திருமணத்திற்கு அவனது நெருங்கிய நண்பர்கள் சிலரும், இவளது தோழிகள் சிலரும், அருணும் வந்திருந்து வாழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது பெற்றோர்களுக்கு 'இதுவிசயம்' அப்பொழுது எதுவும் தெரியாது. தெரிந்த பொழுது இவர்கள் எதிர்பார்த்தது போல் எதுவித பூகம்பமும் வெடித்துவிடவில்லை.

அவளது பெற்றோர்கள்— 'யாரது நம்மடை தாவாடிப் பெரிய வீட்டுத் தம்பியா..... சந்திரனு?' என்று மகிழ்ச்சி தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தார்கள்: ஆனால், அவனது தகப்பனார் கொஞ்சம் இரத்த அழுத்தப் பேர்வழி, ஏதோ ஆவேசத்துடன் கிறுக்கியிருந்தார். எல்லாம் வழமையான பல்லவிதான்.

'உனக்கு இந்த வேலை செய்ததற்கு செப்பாலடிச்ச சல்லிக் காசுகூடக் கிடையாது... நீ இந்தப் பக்கம் அந்தச் சாதி கெட்ட தோடை வருவியோ பாப்பம்...' என்று ஏதேதோ அலுத்துப் போன அற்பத்தனமான பிரலயங்கள்.

அவன் கடிதத்தைப் படித்து விட்டு இவளிடம் கொடுத்தான். அதைப் படித்த இவள்: இந்தக் கிழவரிடம் என்ன இருக்கிறது. வரட்டுச் சாதிப் பெருமையைத் தவிர...' இருந்த நிலபுலத்தையும் சும்மா இருந்து சீட்டாடியும் குடித்தும் குலைத்துவிட்ட இவரை எந்த நிலையிலும் ஒரு பாதுகாப்பாக சந்துரு நினைத்திருப்பாரா.....? இல்லை... இருக்காது..... இவரது தனவந்தத் தனமெல்லாம் உண்மைக்குப் புறம்பான வெறும் கற்பனைகள் தான். சும்மா இருந்து சுகித்த பேர்வழி— உள்ளதையெல்லாம் சிதைத்து சாதி வெள்ளாளர் என்ற 'பட்டயம்' மட்டும் எஞ்சி நிற்கும் இவர் மிகவும் இரக்கத்துக்குரியவர் என்றெல்லாம் நினைத்துக் கொண்டாள். அவர்கள் இருவரையும் இவை அன்று எதுவித்திலும் பாதிக்கவில்லை.

★

பழைய நினைவுகளில் மனதை அலையவிட்டவள், 'படபட' எனக் கதவு தட்டப்படுவதை உணர்ந்தவளாய் சென்று திறந்தாள்.

அவன்தான் வந்திருந்தான்.

வழமைபோல அவனது முகம் சுரத்தற்று— ஆனால். சற்றுக் கடுகடுப்புடன் இருந்தது. அவள், அவர்கள் மணவாழ்வில் ஈடுபட்ட ஆரம்ப நாட்களில் அவன் முகம் இருந்த மலர்ச்சியை ஏனோ அப்பொழுது நினைவு கூர்ந்தாள்.

அவன் வந்ததுமே கோப்பி குடிப்பான். எனவே அதனைத் தயாரிப்பதற்கு உள்ளே சென்றவள், மீண்டும் அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவனது முகத்தோற்றம் ஏனோ அவளுக்கு மிகுந்த பயத்தை ஊட்டியது.

அவன் இப்பொழுது சில நாட்களாக, 'சீதனம்' என்று ஏதோ பிதற்றி சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் இவளை அநாகரிகமாக 'ஒன்றுக்கும் வக்கில்லாத— வகையில் லாத தரித்திரம் பிடித்தவள்— என்றெல்லாம் திட்டித் தீர்ப்பது வழக்கமாகிவிட்டிருக்கிறது.

ஊரில் ஏதோ சொற்ப காணி இவளது பேருக்கு உண்டு. அதனையே விற்று, அவன் இவளை சீதனம் தரும்படி நச்சரித்த பொழுது இவள் அவன்பால் முதன் முறையாக வெறுப்புக் கொண்டாள். அந்த வெறுப்பு அவன் அந்தப் பிரச்சனைபற்றிப் பேசும் பொழுதெல்லாம் அதிகரிக்கவே செய்தது.

அதைப்பற்றித்தான் இன்றும் ஏதாவது அவன் பேச விரும்புகின்றானே, அந்த அநாகரிகமான வார்த்தைகளை. வசைகளை அவளும் கேட்கத் தயாராக வேண்டுமோ?

'வேண்டியதில்லை...!' அந்த நினைப்பே அவளுக்கு நிம்மதியைத் தருகிறது.

இன்றுதான் அவளது தகப்பனார் அவளது காணியை விற்று அவளது பெயரில் வங்கியில் பத்தாயிரம் வரையில் போட்டிருப்பதாக எழுதியிருக்கின்றார். அந்த விஷயத்தை அவள் அவனுக்குச் சொன்னபொழுது அவனதுமுகத்தில் லேசான மலர்ச்சி. அந்த மலர்ச்சியும் ஏனோ கண நேரம்தான் நிலைத்தது. மீண்டும் அவனது முகம் இறுக்கமுற்றுக் கடுமையானதை அவள் அவதானித்தாள்.

'இது ஏன்?' அவள் சஞ்சலமுற்றாள்.

அவளது சிநேகிதி ஒருத்திக்கு அவள் சம்பளம் எடுத்த கையோடு கொடுத்த 'கைமாற்றுப் பணம் பற்றித்தான் இவன் கேட்கப் போகின்றானே?' கேட்டு, அவள் இன்னும் தரவில்லை என்று இவள் சொல்ல, அவன் அர்த்தமில்லாமல் இவளை ஏசுவதற்கு தயாராக இருக்கின்றானே?' அல்லது..... ஏதாவது புதிதாகக் கற்பிதம் பண்ணித் திட்டித் தீர்க்கத் தன்னைத் தயார்ப் படுத்துகின்றானே?

ஒன்றுமே புரியாமல் அவள் குழம்பி நின்றாள்.

அவள் சம்பளம் எடுத்ததும் பணம் முழுவதையுமே இவன் வாங்கி வைத்துக் கொள்வது வழக்கம். பின் அவளது தேவைகளுக்குக் கூட இவனிடம்தான் அவள் பணம் வாங்கவேண்டும்.

இவள் அவனை எதற்குமே எதிர்பார்ப்பது இவளுக்கு என்னமோ போலிருந்தது. எந்த விஷயத்திலும் அவன் சொல்வதையே இவள் கேட்டு நடக்க வேண்டுமாம். அதுதான் மனைவிக்கு லட்சணமாம். அப்பொழுதான் குடும்பம் குடும்பமாக இருக்குமாம். அல்லது சீரழிந்து விடுமாம். சீரழிந்து விட்டால் இவள் தெருவில்தான் நிற்க வேண்டுமாம்.

இதெல்லாம் அவளுக்கு அர்த்தமாகவில்லை. மிகவும் கட்டுப் பெட்டித்தனமாக அந்த ஆணின் அதிகார வரம்பை அவள் ஓரோர் சமயம் உடைத்தெறிய விரும்புவதுண்டு. விரும்பும் அளவுக்கு அவள் துணிவதில்லை.

அவள் மிகவும் பொறுமையாகவே இருந்தாள். அப்பொழுதெல்லாம் அவளது மனம் அவளது பெற்றோர்களை, அவர்களது வாழ்க்கையை நினைத்துப் பிரமித்துப் போகும்.

'ஆச்சியும் அப்புவும் ஏழைகள்தான். எளியதுகள்தான். இருந்தும் என்ன குறை அவர்களது வாழ்க்கையில்? ஆச்சி கல்லுடைக்கப் போனால் அப்புவயலில்லை ஏர்பிடிக்கப் போவார். அவரிவு வெட்டப் போனால், சூடுவைக்கப் போவார். இருவருமே உழைத்தார்கள். இருவருமே குடும்பம் அது இதென்று ஒருமித்துச் செயற்பட்டார்கள். அப்புவின் அபிப்பிராயங்களை ஆச்சி கேட்பதும்; ஆச்சியின் அபிப்பிராயங்களை அவர் கேட்பதும்... ஓ! அவர்களது அந்த வாழ்க்கை எவ்வளவு அர்த்தமும் மகத்துவமும் நிரம்பியது'

அப்படிப்பட்ட சூழலில் வளர்ந்து, வாழ்ந்து பழசிய, அத்துடன் அறிவுக் கூர்மையும் மிக்க இவளுக்கு தங்கள் இருவருடைய வாழ்க்கையிலுமுள்ள வெறுமை புரியவே செய்தது. அவனது போக்கு அவளுக்கு ஒருசமயம் பிடிபட்டும், பிடிபட மறுத்தும் அலைக்கழித்தது. இந்த முரண் சிறுகச் சிறுக அவர்களது குடும்ப வாழ்வின் அமைதியைக் குலைத்து விடுமோ? என்று அவள் பயந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாள். அதுமட்டுமல்ல, அவள் மிகுந்த பயத்துடன் எது நடக்கக் கூடாது என்று எதிர்பார்த்திருந்தாளோ அது அவனது வாயாலேயே அவள் எதிர்பாராத வகையில் வெளிப்பட்ட பொழுது அவள் மிகுந்த வேதனையுற்றாள்.

அவன் இப்பொழுது அடிக்கடி பயன்படுத்தும் வார்த்தைகள்: "சாதி சனத்துக்காக சடங்கு முடிச்சிருக்கலாம். எவியதுகளை முடிச்சால் இப்பிடித்தான் கிலிசை கெட்டு அலையவேணும்"

அவள் இந்த வார்த்தைகளால் மனம் தளர்ந்துதான் போனாள்.

தன்னை மறந்த நிலையில் பழையதையும். புதியதையும் அசைபோட்டவளுக்கு, 'ஐயோ அவன் கோப்பி கேட்பானே!' என்ற நினைப்பு வந்ததும், பாலில்லாமல் கோப்பியைத் தயாரித்து அவனிடம் எடுத்துச் சென்றாள்.

அவன் கோப்பியை அவளிடமிருந்து வாங்கி திடீரென அவளை நோக்கி வீசினான். அவள் சற்று ஒதுங்கவே அது அவளது இடது தோளில் பட்டுச் சிதறியது. சுடுகோப்பி பட்டதும் துடித்தவள்: "சீ... என்னபைத்தியம்மாதிரி" என்று முணுமுணுத்தாள்.

"ஓமோம்..... பைத்தியம் தான். உன்னுடன் இருந்தால் பைத்தியம்தான் வந்திடும்"

"சத்தம்போட்டுப் பேசாதையள்... வெட்கமாய் இருக்கு"

"எது... எதடி வெக்கம் ..... ஊரெல்லாம் அவன் அந்த அருணோடு சுத்திறது வெட்கமில்லை... நா... நான் பேசிறதுதான் அவுக்கு வெட்கமாயிருக்கு"

அவன் புதிய பிரச்சினையொன்றில் சிக்கித் தவிக்கின்றான் என்பது அவளுக்குப் புரிந்தது. இதுவரை இல்லாத பிரச்சினை. அதுபற்றி இன்று பேச ஆரம்பித்திருக்கிறான்.

இன்று காலை பத்து மணியளவில் அவள் தனது கதைத் தொகுதிக்கு 'கோட்டேசன்' எடுப்பதற்கு சகடைத் தெரு வரைக்கும் போகவேண்டியிருந்தது. 'சோட்' லீவில் போயிருந்தாள். வழியில் அருணைக் கண்டு அவனுடன் அச்சகம்வரை போனதைப் பார்த்துவிட்டு. "இவன் இப்படி நடந்து கொள்கிறானே" என நினைத்தவள்:

"அதுவா... அது... நான்..."

"போதும்...போதும் உன்ரை பசப்பல்... அவன் சச்சி இதைச் சொல்லேக்கை... எனக்கு இடுப்பிலை சீலை இல்லை....."

"அவன் சொல்லிறதை நம்பிறயள்.. நா... நான் சொல்லிறதை!"

ஓ...! நீ சொல்லிறதை நம்பிறன்... நல்லவடிவா நம்பிறன்' உனக்கு... கதை... கதையெண்ட சாட்டிலை... அவனேடை சுத்திறது. இப்ப சாட்டாய்ப்போச்சு இல்லை?

"..... ....."

அவளது மௌனம் அவனை இன்னும் கோபமூட்டியிருக்க வேண்டும். அவன் அவளை மேலும் வம்புக்கு இழுத்தான்.

அவளுக்கும் அவனுக்கும் தொடர்பு இருப்பதாகவும், அந்தத் தொடர்புகளுக்கு இடைஞ்சலாக அவன் இருப்பதாக அவள் நினைப்பதாகவும், கையும் மெய்யுமாக இருவரையும் பிடித்து மானபங்கப்படுத்தப் போவதாகவும் ஏதேதோ கூறி அவன் மேன்மேலும் தன்னைச் சிறுமைப்படுத்திக் கொண்டான்.

அவளால் என்ன செய்ய முடியும். அவனுக்கு இந்த நிலையில் என்ன சமாதானம் சொல்ல முடியும். அவள் தனது தூய்மை பற்றி அவனுக்குச்சொல்வதையே

அப்பொழுது அவமானமாகக் கருதினாள். அப்படி அவள் சொன்னாலும், அவன் இந்த நிலையில் நம்புவானா? நம்பமாட்டான் என நினைத்தவளாய் பொறுமையாக இருந்தாள்.

இவள் பொறுமையாக. ஏதும் பேசாமல் இருந்ததே அவனுக்கு மிகுந்த எரிச்சலூட்டியது. அவன் ஆவேசம் கொண்டவனாய், அவள் மேல் பாய்ந்து தனது பலம் முழுவதையுமே சேர்த்து அடித்தான். இப்படிப்பட்ட நிலைகளில் அவன் அடிப்பதோடு மட்டும் நின்று விடுவதில்லை; ஒரு குரூரமான 'சாடிஸ்' ராகவே மாறிவிடுவான். குழம்பிய சிந்தையுடன் இருக்கும அவளுடன் இவன் ஒருவகை மிருகபலத்துடன் தாம்பத்திய உறவு கூட வைத்துக்கொள்வான்.

ஆனால், இன்று அதற்கு முற்றிலும் மாறுவே முறையில் அவன் செயல்படுவதை அவள் உணர்ந்தாள்.

அவனது கைகள் அவளை— அவளது உடலை புதுவிதமாகப் பரிசித்தன. அவள் எதையோ இழந்து விட்டது போலவும், அதை இவன் கண்டுபிடித்து நிரூபிப்பது போலவும் முயற்சிகள்.

அவள் முதன் முறையாக அவன்மீது 'இது விஷயத்தில்' வெறுப்புற்று அவனைப் பிடித்துத் தள்ளினாள்.

அவன் மிகவும் வெட்கம் கெட்டதனமாக, "நீ இன்று..... இன்று அவனுடன்....."

அவன் சொல்லி முடிக்கவில்லை, அவள் 'தூ... நீயும் ஒரு மனிசனு' என்று விம்மினாள்.

அவளுக்கு எல்லாமே அர்த்தமற்றதாகத் தோன்றியது. பின்பு, ஏதோ நினைத்துக் கொண்டவளாய் தன் இயல்புக்குக்கே புறம்பாக அவனை மேலும் எரிச்சலூட்ட விரும்பியவளாய் 'ஒம் இன்று... இன்று அருணுடன்..... அவனது அறையில்தான் இருந்தேன்' என்று பொய் சொன்னாள்.

ஏதோ எச்சில் பழத்தை, அழுகிய பண்டத்தை தொட்டது போன்ற அருவருப்புடன் முகம் சுழித்து அவன் அவள் முகத்தில் காறி உமிழ்ந்தான்.

அவனது அந்த அநாகரிகமான செயல் அவளை மிகவும் பாதித்தது. உடைபட்ட நெஞ்சுடன் அவள் விக்கித்து நின்றாள்.

அப்பொழுது, அவன் திடீரெனக் குலுங்கிக் குலுங்கிப் பெரிதாகச் சத்தம் வைத்து அழுதான்.

ஆண்மகன் ஒருவன் அழுவதை அவள் கண்டதில்லை. அந்த நிலையிலும் ஆண்மை அழுவது அவளுக்கு வேடிக்கையாகவே இருந்தது. அவள் தனது துயரங்களை ஒருகணம் மறந்தவளாய் லேசாகச் சிரித்துக் கொண்டாள்.

அவன் ஏன் அழுகிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. அர்த்தமில்லாமல் ஏதேதோ காரணங்களைக் கற்பித்தம் பண்ணி அழுவதற்கு அவள் என்ன செய்ய முடியும்? அவனது பலஹீனம் அவளுக்கு அதிசயமாக இருந்தது. அத்துடன் அருவருப்பாகவும் இருந்தது. அவனது செயல்கள் யாவும் அவளுக்கு அவன் மீது இருந்த அன்பை, அனுதாபத்தைக் குலைத்தது.

அவள், இவன் ஏன் இப்படி நடந்து கொள்கின்றான் என்று ஆய்வதிலும் பார்க்க இவன் தன்னுடன் இனியும் ஒட்டி உறவாடத்தான் முடியுமா? என்று தன்னையே ஒருமுறை கேட்டுக் கொண்டாள்.

இப்படி எனது உணர்ச்சிகளையே சீண்டி வேடிக்கை பார்க்க இவனுக்கு என்ன உரிமை இருக்கிறது? அந்த உரிமை; இதற்கெல்லாம் இடங்கொடுக்கிறதா? சீ..... இவன் மனிதனே அல்ல; இந்தத் திருமணம் என்ற பந்தமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களால் எவ்வளவு கட்டுப் பெட்டித்தனமாக அர்த்தப்படுத் தப்பட்டு மலினப்படுத்தப் பட்டு விடுகின்றது.

அவளுக்கும் ஏனோ அழவேண் டும் போல் இருந்தது.

அவளும் அழுதாள்.

அப்பொழுது அவனும் மீண் டுமொருமுறை குலுங்கிக் குழுங்கி அழுதான்!

அவளுக்கு அவன்பால் எவ் வித பரிவும் ஏற்படவில்லை. மன தில் இருந்த துயர் அனைத்தை யுமே உதறி எறிந்தவள், எழுந்து உள்ளே போய் குழாயடியில் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்து, சமைப்பதற்காக வெட்டி வைத்துச் சமைக்காமலே கிடக் கும் காய்கறிகளை ஒதுக்கி வைத் துவிட்டு, அவனது கட்டிலுக்குப் பக்கத்தில், நிலத்தில் பாயை விரித்து ஒன்றுமே நடவாதது போலப் படுத்துக் கொண்டாள்.

அவனது அழுகை அப்பொ ழுது சிறு விசும்பலாக மாறி பின் ஓய்ந்தது. இருவரும் துயரங்க ளால் அலைப்பட்ட களைப்பால் அயர்ந்து தூங்கினர்கள்.

இல்லை! அவள்மட்டும்தான் உறங்கினாள். தூக்கத்தில் புரண் டவள் விழிப்புற்றுக் கட்டிலைப் பார்த்தாள். அவனைக் காண வில்லை.

அவன் எங்கே?

குழாயடியில் 'லயிற்' எரிந்து கொண்டிருந்தது. பரபரப்புடன் எழுந்தவள் அங்கு போய்ப் பார்த்தாள். அங்கு அவனில்லை. மீண்டும் வந்து அறை 'லயிற்' ரைப் போட்டுப் பார்த்தாள். அவனது பெட்டி படுக்கை, உட மைகள் என்று எதுவுமே அங்கி ருக்கவில்லை அவளுக்கு அதிர்ச்சி யும் அதிசயமும் கலந்த ஓர் உணர்வு தோன்றியது.

அவள் வழமையாக கந்தோ ரில் இருந்து வந்ததும் கழற்றி வைக்கும் 'தாலிக்கொடியை' புத்தக அலுமாரியின் இடது பக்கத்து மூலையில் தேடினாள். அங்கு இல்லை. அவன் அதனை... அதனையும்' அவளது மனம் அதனை நம்ப மறுத்தது.

'ச்சீ... இப்படியுமா நிமிடக் கணக்கில் வாழ்வின் கட்டுக்களை துண்டித்துக் கொள்ள முடியும், எதிலுமே அவசரப்படும் அவன் இதிலும் அவசரப்பட்டு விட் டானே?

அவளுக்கு அவன் திருமணத் தன்று வாங்கித்தந்த கூறைச் சேலையும், 'இரண்டாம் பட்டும்' நினைவுக்கு வருகிறது. தனது பெட்டியைத் திறந்து பார்த் தாள். அவற்றையும்காணவில்லை. 'அவன் அவசரக்காரன் மட்டு மல்ல அற்பத்தனமானவனும் கூட' என நினைத்தாள்.

அவளது பார்வை எதேச் சையாக கண்ணுடிப் பீடத்தில் தரித்தது. அதில் குங்குமச்சிமிழ்! 'இதையும் அவன்தானே பரிசாச வாங்கித்தந்தான்... இதனையும் அவன் கொண்டு போயிருக்க லாமே...!' என நினைத்தவள், 'ஒ..... நா... நான் கொஞ்சம் உணர்ச்சிவசப் படுகிறேன்..... இல்லை... இ...லை? என அரற்றி னாள்.

அவளுக்கு அப்பொழுது ஏனோ, லூசுன்னின் கதையொன் றில் வரும்— அவளது அவனை விட்டுப் பிரிந்து போனதும் இறந்துபோகின்ற அந்தப் பெண் ணும், இப்சனின் நோராவும் நினைவில் வந்தார்கள்.

அவர்களைப் போலவே இவ ளால் தாம்பத்திய உறவை வெட்டிக்கொள்ள முடியவில்லைத் தான் ஆனால் அவர்களைப் போல வும் நடந்து கொள்ளாமல் இவள் இருப்பதற்கு அவனே வழிசெய் திருப்பது இவளுக்கு ஒருவகை யில் நிம்மதியாக இருக்கிறது.

அந்த நிம்மதியே அவளுக்கு இப்போதைக்குப் போதுமானது. அவள் நிம்மதியாகப் பெருமூச் செறிந்தாள். ★

பாகிஸ்தான் கவிஞர்

ஃபயிஸ் அஹ்மத் ஃபயிஸ்

வி. ஷாகாயேவ்

கராச்சியில் புதிதாகக் கட் டப்பட்ட ஹோட்டல் 'மெக்ஹ ரன்', இங்குதான் நாங்கள் பாகிஸ்தானின் பிரபல கவிஞ ரான ஃபயிஸ் அஹ்மத் ஃபயி ஸைச் சந்தித்தோம். எமது கோஷ்டியில் என்னுடன் தாஜிக் கவிஞரான மூமின் கானேவா தோவ், பெண் கவிஞரான நிம்மா கலகோவா, சோவியத் விஞ்ஞானப் பேரவையைச் சேர்ந்த கிழைத்தேயவியல் ஆய் வுக் கழகத்தின் உதவியாளராக வுள்ள வலிரியா ஷாகெயெவா ஆகியோரிருந்தனர்.

எமது சம்பாஷணைகள் கிழக் குலகின் பண்டைய பெரு கவி ஞரான அமிர் குஸ்ருவைச் சுற் றியிருந்தன. இப் பேரறிஞரின் 700-வது விழாவை ஒட்டியே நமது கோஷ்டி சோவியத் யூனி யனிலிருந்து வந்திருந்தது. பின் னர் இந்த விழாவை ஒட்டி சோவியத் யூனியனிலும் பாகிஸ் தானிலும் ஒழுங்கு செய்யப்பட் டிருந்த நிகழ்ச்சிகளிலிருந்து பாகிஸ்தானின் சமகால இலக்கி யத்தின் வளர்ச்சியை நோக்கி மாறியது.

ஃபயிஸ் தாம் எழுதத் திட்ட மிட்டுள்ளவை குறித்தும் தற் போது எழுதிக்கொண்டிருப்பது குறித்தும் எம்மிடம் கூறினர். தற்பொழுது தாம் எடுத்துக் கொண்டிருக்கும் திரைப்படம், அதன் முன்னேற்றம் ஆகியன குறித்து விவரித்தார். தமது பணிகளினால் பெயர் பெற்றுள்ள இம் மனிதர் கூறியவற்றை ஆர் வமுடனும் அக்கறையுடனும் செவிமடுத்தோம். மாஸ்கோவி லும் அல்மா — அதாவிலும், வில்னியுஸிலும் விளாடி வொஸ் டொக்கிலும் சோவியத் யூனிய னின் மூலை முடுக்கெங்கும் மக் கள் இந்தக் கவிஞர் திலகத்தின் கவிதைகளைப் படிக்கிறார்கள். அவற்றின் மீது அழியாத காதல் கொண்டுள்ளனர். ஃபயிஸின் படைப்புக்கள் சோவியத் மக்க ளுக்கு நீண்டகாலம் பரிச்சயமுள் ளவை. 1951-ல் இக்கவிஞர் தமது இலக்கியப்பணி காரண மாக சிறையிலடைக்கப்பட்ட போது அவர்கள் வெஞ்சினமுற் றனர். ஆனாலும் என்ன அந்தக் கொடுஞ்சிறையின் சுற்சுவர்களி னால் கூட இந்த வீரக் கவிஞ ரினை அடக்க முடியாது போய் விட்டது.

கொடிய சிறையின் சுவர்க ளையும் மீறி உரம்கொண்ட அவ ரது நெஞ்சிலிருந்து வீறுமிக்க கவிதைகள் ஆர்த்தெழுந்தன. அந்த ஆத்மாவின் அடித்தளத் திலிருந்து புறப்பட்ட கவிதை கள் தெற்காசிய கண்டத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல அதற்கு அப்பாலும் சோவியத் யூனியனிலும் கேட்டது. 1956-ம் ஆண்டு முதன் முதலில் ரஷ்ய மொழியில் வெளியான அவரது கவிதைகள் சோவியத் வாசகர்களது விளப் பத்தையும் பரிவுணர்வையும் சம் பாதித்துக் கொண்டது. இக் கவிதைகள் இக்கவிஞரது நாட்டு மக்களின் இன்னலின் போராட் டத்தை, அன்பை, மேன்மையை விவரிக்கின்றன.

உஸ்பெக், தாஜிக், கஸாக், துருக்மேனிய மொழிகளிலும் இதர மொழிகளிலும் வெளி யான ஃபயிஸின் வீரக் கவிதை கள் சோவியத் மக்களிடையே பரவலான வரவேற்பைப் பெற் றன. இக் கவிஞரது கவிதைத் தொகுதிகள் மாஸ்கோ, தாஷ் கந்த், துஷான்பே, ஃப்ருன்ஸே மற்றும் இதர சோவியத் நகர்க ளில் ஆயிரக்கணக்கான பிரதிக ளில் வெளியாகியுள்ளன.

என். திக்கார்னேவ், எம். இஸாகோவ்ஸ்கி, பி. ஸ்லுட்ஸ்கி ஆகிய பிரபல எழுத்தாளர்கள் ஃபயிஸின் கவிதைகளை மொழி பெயர்த்துள்ளனர். ஏ. ஸுர் கோவ், ஐ. அபஷிட்ஸி, காரா— செய்த்லியேவ் போன்றவர்கள் ஃபயிஸின் இலக்கியக் கட்டுரை களை ஆராய்ந்துள்ளனர்.

சோவியத் யூனியனது அபி மான நண்பரான ஃபயிஸ் பாகி ஸ்தானில் சோவியத் இலக்கியத் தைப் பிரபலப்படுத்தியுள்ளார். அண்மையில் அவர் ஆ. கஃப் தோவின் கவிதைகளையும் ஜெங் கிஸ் அய்த்மதோவ், வி. ஷுக் ஷின் மற்றும் பல சோவியத் எழுத்தாளர்களது புனைகதைகளை யும் உருதுவில் மொழிபெயர்த் துள்ளார்.

நாடுகளிடையே சமாதா னத்தை உறுதிப்படுத்துவதற் கான சர்வதேச லெனின் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது குறித்து முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் அனைவரும் மகிழ்ச்சியடைகின்றார்கள். இந்த பாகிஸ்தான் நட்புறவு, சமாதா னம், மக்களிடையே நல்விளப் பம் ஆகியவற்றிற்காகச் செய்த தலையாய பங்களிப்பு, பெரும் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

ஃபயிஸ், ஆபிரிக்க — ஆசிய எழுத்தாளர் சங்கத்துடன் சேர்ந்து ஆற்றிய பணிகளை யாவ ருமறிவர். 1975-ல் சர்வதேச இலக்கிய 'தாமரை' பரிசை இந்த ஸ்தாபனம் இக் கவிஞ ருக்கு வழங்கிக் கௌரவித்தது.

நேரம் நடு இரவைத் தாண் டிச் சென்று கொண்டிருந்தது. சமகால புனைகதையில் சமூகப் பிரக்ஞையின் செல்வாக்குப்பற்றி எமது பேச்சுத் தொடர்ந்து நடைபெற்றது. 1976-ம் ஆண் டில் கவிஞரது 65-வது பிறந்த நாளை ஒட்டி இக்கவிஞரது படைப்புக்களைக் கொண்ட பொன்விழா மலர் ஒன்றை மாஸ்கோ, 'முன்னேற்ற' ப் பதிப்பகம் வெளியிடவுள்ளது என்று ரிம்மா கலக்கோவா தெரி வித்தார். இதே ஆண்டின் உருது மொழியில் கவிஞரது கவிதைத் தொகுதி ஒன்று வெளியாகவுள் ளது. இதில் சோவியத் யூனிய னைப் பற்றிய கவிஞரது கவிதை களைக் காணலாம்.

கவிஞரிடமிருந்து விடை பெற்றுவர மனமில்லாதிருந்தது. எமது மகிழ்ச்சிகரமான சந்திப்பு நீண்ட ஞாபகத்தில் இருக்கக் கூடியதாக கவிதை ஒன்றைப் பாடும்படி அவரிடம் கேட்டோம்.

அவரது முகபாவம் மாறி யது. எழுந்து நின்றார். தோள் களை சற்று அகல விரித்துக் கொண்டார். அந்த அறை இனிய கவிதைகளினால் நிரம்பி வழிந்தது. ★

நானும் அவளும்

மூலம்: அன்டன் செகோவ்

தமிழில்: 'செந்திரன்'

சிகரட்டை புகைத்தவண் ணம் ஒய்வறையில் அமர்ந்தி ருந்த நான் வீட்டு வேலைகளைக் கவனிக்கும் ரஷியாவை அழைத் தேன்.

ஈரக்கைகளைத் தனது சீத்தை சட்டையில் துடைத்தவாறு என் னெதிரே அடக்கமாக வந்து நின்றாள் அவள்.

'நீ இங்கு வேலைக்கு வந்து மூன்று மாதங்கள்தானே.....!'

"ஆம் முதலாளி.....!"

'உனக்கிப்பொழுது பணம் தேவையாயிருக்குமே.....!'

'ஆம் முதலாளி...!' அவள் கைகளைப் பிசைந்தவண்ணம் கூறினாள்.

"மாதத்திற்கு முப்பது ரூபா வீதம் தொண்ணூறு ரூபாதான் உனக்குத் தரவேண்டியுள்ளது..."

"மாதம் நாற்பது ரூபா வீதம் தருவதாகக் கூறித்தானே முதலா என்னை நீங்கள் அழைத்து வந்தீர்கள்....."

"என்றாலும் உனக்கு முப்பது ரூபாவீதம் தருவதாகத்தான் இங்கே நான் குறித்துள்ளேன்... இதோ பாரு' என்று உரத்துச் சொல்லியவாறு டயறியை அவள் முன் புரட்டிக் காட்டினேன்.

அதன் மீது அவள் பார்வையைச் செலுத்தாது மௌன மாக நின்றாள், அவளது இரு கன்னங்களும் சிவந்திருந்தன!

'நீ வேலைசெய்த மூன்று மாதங்களிலும் பன்னிரண்டு ஞாயிறு நாட்கள் லீவெடுத்திருக் கிறாய்..... அந்நாட்களில் வீட்டு வேலைகளைக் கவனித்தது என் மனைவியே.....! அந்தப் பன்னி ரண்டு நாட்களுக்கும் இருபது ரூபா கழிக்கிறேன்! அப்படியா னால் இன்னும் மீதமிருப்பது எழுபது ரூபாதான்.....!"

'ஆறு ஞாயிறு நாட்கள் தானே நான் லீவெடுத்தேன்...' அவள் ஈனஸ்வரக் குரலில் சொன்னாள்.

"என்றாலும் பன்னிரண்டு ஞாயிறு நாட்கள் நீ லீவெடுத் திருப்பதாகவே எனது டயறியில் பதிவாகியுள்ளது.....!'

அவள் உதடுகள் ஏதோ சொல்லத் துடித்தன. ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை.

"ஒரு நாள் சனிக்கிழமை ஊருக்குப் போவதற்காய் நீ இருபது ரூபாய் வாங்கி எடுத் தாயே... ஞாபகமிருக்கிறதா...? அதையும் உனது சம்பளத்திலி ருந்து குறைக்கிறேன்!'

'நான் பத்து ரூபாய்தானே வாங்கி எடுத்தேன் முதலாளி...' அவள் அடங்கிய குரலில் கூறி னாள்.

'என்றாலும் எனது டயறி யில் இருபது ரூபாயென்றுதான் குறித்து வைத்துள்ளேன். இப் பொழுது உனக்கு மீதமிருப்பது ஐம்பது ரூபாய்தான்.....!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது இரு கன்னங்களி னூடே வழிந்தோடிய கண்ணீர் துளிகள் அவளது மேலாடையில் படிவதை நான் அவதானித் தேன்.

'நீ எனது மகளின் பிறந்த தினத்தன்று கோப்பிக் கோப்பை யொன்றை உடைத்தாய்... அத் தோடு பீங்கானொன்றையும் உடைத்திருக்கிறாய்! இதெல்லாம் உனக்கு நினைவுண்டா? அதற்கும் பத்து ரூபாய் மாத்திரமே.....! என்ன உனக்கு விளங்குகின் றதா.....'

அவள் ஏதும் பேசாது என் னையே பார்த்தவாறு நின்றாள்.

'உனது பாராமுகம் காரண மாக எனது மகன் வீழ்ந்து நெற்றியை உடைத்துக் கொண் டான். அவனுக்கு வைத்தியம் செய்ய எனக்கு பன்னிரண்டு ரூபா செலவாகியது! அதையும் உனது சம்பளத்திலிருந்து வெட் டுகிறேன். இப்போது மீதியா வது இருபத்தெட்டு ரூபாய் மாத்திரமே.....!'

நான் அவளை சற்றுநேரம் கூர்ந்து நோக்கினேன்.

'நீ இப்பொழுது அணிந்தி ருப்பது எனது மனைவியின் சட் டையொன்றைத்தானே...!'

'ஆம்...! இது அம்மா எனக் குப் பரிசாகத் தந்தது முதலாளி'

'ஆ...! இது எனக்குத் தெரி யாதே.....! மனைவி என்னோடு சொல்லவுமில்லையே...! இதற்கும் உனது சம்பளத்திலிருந்து எட்டு ரூபாய் கழிக்கவேண்டும். கடை சியாக உனக்கு எஞ்சுவது இரு பது ரூபாய் மாத்திரமே.....!'

இருபது ரூபாவையும் ஒரு கவரிலிட்டு அவளது கையிற் கொடுத்தேன்.

'நன்றி முதலாளி' எனச் சோர்ந்த குரலில் சொல்லிய வாறு அவள் திரும்பினாள்.

'யாருக்கு நீ நன்றி சொன் னாய்' கதிரையை விட்டெழுந்த நான் போகத் தயாரான அவளை நிறுத்திக் கேட்டேன்.

'உங்களுக்குத்தான் முத லாளி.....'

'உன்னை நான் வஞ்சித்து விட்டேன் என்பதும், நேர்மை யீனமாக உனது சம்பளத்திலி ருந்து அபகரித்துக் கொண்டேன் என்பதும் உனக்கு நன்கு தெரி யுந்தானே! இருந்தும் நீ ஏன் எனக்கு நன்றி சொல்லவேண்டும்'

'நான் வேலைசெய்த மற்ற மிடங்களில் இத்தொகையாவது என்கைக்கெட்டவில்லை எஜமான்'

'லூசி! உன்னை நான் கேலி செய்தேன். அதுமாத்திரமல்ல, உனக்கு என்றும் நினைவிருக்க வேண்டிய பாடமொன்றையும் கற்பித்தேன். நீ இம் மூன்று மாதங்களிலும் வேலை செய்ததற் காய் உனக்குச் சேரவேண்டிய நூற்றி இருபது ரூபாவும் இதோ'

கவரில் போட்டு ஒதுக்கி வைத்திருந்த சம்பளத்தை அவ ளது கையிற்கொடுத்தேன்.

வாடியிருந்த அவளது முகம் பூப்போல மலர்ந்தது.

மீழே குனிந்து எனது பாதத்தைத் தொட முயன்றாள்.

'லூசி எழுந்திரு. எங்கும் எவ்விடத்திலும் உனது உரிமை கள் பறிக்கப்படும்பொழுது நீ அதற்கெதிராய் கிளர்ந்தெழு! உனக்குரியதையே நான் உனக் குத் தந்தேன். அதனால் உன்னி டமிருந்து மரியாதை பெறுவ தற்கு எனக்கு எந்தவிதத் தகு தியுமில்லை'

மீண்டும் திரும்பி குசினிப் பக்கம் செல்லும் லூசியாவை நோக்கி என் மனம் இப்படி அசைபோட்டது.....

'வலியவனுக்கு ஓர் அப்பா வியை ஏமாற்றுவதென்பது எவ்வளவு சுலபமானது...!' ★



தமிழ் நாடகம் வரலாறு அற்றதா?

எஸ். தோமஸ் லெம்பட்

அண்மையில் பேராதனை பல்கலைக்கழக வளாகத்தில் நடை பெற நாடகக் கருத்தரங்கில் 'தமிழ் நாடகம் வரலாறு அற் றது' என ஒரு ஈழத்து விமர்ச கர் கூறியிருக்கிறார். இது உண் மையை மூடிமறைக்கும் ஒரு விதண்டாவாதமான பேச்சு என் பது என் கருத்து.

நாடகக் கலையை எமது மொழியோடு இணைத்து இயற் தமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என மூன்றாகத் தமிழ் மொழியை வகுத்துள்ளார் தொல்காப்பியர்.

'நாடக வழக்கினும்
உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற
புலனெறி வழக்கம்
கவியே பரிபாட்டு
ஆயிரு வகையினும்
உரியதாகும் என்மனார்
புலவர்'

என்று கூறியுள்ளார். இதிலி ருந்து தொல்காப்பியர் காலத்து சான்றோர் இலக்கியங்கள் நாடக உருவிலும் இருந்திருக்கின்றன என்பது புலனாகிறது.

சிலப்பதிகார உரையில் அரங்கு நிர்மாணத்தைப் பற்றி விரிவாகப் பேசப்படுகிறது.

நிலையாத செல்வத்தைத் திருவள்ளுவர் கூறுகையில், 'கூத்தாட்டு அவைக் குழாத் தற்கே பெருஞ்செல்வம் போக் கும் அது விளிந்தற்று' என்கிறார். செல்வம் வருகையில் நாடகம் பார்க்க மக்கள் ஒருவர், இருவ ராக வருவது போல கொஞ்சம் கொஞ்சமாக வருமாம். ஆனால் செல்வம் போகும்போது நாட கம் முடிந்ததும் அத்தனைபேரும் மொத்தமாகப் போவது போல் எல்லாம் ஒருமித்துப் போய்விடும் என்று குறிப்பிடுகிறார். எனவே திருவள்ளுவர் காலத்திலும் நாடகம் இருந்திருக்கிறதென அறியக்கூடியதாயிருக்கிறது.

தமிழ் நாடகத்தைச் சங்க கால — அதற்கு முன்னைய நாட கம், இடைக்கால நாடகம், தற் கால நாடகம் என வகுக்கலாம்.

சங்ககாலத்தில் தமிழ் நாடக நூல்களில் மேடைகள், திரை கள், வெளிச்சங்கள் எவ்வாறு அமையவேண்டுமெனவும், ஆண், பெண் வேடம் தாங்கினால் எப் படியான ஆடைகளை அணிய வேண்டுமெனவும் திட்டவட்ட மாகக் குறிக்கப்பட்டுள்ளது. அக் கால நாடகப் பிரதிகள் இன்று எமக்குக் கிடைக்காவிட்டாலும் கூட கண்ணபிரான் பல தேவ ரோடும், நப்பின்னைப் பிராட்டி யோடும் நாடகம் ஆடியதாக இலக்கியம் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்கால நாடகங்கள் 10-ஆம் 11-ஆம் நூற்றாண்டுகளில் விசயராஜேந்திரன் ஆசாராயனும் சிலரும் இராஜேஸ்வர நாடகத்தைத் தமிழில் ஆடியதாகத் தஞ்சாவூர் பிருகதீச்வரர் கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. பூம்புலியூர் நாடகமும் இக்காலத்தில் நடைபெற்றதாகக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

17-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட முக்கூடற்பள்ளு 18ஆம் நூற்றாண்டில் வேலன் சின்னத் தம்பி என்பவர் அதை Folk Opera வாக ஆக்கியுள்ளார். இதன்பின் குறவஞ்சி, நொண்டி நாடகம் ஆகியன எழுந்தன. இக்காலங்களில் கோயிலைச் சுற்றி எழுந்த நாடகங்கள், பின்னர் அரசர்களைத் துதிபாடுவதாக மாறி பின் தெருவில் ஆடப்படும் கூத்தாக மாறியது.

19-ஆம் நூற்றாண்டு கால நாடகங்களே இக்கால நாடகங்களின் தோற்றுவாய் எனக் கருதக்கூடியதாயிருக்கிறது. இக்காலப் பகுதியில் நாடகங்கள் மேடைகள் எதுவுமின்றித் தெருக்களிலும் ஆடப்பட்டு வந்திருக்கின்றன. இக்காலத்திய நாடகங்களான மார்க்கண்டேய நாடகம், இரணிய நாடகம், உத்தர ராமாயண நாடகங்கள் ஆகியன ஏட்டோலைகளில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்நாடகங்கள் பாட்டும் ஆட்டமும் உடையனவாகும். இந்நாடகங்களில் கட்டியகாரன் எனப்படுவோன் வந்து முதலில் நாடகக் கருவையும், பின்னர் வர இருக்கும் நாடக மாந்தரைப் பற்றியும், விரிவாக எடுத்துரைப்பான். பின்னர் நாடக மாந்தர் தோன்றுவர், இவர் தோன்ற முன் வெண் திரை மறைவில் நின்று விருத்தம் பாடிய பின் மக்கள் முன் தோன்றுவர். இப்படியான நாடகங்கள் இன்று இலங்கையின் கரையோரப்பகுதிகளில் இன்னும் ஆடப்படுவதைக் காணக்கூடியதாயிருக்கிறது.

சில பழமைக் கருத்துகளால் கோவிலைச் சுற்றி எழுந்த நாடகங்கள் சமூக அமைப்பு இன்றும் முற்றுக மாறுத இடங்களில் இன்றும் ஆடப்படுகிறது. ஆனால் இது பின்னர் சமூகத்தில் நில மானிய அமைப்பு மரபு வழிக் கூத்துக்களே உண்டாக்கியது. இவை கடவுள் துதிபாடலும் அரசர்கள், வீரர்கள் ஆகியோரின் வீரப் பிரதாபங்களை எடுத்துக் கூறுவனவாகவும் அமைந்திருந்தன.

பின்னர் பிறநாட்டாரின் வருகையினால் சமூகத்தில் ஏற்பட்ட புதிய மாற்றங்கள், உறவுகள் என்பன நாடக உலகிலும் புகுந்து இன்றைய வசன நாடகங்களையும், நவீன நாடகங்களையும் உருவாக்கியது.

இந்தியாவில் 1920-க்களில் தெ. பொ. கிருஷ்ணச் சாமிப் பாவலர் 'தேசியக் கொடி', 'வெற்றி' என்ற நாடகங்களைத் தயாரித்துள்ளார்.

1939-இல் வங்காள நாவலைத் தழுவி திரு. டி. கே. முத்துசாமி 'குமாஸ்தாவின் பெண்' என்ற நாடகத்தையும், 1944-ல் அறிஞர் அண்ணா 'சந்திரோதயம்', 'ஓர் இரவு', 'வேலைக்காரி', 'நீதி தேவன்', 'சிவாஜி கண்ட இந்து இராட்சியம்' ஆகிய அரசியற் பிரச்சார நாடகங்களையும் மேடையேற்றினர்.

அன்னியரின் வருகையினால் ஈழத்திலேற்பட்ட மாறுபட்ட உறவுகளும், சமூக, அறிவியல் விழிப்பும் பல நாடக மன்றங்களை உண்டாக்கியது. அவை பல வழிகளிலும் கரு, உருவம், பாணி, உத்தி என்பவற்றில் நவீனத்தை உண்டாக்கியவையாகக்காணப்படுகின்றன. அ.ந. கந்தசாமியின் 'மதமாற்றம்', முருகையனின் 'அபசுரம்' ந. சுந்தரலிங்கத்தின் 'கடுழியம்' விழிப்பு ஆகிய வசன நாடகங்களும் மகாகவியின் 'முற்றிற்று', 'கோடை', 'புதியதொரு வீடு' ஆகிய கவிதை நாடகங்களும், இ. மௌனகுருவின் 'சங்காரம்', நடிகர் ஒன்றியம் அளித்த 'கந்தன் கருணை' ஆகிய நாட்டுக் கூத்துக்கள் இன்றைய சமூக, சாதிப் பிரச்சினைகளை அலசி ஆராய்வதாக அமைகின்றன.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் மட்டக்களப்புப் பகுதியில் ஆடப்படும் வடமோடி, தென்மோடி ஆகிய கூத்துக்களை நவீனப்படுத்தி பல்கலைக் கழக மாணவரைக் கொண்டே 'நொண்டி நாடகம்', 'கர்ணன் போர்', 'இராவணேசன்', 'வாலி வதை' ஆகிய கூத்துக்களைத் தயாரித்து சினிமா, நாடகங்கள் ஆகியவற்றை இரசித்து கூத்துக்களை வெறுத்த நகரப்புற மத்தியதர வகுப்பினரைப் பிரமிக்கச் செய்து நாட்டுக் கூத்தின்பால் ஈடுபாட்டை ஏற்படுத்தினர் என்பதும் இங்கு மனங்கொள்ளத் தக்கது.

'சங்காரம்', 'கந்தன் கருணை' ஆகிய கூத்துக்கள், பழமையான கலையாகவும், நூதனமாகவும் இருந்தது இந்தக் கூத்துக்களை மக்களின் நாளாந்த பிரச்சினையோடு ஒட்டியதாகவும், அவற்றிற்குத் தீர்ப்புக் கூறுவனவாகவும் ஒரு புதிய மரபினை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இவற்றை நோக்குகையில் தமிழ் நாடகம் நிச்சயமான ஒரு வரலாற்றை உடையதே என்பது என் கருத்தாகும்.

மல்லிகை ஒரு வரலாற்றுக் கட்டத்தின் தேவையை ஒட்டி ஆரம்பிக்கப்பட்ட மாத இதழ்.

'நமது நாடு கலாசாரப் பாலைவனம்' என தம்மவர்கள் சிலரால் சொல்லப்பட்ட இழிவு மனப்பான்மையை துடைத்தெறிந்து இந்த மண்ணில் உள்ள ஆரோக்கியமான சிந்தனைகளுக்கு தளம் அமைத்துத் தருவதே அதனது தலையாய கடமையும் இலட்சியமுமாக இருந்து வருகின்றது.

இன்றைய உழைப்பை நாம் வீணுக்கு இறைக்கவில்லை. நாளைய நவ இலங்கையை — இலக்கியச் சிந்தனையை — உருவாக்குவதே நமது முதற் பெரும் கடமையாகும்.

12-வது ஆண்டை நோக்கி முன்னேறும் இதனது அழைப்பில் கலந்து கொள்பவர்கள் சந்தா அனுப்பலாம்.

இந்த நாட்டின் இலக்கிய வரலாற்றையே முற்போக்குத் திசை வழியில் மாற்றியமைக்கும் வல்லமை இதற்கு உண்டு. நிகழ் காலத்தை மகத்தான நம்பிக்கையுடனும் புதிய கம்பீரத்துடனும் உற்சாகத்துடனும் வரவேற்கும் இம் மாசிகை, அதற்காக உழைப்பையே பசளையாக்கி வருகின்றது.

இந்தச் சத்திய வேள்வியில் தம்மையும் இணைத்துக் கொள்ள விரும்புவோர் நம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5



'உங்களுடைய பிசாசு அங்கே நிற்கிறது. அதோ அந்த மூலையில் அவளைத் தள்ளிவிட்டு வருகிறேன். நீங்கள் இந்த வழியாக வாருங்கள். உங்களுடன் நான் கொஞ்சம் பேசவேண்டும்' என்றாள் ஹெலன்.

எனது கோட்டின் கழுத்துப் பகுதியில் கையைவைத்துத் தள்ளினாள். நான் சிறிது தயங்கிய போது என்னை நீண்ட தலைமயிரைப் பிடித்துக் கொற இழுவையில் இழுத்துச் சென்றாள். என்னால் அவளுடைய செய்கைகளைத் தடைசெய்ய முடியவில்லை சாதுப் பிள்ளைபோல் அவளைப் பின்தொடர்ந்தேன்.

சாலியின் ஒதுக்குப்புறத்திற்கு வந்ததும் தனது முழுப் பலத்தையும் உபயோகித்து என்னைத் தள்ளிவிட்டாள். நான் சுவருடன் மோதினேன். முதுகு விண்ணென்று வலித்தது.

'மடைப்பயலே, நான் இல்லாதபோது இப்படியா நடந்து கொள்வது? கண்டவளையெல்லாம் இழுத்துக்கொண்டு உலாத்தவா பார்க்கிறாய்?'

நான் தப்பியோட முயற்சித்தபோது ஹெலன் தனது உடலால் சுவருடன் சேர்த்து என்னை அழுத்தினாள். எனக்கு மூச்சுத் திணறியது. செயலற்று நின்றேன். எனது உதடுகளைக் கடித்தாள், முகத்தை விரும்டினாள். அவளுடைய பிடியிலிருந்து என்னை விடுவிக்க முயன்றேன். ஆனால் அவளே என்னைச் சுவருடன் சேர்த்துத் தனது உடலால் பலமாக அழுத்தினாள்.

'ஹெலன், அதோபார் பலர் எங்களையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளாமல் என்னைப் போகவிடு' என்று கெஞ்சினேன்.

'அதுதான் நல்லது. எல்லோரும் உன்னைப் பார்க்க வேண்டும். நீ எப்படியான கோழையென்று எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும். முக்கியமாக அந்தப் பிசாசு இதனை நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்' என்று கூறியபடி முழங்காலை உயர்த்தி எனது அடிவயிற்றில் அழுத்தினாள். என்னால் நெடுநேரம் இந்நிலையில் நிற்க முடியவில்லை. அரை மயக்க நிலையிலிருந்தேன்.

நான் விடுவிக்கப்பட்டுக் கண்களைத் திறந்து பார்த்த போது என்முன்னே ஒலீவியா நின்றுகொண்டிருந்தாள்.

'நீ ஒரு பயங்கரப் பிராணி. இவ்வளவு பேர் முன்னிலையில் இப்படிக் கீழ்த்தரமாக நடந்து கொள்வது உனக்கு வெட்கமாகவில்லையா சனியனே' என்று ஹெலனைப்பார்த்து ஒலீவியா கேட்டாள்.

'சீ கேடுகெட்ட பெட்டை நாயே, நீ எதற்காக எங்களுடைய விவகாரத்தில் தலையிடுகிறாய்? போய் உனது காதலனைக் கட்டிக்கொண்டு அழு' என்று கோபாவேசத்துடன் கூறினாள் ஹெலன்.

ஒலீவியா எதுவுமே பேசவில்லை. மறுபக்கம் திரும்பித் தோள்களைக் குலுக்கினாள். அவளுடைய நடத்தையில் நாகரீகமிருந்தது. ஹெலனின் கண்கள் கோபத்தால் சிவந்திருந்தன. பின்னர் என்னை நோக்கிக் கையைக் காட்டிக்கொண்டு ஒலீவியாவைப் பார்த்துக் கூறினாள்.

'இவர் உன்னை நன்றாகக் கவனித்திருப்பாரென எண்ணுகிறேன். வெட்கங்கெட்டவர்: முன்பின் தெரியாத இன்னொரு மனிதருடன் என்னைப் படத்திற்கு அனுப்பியிருக்கிறார்; அதுவும் கொலைகாரப் படம். படம் மட்டுந்தான் கொலைகாரப் படமென்று நினைக்கிறாயா. என்னைக் கூட்டிச் சென்றவனும் கொலைகாரப்பயல்தான். என்னுடன் எவ்வளவு கீழ்த்தனமாக நடந்திருக்கிறான் தெரியுமா? இவருக்கு அதைப்பற்றியெல்லாம் அக்கறையில்லை. நல்லது, எல்லோருமே இன்பமாக இருங்கள்' என்று கூறிவிட்டு முகத்தைக் குனிந்துகொண்டு விம்மி விம்மி அழுதாள். அழுதபடியே பாதாள அறைக் கதவைத் திறந்தாள்; சிறிது நேரம் கதவோரமாக நின்று எங்களைத் திரும்பிப் பார்த்துக்கொண்டு,

'ஓ! உங்கள் மகிழ்ச்சிக்கு நான் இடையூறாக வந்துவிட்டேனோ? பரவாயில்லை நீங்களாவது மகிழ்ச்சியாக இருங்கள்; உங்கள் மகிழ்ச்சியிலாவது நான் இன்பமடையப் பார்க்கிறேன்' என்று விரக்தியுடன் கூறிவிட்டுச் சென்றாள்.

பேரிடியுடன் கூடிய மழை நின்றதுபோலிருந்தது. ஒலீவியாவின் உதவியுடன் எழுந்து மெதுவாக அவ்விடத்தைவிட்டு நடந்து சென்றேன். களைப்பாக விருந்தது. ஒரு விளக்குக் கம்பத்தினருகே வந்ததும் அதனுடன் சாய்ந்து கொண்டேன். விளக்கு வெளிச்சத்தில் எனது முகத்திலிருந்த நகக் கீறல்களை ஒலீவியா அவதானித்தாள்.

'அவள் மிகவும் கொடியவள். நீங்கள் என்னுடன் வீட்டிற்கு வாருங்கள். என்னிடம் கறுத்தக் களிம்பு உள்ளது, புண்களை உடனே ஆற்றிவிடும்' என்று கூறும்போது அவளுடைய கண்கள் பனித்தன.

நான் ஒலீவியாவுடன் சென்றேன்.

ஒரு கிண்ணம் நிறையத் தக்காளிப்பழச் சாறு கொண்டு வந்து எனக்கு ஊட்டினாள். மதுவின் போதை தணிந்தது. எனது காயங்களைக் கழுவி பருத்தித் துவாலையினால் முகத்தை ஒற்றி விட்டுக் கீறல்களில் களிம்பைத் தடவினாள். பின்னர் என்னைக் கைத்தாங்கலாக அழைத்துச் சென்று தனது படுக்கையில் வளர்த்திவிட்டு இராப்போசனம் தயாரிக்கச் சென்றுவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய கட்டில் மிகவும் பெரிதாக அந்த அறையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. சுவரோரத்தில் ரேடியோகிராமும் அதனருகே ஒரு சிறிய புத்தக அலுமாரியும் காணப்பட்டன. லிலியுயர்ந்த ஓவியங்கள் சுவரில் பதிவாகத் தொங்கவிடப்பட்டிருந்தன. இந்த ஓவியங்களுக்காக அவள் பெருந்தொகையான பணம் செலவு செய்திருக்கிறாள்.

'ஓலீவியாவின் குரல் சமையலறையிலிருந்து கேட்டது' 'அப்படிப்பட்ட ஒரு பெண்ணுடன் உங்களை இணைத்துப் பார்ப்பது வேதனையாக இருக்கிறது

திறந்திருந்த கதவுவழியாக வந்த வெண்காயப் பொரியலின் மணம் மூக்கைத் துளைத்தது. இந்த மணம் எனக்கு மிகவும் பிடிக்கும். வாணலியைச் சுரண்டும் சத்தம் கேட்டது. உருளைக் கிழங்கு பொரிக்கிறாள் போல இருக்கிறது.

'நீங்கள் அவளிடத்தில் என்ன அற்புதத்தைக் கண்டீர்கள். அவள் ஒரு அதிகப்பிரசங்கி. முகப் பூச்சுக்களை அள்ளிப் பூசிக்கொண்டு அலங்கோலமாகத் தன்னை அலங்கரித்துக் கொள்கிறாள். மட்டரகமான பெண். அவளிடம் உடற்கவர்ச்சியைத்தவிர வேறெதுவுமே இல்லை' என்றாள் ஓலீவியா.

அந்த நவீன கட்டிடத்தில் அவளுடைய காலடியோசை துல்லியமாகக் கேட்டது. அந்தப் பெரிய கட்டிடத்தில் ஓலீவியாவினுடையதைப் போல பலநூறு குடியிருப்புக்கள் இருந்தன. ஒரு சிறு சதுரத்தினுள் படுக்கையறை, குளியலறை, சமையலறை, வரவேற்பறை, மலகூடம் யாவுமே கச்சிதமாக அடங்கியிருந்தன. மனிதன் தனிமையிலிருக்கும்போது ஏற்படும் 'கிடஸ்ரோபோபியா' என்ற நோயினால் பீடிக்கப்படாமல் ஓலீவியா எப்படித்தான் தப்பித்தாளோவென்று நான் அதிசயித்தேன்.

'நிட்சயமாக நீங்கள் ஒரு நல்ல பெண்ணைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். எப்படியாவது உங்களுக்குப் பொருத்தமான நல்ல பெண்ணைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். இன்றைல் அதற்காக நீங்கள் பெரிதும் வருந்தவேண்டியிருக்கும்' என்று சமையலறையிலிருந்த வாறே சத்தமிட்டுக் கூறினாள்.

நான் எழுந்து குளியலறைக்குச் சென்றேன். அளவிற்கதிகமாக பியர் அருந்தினால் இத் தொல்லை ஏற்பட்டே தீரும். அங்கிருந்து நான் திரும்பும் போது ஓலீவியா உள்ளே சென்றாள். அவள்கூடச் சிறிது அதிகமாகப் பியர் அருந்தியிருந்தாள்.

"நீங்கள் தூங்குகிறீர்களென நான் நினைத்தேன்' என்றாள்.

'இல்லைச் சிறிது ஓய்வாகப் படுத்திருந்தேன், அவ்வளவுதான்' என்றேன்.

'சரி வாருங்கள். உணவு தயாராக இருக்கிறது'

மிக அருமையான உணவை ஓலீவியா எனக்குப் பரிமாறினாள். பொரித்த வெண்காயத்துடன் பதப்படுத்திய இறைச்சித் துண்டுகளைச் சாப்பிட்டோம். பின்னர் வெறும் கோப்பியும் பிறண்டியும் குடித்தோம். பெரிய சுருட்டொன்றை எடுத்து நான் பற்றவைத்தேன். ஓலீவியா மேசையின்மேலே குனிந்து கைகளை நீட்டி மறு ஓரத்திலிருந்த சிகரெட் பெட்டியை எடுத்துப் புகைத்துக்கொண்டு ஓவியங்களைப்பற்றிப்பேசவாரம்பித்தாள்;

'இந்த நவீன ஓவியங்களெல்லாம் எவ்வளவு சிறப்பாகவிருக்கின்றன, பார்த்தீர்களா?' என்று சுவர்களிற் தொங்கிய ஓவியங்களைக் காட்டிக் கேட்டாள்.

'நான் அளவிற்கதிகமாக குடித்துவிட்டேன் போலிருக்கிறது. ஓவியங்களெல்லாம் கலங்கலாக, ஒன்று பலவாக, சில தலைகீழாகவும் தெரிகின்றன' என்றேன்.

'உங்களுக்கு அவைகளெல்லாம் அப்படித்தான் தோன்றும். நீங்கள்தான் பெரிய பழமைவாதியாச்சே' என்று கூறிவிட்டுக் கட்டிலிலிட்டு எழுந்து நின்றாள்.

நான் இன்னும் கொஞ்சம் பிறண்டி அருந்தினேன். எனது விழிகள் பாதி மூடியிருப்பதை ஓலீவியா அவதானித்திருந்தாள் போலிருக்கிறது.

'போதும், இனி நிறுத்திக் கொள்ளுங்கள். வாருங்கள் படுப்போம்' என்று கூறியபடி பிறண்டிப் போத்தலை எடுத்து அலுமாரியில் வைத்தாள்.

நாங்கள் உடுப்புக்களைக் களைந்தோம். ஓலீவியா பிஜாமா அணிந்துகொண்டாள். நான் நிர்வாணமாகவே அவளருகே படுத்தேன்.

'உங்கள் நண்பர் நிட்சயமாக ஒரு மேதையாகத்தானிருக்க வேண்டும்' என்றாள் ஓலீவியா.

'யாரைச் சொல்கிறீர்கள்?'

'ஹரல்ட் மூனை'

'நீங்கள் சொல்வது அழகாயிருக்கிறது. உங்களைச் சந்திப்பதற்கு அவரை வரச்சொன்னேன். ஆனால் அவரோ ஹெலனை அழைத்துக்கொண்டு 'தெலொட் ஜர்' படம் பார்க்கச் சென்றுவிட்டார்'

'அந்தக் கிறுக்கி அவரைப் பாழக்கியிருக்க மாட்டாளென்று நினைக்கிறேன்'

'பொறுமைப்படாதீர்கள்'

'நீங்கள்தான் பொறுமைப் படுகிறீர்கள். இப்படி மடத்தனமாக நடந்துகொள்வது நல்லாவேயில்லை' என்றாள்.

'தயவுசெய்து இப்போது என்னுடன் சண்டைபிடிக்க வேண்டாம். நான் களைத்துப் போயிருக்கிறேன்; பேசாமற் படுத்து நித்திரை செய்யுங்கள். நீங்கள் ஹரல்ட் மூனைப்பற்றி கனவு காணுங்கள், நான் எனக்குப் பொருத்தமான நல்ல பெண்ணைப்பற்றிக் கனவு காணுவேன்.

ஓலீவியா எதுவுமே பேசவில்லை. முழங்கைகளை ஊன்றி தலையணைகளுக்கு அப்பாலிருந்த நீண்ட தின்னை எடுத்து இருவருக்குமிடையே போட்டாள். நான் அவளுக்கு முதுகு காட்டிப் படுத்தேன். அவள் விளக்கை அணைத்தாள்; ஓலீவியா அந்தத் தின்னைப் போட்டிருக்கவே தேவையில்லை. எனக்கும் ஓலீவியாவிற்குமிடையே அவள் எதிர்பார்த்த எதுவுமே நடக்க நியாயமில்லை. நான் அவ்வளவு பலவீனமானவனல்ல;

★

சனிக்கிழமைகளில் திருமதி பிறவுண் கடைக்கு வரமாட்டாள்; சாரிங்குரோசிலுள்ள புதிய வியாபாரிகளைப் போலல்லாது புளூம்ஸ்பரியிலுள்ள நாங்கள் சனிக்கிழமை காலையில் மட்டும் கடைகளைத் திறந்து வைத்திருப்போம்; எனவே இரண்டு மணிநேர வேலைக்காகத் திருமதி பிறவுண் பல்காமிலிருந்து நீண்டதூரம் பிரயாணம் செய்து வந்துபோவதில் அர்த்தமில்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனிக்கிழமைகளில் அவ்வளவு வியாபாரம் நடப்பதுமில்லை. யாராவது ஒருசிலர்தான் வருவார்கள். வராமற் போவதுமுண்டு. அப்பொழுதெல்லாம் எனது செயலகத்தில் ஒய்வாக அமர்ந்து சிந்திப்பதற்கு எனக்குப் போதிய நேரம் கிடைக்கும். சிலபோது தொலைபேசி அழைப்புக்கள் எனது சிந்தனைகளுக்குத் தொல்லை தருவதுமுண்டு.

அப்படியாரு சனிக்கிழமை. அன்றுமுழுவதும் ஒருவரும் வரவில்லை. நான் நகங்களை நகம்வெட்டியால் தேய்த்துவிட்டுக் கொண்டு கோப்பியருந்தினேன். அவ்வார வீற்பனை. இருப்புக்களைக் கணக்கெடுத்தேன். வெந்நீரிற் தோய்த்துப் பிழிந்த துவாலையால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டிருந்தபோது யாரோ என்னை அழைத்தார்கள், கதவைத் திறந்தேன், கண்களை அகல விரித்தபடி அழகான ஒரு பெண் நின்றிருந்தாள். நல்ல சகுனம்.

'மாலை வந்தனங்கள். உங்களுக்கு என்ன வேண்டும்.?'

'நவீன சிறுகதை தொகுப்பொன்று வேண்டும்' என்றாள்.

நல்லது சோமசெற் மாமின் 'தறவுண்ட் டசின்' இருக்கிறது'

'அது நவீனமானதல்ல. அத்துடன் அத்தொகுப்பு என்னிடம் இருக்கிறது' என்றாள்.

அலுமாரியிலிருந்து ஒரு புதிய புத்தகத்தை உருவியெடுத்தேன். 'இது உங்களுக்குப் பிடிக்குமென நினைக்கிறேன். அல்டஸ் ஹக்ஸிலியின் 'தலிற்றில் மிச்சிக்கன்'

'அதுகூட நவீனமானதல்ல அத்துடன் அதனை நான் வாசித்துமிருக்கிறேன்'

'சரோயனின் கதைகள் பிடிக்குமோ?' என்றுகேட்டேன்.

'நல்லது இப்போதுதான் நீங்கள் எனது சுவையை அறிந்தீர்கள். சரோயனின் புத்தகங்கள் என்ன இருக்கின்றன?'

'லவ் கியர் இன் மை ஹாற், தறபிள் வித் ரைகர்ஸ், தடாறிங் யங் மான் ஒன் தபியூ யிங் றப்பாஸ், மை நேம் இஸ் அரய் அனேகமாக அவர் எழுதிய அத்தனை புத்தகங்களும் இருக்கின்றன.

அவளுக்கு முதுகைத் திருப்பிக்கொண்டு புத்தகப் பட்டியலை வாசித்தமையால் அவளுடைய முகபாவங்களை என்னால் கவனிக்க முடியவில்லை. வாடிக்கையாளர்களின் முகபாவங்களைக் கொண்டே நல்ல ஒரு வியாபாரி தனது காரியத்தைச் சாதிக்க முடியும்.

'அத்துடன் சரோயன் இறுதியாக எழுதிய 'தபெஸ்ற் சோட் ஸ்ரோறீஸ் ஒவ் சரோயன்' என்ற புத்தகத்தையும் நான் படித்துமுடித்துவிட்டேன்' என்றாள்.

இத்துடன் அவள் வேறு கடைக்குச் சென்றுவிடுவாளென்று எதிர்பார்த்தேன். எனது எதிர்பார்ப்புப் பொய்த்துவிட்டது. கைப்பையைக் கதிரையில் வைத்துவிட்டுப் புத்தக அலுமாரியை அமைதியாக நோட்டமிட்டாள். இப்படியான வாடிக்கையாளர்கள் வந்தால் சனிக்கிழமை முழுநேரமும் கடையைப் பூட்டமுடியாது என எண்ணினேன்.

'உங்களிடம் வேறு என்ன இருக்கிறது?' என்று கேட்டாள்.

'கொஞ்சம் இருங்கள். ஆ! இதோ ஹேமிங்வேயின் அருமையான புத்தகம் போட்டி நைன் ஸ்ரோறீஸ்!'

'அதனை வாசித்த நினைவுகள் இன்னும் எனது நெஞ்சை விட்டகலவில்லை'

பெருமூச்செறிந்தவாறு அப்புத்தகத்தை அது முன்பிருந்த இடத்தில் வைத்தேன். அவளிடம் மேற்கொண்டு வாயைக் கொடுக்க முடியாதெனத் தீர்மானித்தேன். இறுதியாக உண்மையிலேயே இவள் புத்தகம் வாங்கத்தான் வந்திருக்கிறாளோ வென்ற சந்தேகம் தலைதூக்க ஆரம்பித்தது.

ஒரு வாடிக்கையாளருக்கும், வியாபாரிக்குமிடையேயுள்ள சாதாரண உறவை முறித்துக் கொண்டு திடீரென ஒரு கேள்வி கேட்டாள்.

'நீங்கள் எழுதிய புத்தகங்களைப்பற்றி எதுவுமே சொல்லவில்லையே'

'நான் எழுத்தாளனென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'

'சஞ்சிகையில் உங்கள் படைப்புக்களை வாசித்திருக்கிறேன். உங்கள் சிறுகதைகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன' என்றாள்.

'நல்லது, எனது அறைக்கு வாருங்கள் இலக்கியங்கள்பற்றிப் பேசுவோம்'

தனது கைப்பையை எடுத்துக்கொண்டு என்னைப் பின் தொடர்ந்தாள். எனது ஆடும் கதிரையில் அவளை அமரச்செய்தேன், கதிரை முன்னும் பின்னும் இருமுறை ஆடியது.

'ஓ! அருமையாக இருக்கிறது' அவளுடைய விழிகள் ஆச்சரியத்தால் விரிந்தன,

'இன்னொருமுறை ஆடிப் பாருங்கள் இன்னும் அருமையாகவிருக்கும். இது ஓர் இலக்கியக் கதிரை'

அவள் புன்னகைத்துக் கொண்டு ஒரு குழந்தையின் வெகுளித்தனத்துடன் ஆடினாள். நான் அவளிடம் விடைபெற்றுக் கோப்பி வாங்கச் சென்றேன். இத்தாலியப் பரிசாரகி அழகாகச் சிரித்துக்கொண்டே 'இன்னொரு புத்திஜீவிப் பெண்ணை:' என்று குறும்பாகக் கேட்டாள்.

'ஆம், பெண்கள் இன்னும் பெண்கள்தான்' என்றேன். இது அவளுக்கு மகிழ்வூட்டியது. ஏனெனில் முன்பொருமுறை அவள்தான் இதனை எனக்குச் சொல்லித்தந்தாள்.

நான் கடைக்குத் திரும்பியபோது எனது புதிய வாடிக்கையாள ரசிகை ஆடும் கதிரையில் வசதியாகச் சாய்ந்துகொண்டு புத்தகமொன்றில் மூழ்கியிருந்தாள். அவள் அமர்ந்திருந்த முறை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

'கோப்பி குடியுங்கள்' என்றேன்.

'மிகவும் நன்றி, உங்கள் வாடிக்கையாளர் எல்லோருக்குமே கோப்பி கொடுப்பீர்களா'

'இல்லை உங்களைப் போல ஒருசிலருக்கு மட்டுந்தான் கொடுப்பேன்'

'நான் முன்பே உங்களைச் சந்தித்திருக்கிறேன். நினைவிருக்கிறதா? உங்கள் விரிவுரையொன்றில் நான் உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டபோது தட்டெழுத்துத் தெரியுமாவென்று கேட்டீர்களே, நான் ஆமென்றபோது உங்களுடைய கதைகளைத் தட்டச்சிற் பொறித்துத்தர முடியுமாவென்று கேட்டீர்களே; அன்றுதான் நீங்கள் ஓர் எழுத்தாளனென்று நான் அறிந்துகொண்டேன். அதன்பின்னர் சஞ்சிகையொன்றிற் பிரசுரமான உங்கள் கதையைப் படித்தேன்' என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தட்டச்சிற் பொறித்துத் தரச் சம்மதித்தீர்களா?'

'ஆம், நான் உங்களுடன் தொடர்பு கொள்வேனென்று கூறியபோது உங்கள் தொலை பேசி எண்ணைத் தந்தீர்கள், நீங்கள் எல்லாவற்றையுமே மறந்துவிட்டீகள்' என்றாள்.

'ஓ! எனக்கு இப்போது நினைவுவருகிறது. ஆனால் நீங்கள் தான் அவளென்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை'

"நான்தான் அவள், அப் போது நான் நீண்டமுடி வளர்த் திருந்தேன்'

'மிக நீளமான கூந்தல். எனக்கு அது மிகவும் பிடித்தி ருந்தது. அதனை ஏன் வெட்டி னீர்கள்?'

'அதைச் சுமப்பது களைப்பை ஏற்படுத்துகிறது'

'என்னுடன் பேசுவது உங் களுக்குக் களைப்பாயிராதென எண்ணுகிறேன்'

'நிட்சயமாக இல்லை'

வேறெங்கோ பார்த்துக் கொண்டு பதிலளித்தாள். பின் னர் மெதுவாக எழுந்து அடி மேலடிவைத்து நடந்தாள். நான் எழுந்து சென்று அவளுடைய கைகளைப்பற்றி உள்ளே வரு மாறு அழைத்தேன். அவள் மறுத்தாள்.

'பரவாயில்லை இங்காவது வாருங்களேன்' என்றேன்.

'எங்கே?' என்று கேட்ட வாறே என்னைத் தொடர்ந்தாள்.

கடைக்கும் காரியாலயத் திற்குமிடையேயிருந்த தடுப்பின் பின்னால் அவளை அழைத்துச் சென்றேன். சுவரில் சாய்ந்து கொண்டு அவளை அள்ளியெடுத்து முத்தமிட்டேன்.

'நீங்கள் மிகவும் அவசரக் காரர்' என்று சிணுங்கினாள்.

இடது கையால் அவளை என்னுடன் சேர்த்துக்கொண்டு வலதுகையை அவளுடைய உட லில் அலைபாய விட்டேன். அவ ளுடைய மிருதுவான அங்கங் கைதேர்ந்த ஒரு சிற்பியாற் செதுக்கப்பட்ட அழகிய சிலை யொன்றின் அங்கங்களைப் போன்று கனகச்சிதமாக அமைந் திருந்தன.

(தொடரும்)

புதிய சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா [மலர் உட்பட]	12 — 00
தனிப்பிரதி	— 75
இந்தியா, மலேசியா	18 — 00

(தபாற் செலவு உட்பட)

[illegible]யின் நீண்ட நாளைய நண்பர் தோழர் ஐ. ஆர். ஏ. [illegible]யில் சென் தோமஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்துக் கொண்டிருந்த காலத்தில் — 1944-ம் ஆண் டில் — மாத்தறைப் பட்டினசபைத் தேர்தலில் முதலாம் வட்டாரத்திற்கு வேட்பாளராக நின்று நூலிழை சொச் சம் வாக்குகளால் இவர் தோற்றவர். மாத்தறைச் சரித் திரத்திலேயே ஒரு தமிழன் தேர்தலில் நின்றது ஒரு புதுமை. இந்தப் புதுமைக்குப் பின்னணி அமைத்தவரே தோழர் எஸ். ஏ. விக்ரமசிங்கா அவர்கள்தான்.

ஆசிரியர்

இந்நாட்டின் பல தலைமுறையினரைத் தொடர்ந்து பாதிக்கக்கூடியவர்.

ஐ. ஆர். அரியரத்தினம்

டாக்டர் எஸ். ஏ. விக்ரம சிங்காவின் 75-வது பிறந்த தி னத்தை இலங்கையிலுள்ள கம் யூனிஸ்ட்டுக்களும், ஏனையோரும் இந் நாட்டின் அரசியல் வாழ் வில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகக் கொண்டாடுகின் றனர்.

கடந்த கால தலைவர்களை யும் அண்மைக்காலத்திய தலை வர்களையும் எமது நாட்டு பத் திரிகைகளும், சஞ்சிகைகளும் போற்றிப் பாராட்டி இலங்கை யின் சுதந்திரத்திற்கும், அபி விருத்திக்கும் அவர்கள் ஆற்றி யுள்ள சேவைகள் குறித்து துதி பாடியுள்ளன. எனினும் இதே பத்திரிகைகளும், சஞ்சிகைக ளும் டாக்டர் விக்ரமசிங்கா வைப்பற்றி குறிப்பிடுவது அரி திலும் அரிது! இந்நாட்டின் அரசியல் வாழ்க்கையில் டாக் டர் விக்ரமசிங்கா அவர்கள் 1931-ம் ஆண்டு தொடக்கம் (அவ்வாண்டிலே அவர் முதல் சட்டசபைக்கு தெரிவு செய்யப் பட்டார்) பங்குபற்றி வருகின் றார். இன்றைய இலங்கை தலை வர்களில் வேறெவரேனும் இதற்கு நிகரான சாதனையை சாதிக்கவில்லை. எனவே டாக் டர் விக்ரமசிங்காவின் பெயர் புறக்கணிக்கப்படுவது தற்செய லானது அல்ல. அவரது முழு அரசியல் வாழ்வும் இந்நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தினதும் விவசாயிகளினதும் விமோசனத் திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள் ளது. இந்நாட்டிலுள்ள பத்திரி கைகள் சஞ்சிகைகளுள் பெரும் பாலானவை இவ்வர்க்கங்களின் நலனில் அக்கரை கொள்ளாதி ருப்பதனால் அவை டாக்டர் விக்ரமசிங்கா இந் நாட்டின் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவையை புறக்கணிப்பது வியப்பல்ல. மேலே குறிப்பிட்டவாறு 1931ல் டாக்டர் விக்ரமசிங்கா இந்நாட் டின் அரசியல் வாழ்வில் அடி யெடுத்து வைத்தார். எமது நாட்டின் அண்மைக்கால வர லாற்றில் இவ்வாண்டு முக்கியத் துவம் வாய்ந்ததாகும்.

ஒரு நூற்றாண்டுக்கு மேலாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந் நாட்டை ஆண்டு வந்திருந்தது. இந்நாட்டை ஒரு 'சிறு இங்கி லண்ட்' டாக மாற்றுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தனர். (சிறு இங்கிலண்ட் என்ற சொற்றொடரை முதன் முதல் பயன்படுத்திய முன்னோள் ஆள்புநாயகம் ஸர் ஒலிவர் குணதிலகாவிற்கு இன்று நேர்ந்துள்ள கதி எல்லோரும் அறிந்ததே) இந்நோக்கத்தை மனதில் கொண்டு அவர்கள் டொனமூர் அரசியல் அமைப்பை உருவாக்கி சர்வசனவாக்குரிமையின் கீழ் பொதுத் தேர்தலை நடாத்தினர். அரசசபை தமக்குக் கிழ்ப்படியக்கூடிய அடிவருடிகளால் நிரப்பப்படுமென அவர்கள் எண்ணினர். இந்த எதிர்பார்ப்பு பெரும்பாலும் வீண்போகவில்லை. ஏனெனில் அரசசபைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் பெரும்பாலோர் தோட்டச் சொந்தக்காரர்கள், பெரிய வியாபாரிகள், நிலக்கிழார்கள். இவர்களது நலன்கள் ஏகாதிபத்திய வாதிகளது நலன்களோடு பின்னிப் பிணைந்திருந்தன. ஆனால் டாக்டர் விக்ரமசிங்கா அவர்களும் இவ்வரசசபைக்குத் தெரிவு செய்யப்பட்டது அவர்களுக்குத் திகைப்பாக இருந்தது. அரசசபையை மேலடையாகப் பயன்படுத்தி டாக்டர் அவர்கள் இலங்கைக்கு பூரண சுதந்திரம் என்ற சுலோகத்தை முன் வைத்தார். இந்நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர்கள் என பல பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. இவ்வாறு குறிப்பிடப்படுபவர்கள் யாவரும் 1931-ல் அரசசபையில் வீற்றிருந்தவர். ஆனால் இவர்களில் எவரேனும் அக்காலகட்டத்தில் சுதந்திர சுலோகத்தை எழுப்பத் துணியவில்லை. தன்னந்தனியாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இலங்கையின் சுதந்திரத்திற்கு குரல் கொடுத்தவர் டாக்டர் விக்ரமசிங்கா மட்டுமே.

டாக்டர் விக்ரமசிங்காவின் அரசியல் சார்புகள் அவரது வாலிபப் பருவத்திலேயே உருவாக்கப் பட்டன. 1915-ல் நிகழ்ந்த கலவரங்களின்போது இலங்கைப்பிரஜைகளை ஏகாதிபத்யவாதிகள் மிலேச்சத்தனமாக நடத்தியதை அவர் தன் கண்களால் கண்டார். இக் கலவரங்கள் வகுப்புக் கலவரங்கள் என ஏகாதிபத்தியவாதிகளால் லர்ணிக்கப்பட்டது. ஆனால் உண்மையில் இந்நாட்டிலே ஏகாதிபத்திய எதிர் இயக்கத்தின் தொடக்கமே அவை. தனது கண்களால் கண்ட மிருகத்தனமான அடக்கு முறைகள் டாக்டர் விக்ரமசிங்காவின் மனதில் ஆழப் பதிந்தன. இந்நாட்டின் விடுதலைக்கு குறிப்பாக நசுக்கப்பட்ட தொழிலாள, விவசாயிகளின் விடுதலைக்கு, தனது வாழ்வை அர்ப்பணிப்பதென்று அன்றே அவர் முடிவுசெய்தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் மருத்துவம் படிப்பதற்காக பிரிட்டனுக்குச் சென்றிருந்தபோது பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளுடன் அவருக்கு தொடர்பு ஏற்பட்டு அவர் கம்யூனிஸ்ட்டாக மாறினர்.

1931-ல் அவர் இலங்கை திரும்பியதும் உடனடியாக தேர்தல் களத்தில் குதித்தார். அன்று தொட்டு அவரது முழு வாழ்வும் இந்நாட்டின் உழைக்கும் மக்களின் மேம்பாட்டுக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்கும் அர்ப்பணிக்கப்பட்டு வந்துள்ளது.

அவரின் நீண்ட அரசியல் வாழ்வின்போது தனது சொந்த இடமாகிய மாத்தறையில் அவருக்கு பெருந்திரளான மக்கள் ஆதரவு கிடைத்தது. அந்தப் பகுதியில் உள்ள ஏறக்குறைய எல்லோருக்குமே அவரை நன்கு தெரியும். அவரை மக்கள் இதயபூர்வமாக நேசிப்பதற்கு காரணம் நசுக்கப்பட்டவர்களுக்காக அவர் போர்க்குரல் கொடுத்தது மட்டுமல்ல ஆயிரக்கணக்கானோர்க்கு அவர் அதிக கவனமெடுத்து மருத்துவ சிகிச்சை அளித்துள்ளதுமேயாகும்.

நீண்டகால அரசியல் தலைவர் என்ற முறையில் அவர் பல்வேறு கருத்துக்களைக் கொண்ட தமிழர்களுடன் நிலையான தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளார். 1930 களில் அவர் யாழ்ப்பாணத்தில் இளைஞர் காங்கிரசின் மேடைகளில் அடிக்கடி தோன்றினர். இந்நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய யாழ்ப்பாணத்தவருடன் அவர் தோளோடு தோள் நின்று உழைத்தவர். பின்னர் தமிழ்ப் பகுதிகளில் கம்யூனிஸ இடதுசாரி இயக்கங்கள் தோன்றுவதற்கு வழிகாட்டியாக இருந்தார். தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்கு அவர் என்றுமே வாதாடிவந்துள்ளார். இவரது தொண்டுகளின் பயனாகவே பல தமிழ் முற்போக்குவாதிகள் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்துள்ளனர்.

தொழிற்சங்க இயக்கத்தை உருவாக்குவதில் டாக்டர் விக்ரமசிங்கா முன்னணியில் நின்று உழைத்தார். இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் முதல் தலைவராக அவர் விளங்கினர். தலைவர் என்ற முறையில் இச்சம்மேளனம் உலகத் தொழிற்சங்க சம்மேளனத்துடன் இணைவதற்கு அவர் உதவினர்.

உலக கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவராக டாக்டர் விக்ரமசிங்கா மதிக்கப்பட்டு வருகின்றார். கம்யூனிஸ்ட், தொழிலாளர் வர்க்க கட்சி பிரதிநிதிகளின் கூட்டங்களில் இந்நாட்டின் பிரதிநிதியாக அவர் கலந்துள்ளார். அவரது சொற்பொழிவுகளும் கருத்துக்களும் போற்றி மதிக்கப்படுகின்றன.

டாக்டர் விக்ரமசிங்காவின் செல்வாக்கு இந்நாட்டின் பல தலைமுறைகளை தொடர்ந்தும் பாதிக்கும். இந்நாட்டிற்கு அவர் மேலும் பல்லாண்டுகள் சேவையாற்ற வேண்டும் என்பதே எமது வேணவாவாகும். ★

நிதிதந்தோர் பட்டியல்

'செங்கை ஆழியான்'	250 - 00
நிருமதி விஜயலக்ஷ்மி ராஜநாயகம் கொழும்பு.	250 - 00
நிரு. வே. கணபதிப்பிள்ளை கொழும்பு.	100 - 00
நிருமதி றீற்ரு இன்னாசித்தம்பி இளவாலை	100 - 00

(மிகுதி தொடர்ந்து வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ப் பலகைகள்

தேகுவலேலை-கமால

பசியின் அகோரம் பொறுக்க முடியவில்லை. எங்காவது போய் எதையாவது சாப்பிட வேண்டும் போலிருந்தது எனக்கு! எனக்கு மட்டுமல்ல; மற்ற நண்பர்களுக்கும் அப்படித்தானிருந்திருக்கும்.

அப்புஹாமிபஆலவ்வாலாவ, சாந்திகபே இன்னும் பெயர் பொறிக்கப்படாத எத்தனையோ ஹோட்டல்களும் நகர்ந்து விட்டனவே

முன்னே நடந்துகொண்டிருந்த நண்பர்களின் பின்னால் நானும் தொடர்ந்து கொண்டிருந்தேன். நண்பர்கள்தான் என்ற போதும் இந்தப் பயணத்தில் நான் அவர்கள் இருவரிலும் தங்கியிருப்பதன் என்ற காரணம் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தது.

'வாஸீலீம்' எதையோ அவதானித்துக் கொண்டுவந்த எனக்குத்தான் இந்த அழைப்பு.

ஆறுதல் பெருமூச்சோடு மூவரும் உள்ளே ஏறினோம். காசு எடுப்பதும் கொடுப்பதுமான தெருக்கடிக்குள்ளும் கசியர் மேசையில் அமர்ந்திருந்தவர் எங்களையும் ஒருமுறை பார்த்து புன்னகைத்ததோடே சுவரில் பொருத்தியிருந்த சுவிச்சை அழுத்த உள்ளே 'டிரிங்' என்று மணி அலறியது. அது எங்களைக் கவனிக்குமாறு பணிக்கும் 'வியாபாரப் பாசை' தான் போலும்!

என் நண்பர்கள் நான்கு புறமும் சுழன்றனர். உள்ளே ஒரு மாளிகை மாதிரி மின் விளக்குகள் பளபளத்துக் கொண்டிருந்தன. சுவர் தெடுக ஒன்றரையடி அகலத்துக்கு கண்ணாடிப் பாலங்கள் பொருத்தப்பட்டிருந்தமை, கடையின் உள் அழகை இன்னும் விரித்துக் காட்டியது. நடுவில் உணவுப் பொருட்கள் பரத்திய கண்ணாடிக் கேஸ்கள் நீட்டுக்கும் வைக்கப்பட்டிருந்தன எங்கும் காட்சிதந்த சுவையூறும் காட்சிகள் என்னைக் கிறங்கவைத்ததில் வியப்பில்லையே!

'ஆ...மஹத்துரு மெஹாட்ட' என்ட' மார்பல் மேசையை அழுத்தித் துடைத்தபடியே, எங்களைநோக்கி இந்த அழைப்பை விடுத்தான் ஒரு வெய்டர்.

அங்கே ஒரேயொரு மேசை மாத்திரந்தான் மூன்று பேர் அமரத்தக்கதாக காலி இடங்களோக் கொண்டிருந்தது. மூவரும் போய் அதிலமர்ந்தோம்.

'கொஞ்சம் தண்ணீர் தாங்கொ குடிக்க' தங்களோ இனங்காட்டி கொண்டதான நீளப்பு ஜப்பாருக்கு'

மூன்று பெரிய இளாஸ்களில் வந்து சேர்ந்த தண்ணீரைக் குடிக்கும் குளிர்மையினூடே, உடலில் அப்பியிருந்த களைப்பு கொஞ்சம் கொஞ்சமாகக் கலைவது போலிருந்தது.

'என்னதொரே சாப்பிடப் போறீங்க?'

'எனத்தியன் ஸலீம் தின்னிய?' முஸ்தபா என்னைப் பார்த்துக் கேட்டான்.

'எனதியென்டாலும் சரி' மரியாதைக்காகக் கேட்ட கேள்விதானே. அதற்கேற்ற பாணியிலேயே நானும் பதில் சொன்னேன். மனதுக்குள்ளே சோகேஸ்களில் தெரிந்த ரோஸ் கோழி, இறைச்சிப் பொரியல் எல்லாம் சுழன்று மறைந்தன.

'மூனு சோறு போடவா?' வெய்டரின் கேள்வி.

'கொஞ்சம் லேட்டாத் தின்டா நல்லாயிக்கும்' ஜாபிரின் முடிவு.

'புட்டு..... இடியப்பம்..... வீச்ரொட்டி எல்லாம் இன்டே சாமான்தான்..... வீச்ரொட்டி யென்டா சுடச்சுடத் தரேலும்'

'இடியப்பம் கொணு வாங்கொ'

ஒரு தட்டு நிறைய இடியப்பம் — வெறும் கோதுமை மாத்தயாரிப்புதான் — வந்து சேர்ந்தது. அதோடு பிளேட்களும் வந்தன.

'ஆட்டுடறச்சி... மாட்டெறச்சி... மீன்... என்னதொரே வேணும்?'

'மாட்டெறச்சி கொணு வாங்கொ'

சிறு பேஸினென்றில் வந்து சேர்ந்த இறைச்சிக் குழம்பை புரட்டிப் பார்த்துக்கொண்டே முஸ்தபா கேட்டான். 'வேற கறியள் இல்லயா?'

'இல்ல தொரே' ஒருகணம் யோசித்துவிட்டு இப்படிச் சொல்லிவிட்டு, அடுத்த மேசைக்குத் திரும்பினான்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு அடுக்கு இடியப்பத்தை எடுத்து வைத்துக்கொண்டோம். எப்படியும் ஏழெட்டுக்கு மேல் போகாது ஜாபிர் ஒவ்வொரு துண்டு இறைச்சி பதிர்ந்து போனான்.

தகித்துக் கொண்டிருந்த பசி இன்னும் என்னை நிம்மதியாக இருக்க விடவில்லை. வீட்டில் சாப்பிடும் நினைவோடு இடியப்பங்களைப் பிசைய, வெறும் பசை உருண்டையாக மாறிக்கொண்டிருந்தது. உருட்டி விழுங்குவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்.....?

'ரோஸ்..... மிஸ்டேக்..... ஸ்பெஷல் ஏதாவும்...' அதே பழைய வெய்டர். மேசையில் ஒரு கையை ஊன்றி உதவிக்குத் தயாராக நின்றான்.

வேண்டாம் என்ற பொருள் படும் தலையசைவை நான் முன் வைத்தேன்.

அடுத்தடுத்த மேசைகளிலும் சாப்பாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவர்கள் அந்த நகரத்து வியாபாரிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிப்பந்திகளும்தான் போலும். அந்தக் கண் சுழற்றல், தற்செயலாக எதிர்ப்பக்க சுவர்க் கண்ணாடியில் போய் நிலைகுத்தி என்னையே எனக்குத் துலாம்பரமாக்கிக் கொண்டிருந்தது.

என்னை அலங்கரித்துக் கொண்டிருந்த சேட்டுக்கும் ஸாரத்துக்கும் இன்றோடு நான்காவது நாள் வியர்வை கசிந்து பளபளக்கும் முகம்..... இரண்டு நாட்களாக முகம் வழிக்காத உறுத்தல் வேறு! என்னைவிட நண்பர்கள் அவ்வளவு வித்தியாசமாகத் தோற்றமளிக்காதது எனக்கு நிம்மதியைத் தந்து கொண்டிருந்தது.

'தின்னப்பா எனத்தியன் பாத்துக்கோனிக்கிய' மூஸ்தாபா என்னைப் பார்த்துச் சொன்னபடி இன்னொரு இடியப்ப அடுக்கைத் தனது பிளேட்டில் எடுத்து வைத்தான்.

விடுவேனா, நானும் அந்த வழிகாட்டலைத் தொடர்கையில் இன்னொரு பேஸன் இறைச்சிக் குழம்பும் வந்து சேர்ந்தது.

ஊரிலிருந்து புறப்பட்டு இரண்டொரு 'பொல' (சந்தை)களையும் பஜார்களையும் பார்த்துக் கொண்டு, இரத்தினபுரி வந்தடைந்துள்ள மூன்றும் நாள் இன்று; ஆனால் மூன்று நாட்களுக்குரிய குறைத்தபட்ச சம்பாதிப்பாவது கிடைக்காமல் போனதை நாட்கூலி ஆளாக இருந்தபோதும் என்னால் நன்குணர முடிந்தது. கொண்டுவந்த தொப்பி, நுளம்புவலை, பேபி ஸூட்களில் பெரும்பாலானவை இன்னும் பெட்டிகளுக்குள்ளேயே தஞ்சமடைந்திருந்தன. அதற்காகச் செலவுகளை எப்படிக் குறைத்துவிட முடியும்...? என் ரூலும், பிஸ்னஸ் கொஞ்சம் இறமாக இருந்தால் சாப்பாட்டின் தரமும் இயல்பாகவே சற்று உயர்வது வழக்கம்.

நான்தான் முதலில் கைகழுவும் படலத்தைத் தொடக்கி வைத்தேன். சுமாரான சாப்பாடுதான்:

'ரீகுடிக்கிறீங்களா தொரே' இப்படியான இடங்களில்தானே 'தொரை' அந்தஸ்து மிக இலகுவாக எவருக்கும் கிடைக்கும்.

'தேவில்ல.....மூனு போரே ஸ்ஸ் தாங்கொ'

ஸிகரட்டுக்களும் பில்லும் வந்து சேர்ந்தன. ஸிகரட் டொன்றை எடுத்துக் கொண்டு அதனைப் புகைக்க சுடரைத் தேடிக்கொண்டு முன்னே வந்தேன்.

'பதினலறுவதா?'

மூஸ்தபாவின் குரலைக் கேட்டு, ஸிகரட் பற்றவைத்த பேப்பர் துண்டை கீழே போட்டு காலால் கசக்கிக்கொண்டு கஸியரை நோக்கினேன். அவரது முகத்தில் வரவேற்பின்போதிருந்த சிரிப்பையோ மலர்ச்சியையோ அப்போது காண முடியவில்லை. காசு எடுக்கும் நேரமல்லவா?

'இவளவு வராதே...' துண்டில் தவறுதலாகக் குறிக்கப்பட்டிருக்குமென்ற எண்ணத்துடன் கஸியருக்கு அதனை நீட்டினான் மூஸ்தாபா.

'ட்ரிங்...ங்' சுவிச் அழுத்தத்துடன் 'இங்க எவளவு கணக்கு?'

'ஆ. பதினலறிபது' உள்ளே இருந்து எட்டிப் பார்த்துச் சொல்லிவிட்டு, அவன் தனது வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

மூஸ்தபாவின் முகம் சிவந்து போயிருந்தது; 'இந்த அநியாயத்தை யாரிடம் சொல்ல' என்றோ, என்னவோ, உண்மையில் அந்தச் சாப்பாட்டுக்கு ஆகக்கூடிய எனது மதிப்பீடும் கூட ஏழைம்பதுதான்.

பத்து ரூபாவும் ஐந்து ரூபாவுமாக இரண்டு நோட்டுக்களை நீட்டிய அவன் சில்லறையைப் பெற்று, சேப்பில் போட்டுக் கொண்டு சொன்னேன்.....

'சரி எங்கள நாட்டான் (இராமப்புறத்தவர்) களுக்கு கணக்கெடுத்துத்தானே இப்பிடிச் செஞ்சீங்க'

'.....'

எந்தப் பதிலும் வெளிவரவில்லை.

மூவரும் வெளியிறங்கினோம்.

'மச்சான் எனக்கிது நடக்கோணும்டா..... பசிவந்தா கெடச்செடத்தில ஏறித் தின்ணும்..... கண் நோக நோக போட் பாத்துப் பாத்து வர்ரத்துக்கு' ஜாபிரின் குத்தல் இது!

மூஸ்தபா மௌனமாக நடந்து கொண்டிருந்தான்.

நான் ஜாபிரின் நக்கலின் முனைப்பால் உந்தப்பட்டு, சாடையாகத் திரும்பி அக்கடையின் போட்டைப் பார்த்தேன்.

சின்னஞ்சிறு பலவர்ண அலங்கார பல்புகளால் அந்த போட் மினுமினுத்துக் கொண்டிருந்தது.

ஆங்கில எழுத்துக்களை ஒருவாறு எழுத்துக்கூட்டி வாசித்து முடித்தேன்.

'...நி.. ஹாரா ஹோட்டல்'

★

'ஏணி'

அன்று
நாங்களும் அவர்களும்
சமத்துவப் பாதையில்
சரசமுடன் பழகினோம்.
எங்களை
ஏணியாகப் பாவித்து
பல படிகள்
ஏறி ஏறி
உயர்ந்தவோர்
இடத்தில்
அவர்கள்.
இன்று—
தாம்
ஏறிவந்த
ஏணியை
எகிறித் தள்ளிவிட்டு
உல்லாசப் பறவைகளாய்
உயரப் பறக்கின்றார்.
சிறகொடிந்து
சிதைந்து கிடக்கும்
எங்களுக்காக
எம் இளைய தலைமுறைகள்
மீண்டும் உங்களை
சமத்துவப் பாதையில்
சரித்திடுவதற்கு
வீறு கொண்டு அம்புகளை
விற்களில் தொடுத்து விட்டார்

'மலரரசி'

எங்கள் கைகளின் அசைவில்

தேயிலை மலைச் சாரல்களில்
தென்னை தோட்டங்களில்
ஆலைகளில் வயல்களில்
அனைத்து மிடங்களில்
வெயிலில் பனியில்
வேலையில் எங்கள்
கைகளின் அசைவு
காணு விட்டால்
பாடை ஏறுமுங்கள்
பகட்டு வாழ்வு.

வேல் சண்முகராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்தின் தேசிய நலன்களுக்குக் கேடு செய்யும் நடவடிக்கை

விளதிமிர் சிமனேவ்

ஐந்தாண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட சோவியத் — எகிப்திய நட்புறவு, ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை கெய்ரோ ரத்துச் செய்து விட்டது. இந்த விரோதச் செயலின் விளைவுகளுக்கான எல்லாப் பொறுப்பையும், இதனை மேற்கொண்டவரே ஏற்க வேண்டும் என்று 'டாஸ்' செய்தி நிறுவனத்தின் விசேட அறிக்கை கூறுகிறது. எகிப்திய ஜனாதிபதி அன்வர் சாதாத்தின் பிரேரணையின் பேரில், இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய எகிப்திய தேசிய அசெம்பிளி தீர்மானித்த பின்னர், 'டாஸ்' நிறுவனத்தின் விசேட அறிக்கை திங்களன்று வெளியிடப் பெற்றது.

ஒப்பந்தத்தை ரத்துச் செய்வது குறித்து 14-இல் சாதாத் கொடுத்த விளக்கமானது. சோவியத் — எகிப்திய உறவுகளின் அண்மைக்கால வரலாற்றையும், 1971-இல் கையெழுத்தான இரு தரப்பு ஒப்பந்தத்தில் சட்ட பூர்வமான வடிவம் பெற்றுள்ள எகிப்தின் பாலான சோவியத் கொள்கையையும், மிகக் கொடிய முறையில் திரிக்கும் முயற்சியேயன்றி வேறல்ல. எகிப்தின் முன் முயற்சியின் பேரிலேயே இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. அப்பொழுது இஸ்ரேலுடன் ராணுவ மோதலில் ஈடுபட்டிருந்த எகிப்துக்கு ஒரு நம்பகமான ஆதரவு தேவைப்பட்டது.

1971 மே 28-இல் பேசுகையில், 'இந்த ஒப்பந்தமானது, ஆக்கிரமிப்பை எதிர்க்க வேண்டும் எமது உறுதியான, நிலை மாறுத நிர்மானத்தைப் பிரதானமாக வெளிப்படுத்துகிறது; ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கான நோக்கங்களுக்கு இது முற்றிலும் இசைந்ததாகும். ஆக்கிரமிப்புக்கு முடிவு கட்டப் பெற்ற பின்னர் நாம் அடைய விரும்பும் கோட்பாடுகளும், மதிப்புகளும், உரிமைகளும் இறுதியாக வெல்லும் வேளையில், சமாதான நிர்மானப் பணிகளுக்காக புதிய வாய்ப்புக்களை இந்த ஒப்பந்தம் திறந்து வைக்கிறது' என்று அன்வர் சாதாத் கூறினார். அந்த நாட்களில் அவர் குறிப்பிட்ட கோட்பாடுகளில் மிக முக்கியமானது, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமாகும்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு அவர் பாராட்டிய ஒப்பந்தத்தை இன்று 'வெறும் காகிதத்துண்டு' என்று அவர் கூறுவானேன்? ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது?

எகிப்தின் பாலான சோவியத் யூனியனின் கண்ணோட்டத்தில் எவ்வித அடிப்படை மாற்றத்திற்கான அறிகுறிகளையும் தாங்கள் காணவில்லை என்று நோக்கர்கள் அரபு உலகத்தைச் சேர்ந்தவர்கள் உள்பட — கருதுகின்றனர். ஒப்பந்தத்தின் 3 வது ஷரத்திற்கிணங்க, எகிப்தின் பாதுகாப்பு ஆற்றலைச் சோவியத் யூனியன் வலுப்படுத்தியது. 1973 அக்டோபர் போரில் எகிப்து ஓரளவு ராணுவ வெற்றி பெறுவதற்குத் தன்னால் இயன்றது அனைத்தையும் சோவியத் யூனியன் அளித்துள்ளது.

சோவியத் உதவியுடன் ஏற்கெனவே கட்டப்பெற்றுள்ள அல்லது கட்டப்பெறுகின்ற 148 தொழில் திட்ட நிலையங்களை எவரும் எகிப்தில் காணலாம்.

சோவியத் — எகிப்து உறவுகளை வளர்ப்பதற்குக் கோட்பாட்டு ரீதியான வழியைச் சோவியத் யூனியன் விசுவாசமாகப் பின்பற்றி வருகிறது என்பதை சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியில் 25-வது காங்கிரசில், பொதுச் செயலாளர் லியனித் பிரஷ்னேவ் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தினார்.

எனவே, சோவியத் — எகிப்திய ஒப்பந்தத்தின் வாசகத்தையும் அதில் பொதிந்துள்ள உணர்வுகளையும் மாஸ்கோ புறக்கணித்து விட்டது என்று எவரும் குற்றம் சாட்ட இயலாது. சோவியத் — எகிப்திய உறவுகளுக்குக் குழி பறிக்கும் வேலையில் கெய்ரோவிலுள்ள சில சக்திகள் ஈடுபட்டுள்ளன என்பதைச் சோவியத் தலைமை நன்கு அறிந்துள்ளது; எவ்வாறாயினும், கெய்ரோவின் ஒருதலைப் பட்சமான நிர்மானத்திற்கு இரு வாரங்களுக்கு முன்பு, எகிப்துடன் நீண்ட காலம் ஒத்துழைக்க விரும்புகிறோம் என்ற ஆர்வத்தைச் சோவியத் தலைமை மிகத் தெளிவாக உறுதிப்படுத்தியது.

உண்மை நிலவரம் இவ்வாறு இருக்க, சோவியத் — எகிப்திய ஒப்பந்தத்தை ஒருதலைப்பட்சமாக எகிப்திய அரசு ரத்துச் செய்வானேன்? இஸ்ரேலும் அதன் மேலைய புரவலர்களும் எகிப்து மீது அன்பைச் சொரியத் தொடங்கி விட்டார்களா?

இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்குப் பலியான நாடுகளுக்கு அவை இழந்துவிட்ட நிலங்களும், வீடுகளும், சமாதானமும் பந்தோபஸ்தும் வெள்ளித் தாம்பாளத்தில் திரும்பக் கிடைக்கப் போகின்றனவா? பாலஸ்தீனப் பிரச்சினைகள் சம்பந்தமாக எவ்விதப் பேச்சு வார்த்தைகளையும் நடத்த இஸ்ரேல் மறுப்பதும், இஸ்ரேலில் அமெரிக்க ஆயுதங்கள் மேன்மேலும் குவிக்கப்படுவதும் எதைக் காட்டுகின்றன? இத்தகைய எண்ணங்கள் யாவும் பகற்கனவு என்பதையே காட்டுகின்றன.

ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடுவதற்கு மிகச் சிறந்தது என்றும், எகிப்தின் 'திட உறுதி'யை வெளிப்படுத்துவது என்றும் புகழப்பட்ட ஒப்பந்தம், திடீரென்று இன்று மோசமாகக் கருதப்படுகிறது என்றால், நாம் ஒரு கேள்வி கேட்கலாமா? அந்த 'திட உறுதி'யில் இன்று என்ன கோளாறு ஏற்பட்டு விட்டது? சினாயிலிருந்து துருப்புக்களின் ஒரு பகுதியை வாபஸ் வாங்குவது பற்றிய பேச்சோ இஸ்ரேலிய — எகிப்திய ஒப்பந்தம் சம்பந்தமாக அரபு உலகில் வெளியிடப்பெற்றுள்ள கண்டனங்களில் இதே கருத்தை நாம் தெளிவாகக் காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிக்கப்பட்ட அரபு நிலங்களிலிருந்து இஸ்ரேலியப் படைகளை வாபஸ் வாங்க வேண்டும் என்ற கூரான பிரச்சினையானது, மேற்கண்ட ஒப்பந்தத்தால் மழுங்கிப் போய் விட்டது. இஸ்ரேலிய — எகிப்திய ஒப்பந்தமானது, அரபு ஒற்றுமையில் சில கீறல்களை உண்டாக்கியுள்ளது. இந்த நிகழ்ச்சியின் முழுப் பொருளைப் புரிந்து கொள்ள அரபுத் தலைவர்களால் இன்னும் முடியவில்லை. எகிப்தியர்களின் கட்டுப்பாட்டிலுள்ள சூயஸ் கால்வாயின் வழியாகத் தனது சரக்குகளைக் கப்பல்களில் ஏற்றிச் செல்ல இஸ்ரேல் ஏன் அனுமதிக்கப்படுகிறது என்று எங்களுக்குப் புரியவில்லை; அதே வேளையில் தான் கைப்பற்றிய அரபு நிலங்களை, சினாய் தீபகற்பத்தின் 90 சதவிகிதம் உள்பட, இஸ்ரேல் இன்னும் தன்வசம் வைத்திருக்கிறது' என்று அண்மையில் சிரியா ஜனாதிபதி அஸ்ஸாத் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளில் அரபு மக்களின் உறுதியான கூட்டாளியாக விளங்கும் சோவியத் யூனியன் பால் எகிப்து ஏன் விரோதம் பாராட்டுகிறது என்பதையும் முற்போக்கு உள்ளம் படைத்த அரபு மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. கெய்ரோவின் அரசியல், பொருளாதாரக் கண்ணோட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் முதற்தாய்ப்பாக அதன் சோவியத்—எதிர்ப்புக் கொள்கை விளங்குகிறது. எனவே, சோவியத்—எகிப்திய ஒப்பந்தத்தை எகிப்து ஒருதலைப் பட்சமாக ரத்துச் செய்துள்ளது.

இந்த ஒப்பந்தம் 15 ஆண்டுக்காலம் தொடர்ச்சியாக நீடிக்க வேண்டும் என்றும், இது சம்பந்தமாக எழுத்து மூலமாக

தூண்டில்

இட நெருக்கடி காரணமாகத் தூண்டில் இம்முறை இடம் பெறவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து இடம்பெறும். கேள்வி கேட்பவர்கள் மிக உற்சாகத்துடன் இப் பகுதியில் கலந்து கொள்கின்றனர். புதுமையானதும் சுவையானதுமான கேள்விகள் விரும்பப்படுகின்றன.

— ஆசிரியர்

முன்னறிவிப்புச் செய்ய வேண்டும் என்றும். இந்த ஒப்பந்தத்தின் 2-வது ஷரத்து கூறுகிறது. ஆனால் இந்த ஷரத்தை மீறி ஒப்பந்தத்தை ரத்துச் செய்ததன் மூலம், எகிப்தின் தேசிய நலன்களுக்கு எகிப்திய அரசு ஒரு பலமான அடி கொடுத்துள்ளது.

எனினும், இந்த விரோத நடவடிக்கையின் காரணமாக எகிப்தின் நலன்களின் பால் சோவியத் யூனியனின் இணக்கமும் அக்கறையும் குன்றிவிடவில்லை. எனவேதான் எகிப்துடனும் அதன் மக்களுடனும் நேய உறவுகளை வளர்த்தல் என்ற உறுதியான கொள்கையைச் சோவியத் யூனியன் கடைப்பிடித்துள்ளது. இனிமேலும் கடைப்பிடிக்கும் என்று 'டாஸ்' அறிக்கை ஆக்கபூர்வமான குரலில் பேசுகிறது.

★

★

தொலைபேசி : 444

★

சகல
ஆதரவாளர்களுக்கும்
நண்பர்களுக்கும்
எமது
தமிழ்ப் புத்தாண்டு
வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்ளுகிறோம். ★

★

★

★

★ சமூகத்தொண்டனும்
சமாதான நீதவானுமாகிய
திரு. K. V. கனகரத்தினம்
அவர்களின் ஞாபகார்த்தமாக

ஹரன் ஜுவல்லர்ஸ்

50, கன்னுதிட்டி, ○ யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mallikai APRIL 1976

Registered as a Newspaper in Sri Lanka

You Can Still Subscribe to SOVIET PERIODICALS

For 1976-77

		Yearly Rs.Cts	Two Yearly Rs. Cts
Soviet Union	(Monthly)	10.00	15.00
Soviet Woman	(Monthly)		11.00
Soviet Film	(Monthly)	10.00	15.00
Soviet Military Review	(Monthly)	16.00	30.00
Soviet Literature	(Monthly)	10.00	15.00
International Affairs	(Monthly)	10.00	15.00
Culture and Life	(Monthly)	10.00	15.00
New Times	(Weekly)	9.00	15.00
Moscow News	(Weekly)	10.00	15.00
Sport in the USSR	(Monthly)		9.00
Sputnik	(Monthly)	30.00	48.00
Foreign Trade	(Monthly)	36.00	50.00
Socialism, Theory and Practice	(Monthly)	10.00	15.00

A Beautiful Wall Calender Free for each Subscription.

PEOPLE'S PUBLISHING HOUSE,

124, Kumaran Ratnam Road,

COLOMBO - 2

Phone : **36111**

234 A, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும் ஆசிரியரும் வெளியிடுபவருமான பொபிலிக் ஜீவா அவர்களால் மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப் பாணம் ஸ்ரீலங்கா அச்சகத்திலும், அட்டை யாழ் மாநகர பதோக்கள் கூட்டுறவுச் சங்க கூட்டுறவு அச்சகத்திலும் அச்சிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org